
கல்கி
வைரவிழா ஆண்டு
KALKI 23.6.2002
ரூ. 6.00



மமதிக்கு 'மகா' ப்ரமோஷன்!



வணக்கம்!

கடந்த ஜூன் மாத இதழொன்றை என் கணவர் வாங்கி வந்தார். சினிமா புத்தகம் என்ற உடனே, "ஏங்க கண்ட கண்ட புத்தகத்தையெல்லாம் வாங்கி காசை கரியாக்குறீங்கன்னு" திட்டினேன்.

என் கணவரோ மிகப் பொறுமையாக.. இந்த புத்தகத்தை ஜஸ்ட் புரட்டிப் பாரேன் என்றார்.

ச்சீ! வேற வேலை இல்லை எனக்கு? பொம்பளைய கண்ட மாதிரி படம் போட்டு வச்சிருப்பாங்க! இதைப் போய் ஒரு பொம்பளை நானும் பார்க்கணுமாக்கும்? வரவர உங்களுக்கு விவஸ்தையே இல்லாம போச்சு! என எகிற,

ஏண்டி! என்னைக்காவது ஒரு தரமில்லாத புத்தகத்தை நான் வாங்கிட்டு வந்திருக்கேனா? சினிமா புக்குன்னா எல்லாம் அப்படியேதான் இருக்கணும்னு ஏதாவது இலக்கணமா? புரட்டிப்பார்த்துட்டு நல்லா இல்லைன்னா தூக்கியெறிபேன் என்றார்.

புரட்டிப் பார்த்தேன் .. புரட்டிப் புரட்டிப் படித்தேன், இப்போது பத்திரமாக வைத்திருக்கிறேன்! இந்த நல்ல புத்தகத்தைப்பற்றி எனக்கு என் கணவர் எடுத்துச் சொல்லிப் புரியவெச்சிட்டார், என்னைப் போன்ற பெண்களுக்கு யார் புரிய வைப்பார்கள் என்று தான் தெரியவில்லை!

என்போன்ற பெண்மணியினரும் விரும்பிப் படிக்கத்தகுதியான, நல்ல புத்தகம் கொண்டுவந்த உங்களுக்கும், அதை எனக்கு அறிமுகப்படுத்திய என் கணவருக்கும் இக்கடிதம் மூலம் நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

இப்படிக்கு

திருமதி. ஹேமா
சேரன்நகர், கோவை



அக்னிச் சிறகுகள் 50,000!

அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள அவரது அலுவலகத்தில், காலையில் பாதுகாப்பு அதிகாரிகள் மோப்ப நாயுடன் அங்குலம், அங்குலமாகப் பரிசோதிக்கிறார்கள். இந்தப் பரிசோதனை முடிந்து பாதுகாப்பு அதிகாரிகள் பச்சைக் கொடி காட்டிய பின்னரே அவர் வருகிறார். வெளியில் துப்பாக்கி ஏந்திய செக்யூரிடிகள். ஆனால் அவர் தம் பாட்டுக்கு எளிமையாகத்தான் வேலை பார்க்கிறார். விசிட்டர்களுடன் உரையாடுகிறார்.

அவர் தங்கியுள்ள பல்கலைக்கழக விருந்தினர் இல்லத்திலும் டைட் செக்யூரிடி!

கடந்த சில காலமாக அப்துல் கலாம் ஈடுபட்டிருக்கும் ஆராய்ச்சிகள் ஆழமானவை. அவற்றில் முக்கியமானது, ராணுவ ஆராய்ச்சியின் விளைவுகளை மக்களுக்கு எப்படியெல்லாம் பயன்படச் செய்யலாம் என்பது.

தவிர, மூளை ஆராய்ச்சி மையம் ஒன்றைத் தொடங்கி, மூளை வளர்ச்சி குறைபாடு கொண்ட குழந்தைகளின் செயல்பாட்டை மேம்படுத்த தகவல் தொழில் நுட்பம், கம்ப்யூட்டர் அறிவியல், பயோ டெக்னாலஜி, எலெக்டிரானிக்ஸ் போன்ற பல்வேறு துறைகளையும் ஒருங்கிணைந்து, செயல்படுத்துவது குறித்தும் ஆர்வம் காட்டி வந்தார்.

இந்திய பாரம்பரிய அறிவுக் கருவூலங்களை நவீன தொழில் நுட்பத்தின் உதவியுடன் மீட்டு, பாதுகாக்கும் திட்டத்திலும் பங்கு வகிக்கிறார். பழங்கால, ஓலைச் சுவடிகளை அழிவிலிருந்து மீட்டு, டிஜிடல் முறையில் பாதுகாத்து இன்டர்நெட் மூலமாக அவற்றை உலகறியச் செய்யும் பணியில் கலாமுக்கு அதீத ஆர்வம்.

குழந்தைகள் மீது பற்று கொண்டவரான கலாம் மற்றெந்த பொது நிகழ்ச்சிகளையும்விட, பள்ளிக்கூடங்களுக்கும் கல்லூரிகளுக்கும் சென்று மாணவ, மாணவிகள் மத்தியில் விஞ்ஞான விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதைத் தமது லட்சியமாகக் கொண்டிருக்கிறார். கடந்த ஆறு மாதங்களில் சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட கல்வி நிலையங்களுக்குச் சென்று அவர் உரையாற்றியிருப்பதே இதற்குச் சான்று.

கலாமின் கவிதைகளை வெளியிடப் போகிறது கண்ணதாசன் பதிப்பகம்.

அவரது சுயசரிதையான 'அக்னிச் சிறகுகள்' (தமிழ்) பதினோரு பதிப்பு வெளிவந்து விட்டது. விற்பனை ஐம்பதாயிரம் பிரதிகளை நெருங்கிக் கொண்டிருக்கிறது. தவிர மலையாளத்திலும், கன்னடத்திலும் இந்தியிலும் மொழி பெயர்க்கப் பட்டு வெளியாகியுள்ளது.

— எஸ். சந்திரமௌலி

கல்கி இண்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

நீங்கள் கேட்டவை — தராசு

● டிக்‌ஷனரி ப்ரியன், திருச்சி.

? *'காஷ்மீரில் தீவிரவாதிகள் ஊடுரு வலைக் கண்காணிக்க மூன்றாவது நாடு தேவை' என்ற யோசனையை நிராகரித்துவிட்டாரே பிரதமர். இது சரியான நிலைப்பாடா...?*

! இந்த நிலைப்பாடும் சரி, இந்திய வான எல்லைக்குள் (air space) பாக். விமானங்கள் பறக்கக் கூடாது என்று உத்தரவிட்டிருந்ததை ரத்து செய்த தும் சரியே! 'பாக்'குடன் ஒற்றுமை காண, வேற்றுமை மறக்க நாங்களே முற்படுவோம், அயல்நாட்டவர் தலையீடு தேவையில்லை என்று உணர்த்தும் நடவடிக்கை.

● அ. ராஜாரஹ்மான், கம்பம்.

? *பிரபல பின்னணி பாடகி ஜிக்கியின் மருத்துவ சிகிச்சைக்காக முதல்வர் ஒரு இலட்சம் ரூபாய் உதவியிருப்பது பாராட் டுக்குரியதுதானே?*

! எத்தனை ஆயிரம் பாடல்கள்...? அத்தனை யும் பனிக்குழை இளமை! சாதனைக் கலைஞர்களுக்குச் சோதனை வந்தால், அதற்கு யோசிக்காமல் செய்யும் உதவி பெரிய உறுதுணை. முதல்வருக்கு முன்பாக தெலுங்கு அகாடமி உதவியதையும் சேர்த்தே பாராட்டுவோம்.

● ஆர். கீதா, சென்னை - 92. ❒

? *செல்போன் மூலமாக ரேடியேஷன் பாதிப்பு அதிகரிப்பதால், சீனாவில் கொஞ் சம் கொஞ்சமாகத் தடை அமலுக்கு வருமாமே?*

! கொஞ்சம் கொஞ்சமாக என் பதை கவனிக்க! இப்போதுதான் நம் நாட்டில் செல்போன் கொஞ் சம் கொஞ்சமாக உபயோகத்துக்கு வருகிறது. பிளாஸ்டிக் போல் அதுவும் பெருகிவிடும் காலத்தில் நாமும் சீனாபோல் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் தடை செய்ய வேண்டும் என்பதை நினைவில் கொள்வது நல்லது.

● எஸ். அப்துல்லா அஹமது, நாகூர்.

? *சினிமா நடிகர்கள் அரசியலில் இறங்கு வது பற்றி...?*

! எப்படியும் நடிச்சுதான் பிழைப்பை ஓட் டணும் என்கிற நிலை வந்தாச்சு! சினிமாவா யிருந்தா என்ன அரசியலாயிருந்தா என்ன!

● ஆர். அப்துல் கலாம், திருச்சி — 21.

? *டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஸ்ரீநாத் ஓய்வுபெற முடிவு செய்திருப்பது பற்றி...?*

! தோள்பட்டை அறுவை சிகிச்சைக்குப் பிறகு பௌலிங்கில் அவருக்குச் சரிவுதான். இதைப் பிறர் பெரிதுபடுத்துவதற்கு முன் தாமே உணர்ந்து அவர் ஓய்வு பெறுவது கண்ணியமான செயல். கிரிக்கெட் சரித் திரத்தில் அவருக்கு நிரந்தர இடம் உண்டு. வேகப் பந்து வீச்சில் இளைஞர்களை ஊக்கு வித்து உருவாக்கினால், அது இதுவரை அவர் புரிந்த சாதனைகளுக்குச் சிகரமாக அமை யும்.

● சி.எம். குமார், மதுரை.

? *பண பலம் எதற்கு வேண்டும்; மன பலம் எதற்கு வேண்டும்?*

! முன்னது தேர்தலில் நிற்பதற்கு, பின்னது தேர்தலில் தோற்பதற்கு!

● இரா. சக்கரபாணி, மதுரை - 7.

? *தி.மு.கவை தேசிய முன்னணியில் தக்க வைத்துக் கொள்ளவும், கலைஞரைத் திருப்திப்படுத்தவும்தான் சைதையில் 58 வார்டுகளில் மறு தேர்தல் நடத்தியதாக ஜெயலலிதா கூறியுள்ளாரே?*

! அதே வாதப்படி, ஜெயலலிதாவைத் திருப்திப்படுத்துவதற்காகவே அனைத்து வார்டுகளிலும் மறு தேர்தல் நடத்தாமல் இருந்துவிட்டது தேர்தல் கமிஷன் என்றும் சொல்லலாமே! கருணாநிதியின் கோரிக் கையைத் தேர்தல் கமிஷன் ஏற்கவில் லையே!

● பி. ஜெயப்பிரகாஷ், பொள்ளாச்சி.

? *பிரேசில் ரிவோல்டா பாசாங்கு...?*

! ரசிகர்களிடம் அனுதாபத்தை ஏற்படுத்தவே


• டபுள் ஓ.கே!



• தொடரட்டும் வேகம்!



• தொடருமா சேவை...?



பண பலம் மண பலம் எதற்கு வேண்டும்?

❒ ரூ. 100/- பரிசு பெறுபவர்: ஆர். கீதா C/o கே.ராஜகோபாலன், 6/2, தாரா சந்த் நகர் அனெக்ஸ், பாலலோக் அருகே, விருகம்பாக்கம், சென்னை - 600 092



• அடைமழை!



• தேர்தலும்...



•...திருப்தியும்!



• அபராத ஹீரோ!



• இல்லாத தகுதி!

இந்த ஹீரோ நடித்தார் என்பது தெரிந்ததும் போடப்பட்ட அபராதம் அவருக்குப் பெரிய விஷயம் இல்லை; என்றாலும் இது அவப் பெயர்தான்!

● இரா. திலீப், திருச்சி - 14.

? ஆயிரம் குறைகள் கூறப்பட்டாலும் மூன்று தொகுதிகளை ஜெயிப்பது என்பது சாதனைதானே...?

! ஆஹா! முந்நூறு அதிகாரிகளை ஒரே நேரத்தில் பந்தாடியது அதைவிடப் பெரிய சாதனை!

● மஞ்சுதேவன், நவி மும்பை.

? மு.க. ஸ்டாலின்: மேயர் பதவியா? சட்டமன்ற உறுப்பினரா...?

! நீதிமன்றத்துக்குப் போவதானால் சரி... இல்லையேல், பேசாமல் அவர் மேயர் பதவியை ராஜினாமா செய்து, எம்.எல். ஏவாக நற்பணியாற்றுவதே நல்லது. முதல்வரே முடிவெடுக்கட்டும் என்று ராஜினாமா பண்ணாமல் இருந்தால், அவர் எம்.எல்.ஏ. பதவியைப் பறித்துவிட்டால் என்ன செய்வது...? பொம்மை மேயராக நீடிப்பது வேதனையல்லவா!

● ஆர். சுப்பாராவ், திருக்கோவலூர்.

? ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட சு.சுவாமி ஏன் முன்வரவில்லை...?

! அலெக்ஸாண்டர், கே.ஆர். நாராயணன், ஜோதிபாசு, கிருஷ்ணகாந்த், அப்துல் கலாம், போன்ற பெருந் தலைவர்களின் நற்பெயரைப் புழுதியில் புரட்டி எடுத்தது போல் அவரைச் சங்கடத்தில் ஆழ்த்த முடியாது. நற்பெயர் இருந்தால் தானே அந்த ஆபத்து!

● பொன்விழி, அன்னூர்.

? நடிகர் விக்ரம் காட்டில் மழையா?

! அடைமழை!

● ஆனந்தி வெங்கடேசன், விழுப்புரம்.

? உணர்ச்சிவசப்படுபவனே எழுத்தாளனாக முடியும் என்பது உண்மையா...?

! உணர்ச்சிவசப்படுவதென்பது எல்லா மனிதர்களுக்கும் ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் நிகழ்வதுதான். தன் உணர்ச்சிகளை மட்டுமின்றி பிறர் உணர்ச்சிகளையும் புரிந்து கொண்டு அவற்றைக் கட்டுக்கோப்பான மொழியில் வழங்கி பிறருக்கும் புரியவைப்பவன்தான் எழுத்தாளன்.

● எஸ். இளங்கோவன், திருவாண்டார் கோயில். ●


? 'விவசாய விளைச்சல் அதிகரித்தால் பணப் புழக்கம் அதிகரித்து, பொருளாதாரம் மேம்படும்' என்பது ஒரு சாரார் கூற்று. நெல், தென்னை போன்ற ஒரு சிலவற்றின் விளைச்சல் நன்றாக இருந்தும் தக்க விலை கிடைக்கவில்லையே...?

! விளைச்சல் கூடினால் விலை சரியும் என்பதுதான் பொருளாதார நியதி. அதற்காகத் தான் அரசே கொள்முதல் செய்து விவசாயிக்கு நியாய விலை கிடைக்கச் செய்கிறது. இத்துடன் நில்லாமல், விளை பொருட்களை ஏற்றுமதி செய்யவும், நீண்ட கால பயன்பாட்டுப் பொருளாக மாற்றவும் தொழிலதிபருக்கும் விவசாயிக்கும் அரசு பயிற்சி அளிக்க வேண்டும்.

● ரூ. 50/- பரிசு பெறுபவர்: எஸ். இளங்கோவன், C/o கேஷவ் கலர்ஜெம், பாண்டி - விழுப்புரம் பிரதான சாலை, திருவண்டார்கோயில், பாண்டிச்சேரி - 605 102.

பச்சைப்பசேல் புதரிலிருந்து பளிச் சென்று எட்டிப் பார்க்கும், பெயரிடப்படாத காட்டுப் பூ போல மலர்ச்சியான முகம்... முதல் வணக்கம் மமதி சாரிக்கு.

ஜேம்ஸ் வசந்தனோடு கூட்டணி அமைத்துக் கொண்டு கொஞ்சம் சிரிப்பு, நிறைய கேள்விகள் சகிதம், சிறப்பு விருந்தினர்களாக வந்து சிக்கிக் கொள்கிறவர்களை, கலப்படமில்லாத தமிழில் கலாய்த்துக் கொண்டிருக்கும் இந்த சாட்டிலைட் பனிப் பறவைக்கு இப்போது பதவி உயர்வு.



மமதிக்கு 'மகா' ப்ரமோஷன்!

எழுத்தாளர் இந்துமதி கதை, திரைக்கதை, வசனம் எழுதித் தயாரிக்கும் 'நீ, நான், அவள்' நெடுந்தொடரின் துருதுரு கதாநாயகி மமதி தான். "பிரபல நிகழ்ச்சித் தொகுப்பாளர் என்றால் நேயர்கள் நடுவே உயர்ந்த கிரீடம் உண்டு. தொலைக் காட்சித் தொடர் கதாநாயகி என்றால் அதற்கு ஆபத்தில்லையா?" என்று எடுத்ததுமே பயம் காட்டினோம்.

"இதே கேள்வியைத்தான் என் தோழிகளும் கேட்டாங்க. ஆனால் நான் ரொம்பத் தெளிவா இருக்கேன். தொடரைப் பொறுத்த வரைக்கும் அதில் என்னை மகா லட்சுமியாகத்தான் பார்ப்பீர்கள். நீங்கள் துருவித் துருவித் தேடினாலும் மமதி அதில் கிடைக்க மாட்டாள். மமதி வேண்டுமென்றால் 'முதல் வணக்கம்' தான் ஒரே சாய்ஸ். இந்த வேறுபாட்டைக் கொண்டு வர எனக்குப் போதிய நடிப்புத் திறன் இருக்கிறதென்று நம்புகிறேன்" என்கிறார் அழுத்தம் திருத்தமாக.

அப்படியானால் முதல் வணக்கத்திலும் நடிப்புத்தானா என்றால்... "அய்யய்யோ... நிஜவாழ்க்கையில் நீங்கள் பார்க்கிற அதே மமதிதான் முதல் வணக்கத்திலும். 2001 – 2002ஆம் ஆண்டின் சிறந்த தொலைக்காட்சி நிகழ்ச்சி என்ற விருது கிடைத்திருக்கிறது. ஜீன்ஸ் டீ ஷர்ட்டில் என்னைப் பார்க்கிற நேயர்கள் "நீங்கள்தானா அது?" என்று ஆச்சர்யமும் அதிர்ச்சியுமாக கேட்கிறார்கள். காரணம் புடைவை, சுடிதார் போன்றவை முதல் வணக்கத்திற்காக நான் அணியும் உடைகள். இப்படி வியக்கும் நேயர்களுக்குக் கலாசாரம் உடையில் மட்டும் பிரதிபலிக்கிற விஷயமில்லை; உள்ளத்திலிருந்தும்" என்று நின்று நிதானமாக விளக்கம் கொடுத்து விட்டுப் போவேன்" என்றார்.

தொலைக்காட்சி தொடருக்கு நாயகி ஆகிவிட்ட பின்பு சினிமாவிலும் நடிப்பாரா?

"நடிக்கக் கூடாதென்று கொள்கையெல்லாம் இடையாது. ஆனால் நான் ஏற்றுக் கொள்கிற பாத்திரம் மரியாதைக்குரியதாக,





மன நிறைவு தரக்கூடியதாக இருக்க வேண்டும்'' என்றவர், பல தொலைக்காட்சித் தொடர்களுக்குக் கதை, திரைக்கதை எழுதியதையும், இயக்குனர் கே. ராஜேஷ்வர் இயக்கிய 'தி ஸ்பிரிட்' ஆங்கிலப்படத்துக்கு இணை இயக்குனராகப் பணிபுரிந்ததையும் குறிப்பிட்டு, திரையுலகுடன் தமக்குப் பரிச்சய முண்டு என்பதைத் தெளிவு படுத்துகிறார்.

'கேர்ள்ஸ் கூல்' என்ற தமிழ் பாப் ஆல்பத்தை, பிரவீன் மணி இசையில் தயாரித்து வரும் மமதிக்கு இசை முகமும் உண்டு.

மமதிக்கு 'பை' சொல்லி புறப்படுமுன் எழுந்து, இரண்டடி எட்ட நின்று கேட்ட கேள்வி: ''உங்களுக்கும் ஜேம்ஸ் வசந்தனுக்கும் காதல்''...

''என்னய்யா இது! விஷுவல் மீடியாலே ஓர் ஆணும், பெண்ணும் சேர்ந்து ஒரு டீமாக வேலை செய்தால் இப்படி எழுதுவதா... நான் காதலிக்கிறது உண்மைதான்... ஆனால் ஜேம்ஸ் வசந்தனை அல்ல; அம்மா, அப்பா, என்னோட செல்ல நாய்க்குட்டி ஸ்னூபி மூணுபேரையும்தான். ஜேம்ஸ் நல்ல நண்பன்'' என்று சிரிக்கும் மமதி சாரியை இனி, 'நீ, நான், அவன்' மெகா தொடரில் துடிப்பான 'மகா'வாகச் சந்திக்கலாம்.

— ஜெயந்த்

படங்கள்: ராஜன்



• தோழிகளுடன் மமதி...

இனி பிள்ளை வரம் வேண்டி எங்கும் அலைய வேண்டாம்

ஹோமியோ - சித்தா - ஆயுர்வேத முக்கூட்டு மருத்துவத்தால் குழந்தை பெறலாம்!

குழந்தை இல்லாத தம்பதிகள் பிள்ளைவரம் வேண்டி இனி எங்கேயும் அலைய வேண்டாம். குழந்தை பெறாமைக்கு குறைபாடு கணவனிடம் இருந்தாலும் சரி, மனைவியிடம் இருந்தாலும் சரி, ஹோமியோ-சித்தா-ஆயுர்வேத முக்கூட்டு மருத்துவத்தின் மூலம் ஆண் மலட்டுத் தன்மையும், பெண் மலட்டுத் தன்மையும் அறவே நீக்கி குழந்தை பிறக்கச் செய்கிறார்கள் டாக்டர் **ஏ.அர்ஜுனா, டாக்டர் வி.ஏ.ஆண்டாள்.** இவர்கள் 'நவீன வைத்தியாலயா' என்ற பெயரில் ஆஸ்பத்திரி நடத்தி வருகிறார்கள். திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் பிராமணர் தெருவிலும், சென்னையில் வடபழனி 100 அடி சாலையிலும் வெற்றிகரமாக சிகிச்சை நிலையங்கள் நடத்தி வருகிறார்கள்.



• திருவண்ணாமலை மாவட்டத்தில் உயிரணு உற்பத்தி ஆகியும், கருக்குழாய் அடைப்பு நீங்கியும் குழந்தை பெற்ற ரங்கநாதன் - கீதா தம்பதியர்.
டாக்டர் A. அர்ஜுனா - டாக்டர் ஆண்டாள் அர்ஜுனாவுடன் உள்ளார்கள்.

குழந்தைப் பெற்றுக் கொள்ள சிகிச்சைக்கு வரும் தம்பதிகளை டாக்டர் **ஏ.அர்ஜுனா** முதலில் கணவனின் உயிரணு உற்பத்தியை விந்து பரிசோதனையின் மூலம் குறைபாடுகளைக் கண்டறிகிறார். பிறகு மனைவியின் குறைபாடுகளை சில பரிசோதனைகளின் மூலம் தெரிந்து கொண்டு ஆண் மலட்டுத் தன்மை, பெண் மலட்டுத்தன்மை நீங்கி குழந்தை பெற முக்கூட்டு மருத்துவ சிகிச்சையளிக்கிறார்.

"சென்னை கோடம்பாக்கத்தில் சம்பத் என்ற நபர் என்னிடம் சிகிச்சைக்கு வரும்போது அவரது விந்து பரிசோதனையில் டோட்டல் கவுண்ட் 70 மில்லியனும், மொட்டிலிட்டி 70%ம் இருந்தது. 2 மாத சிகிச்சைக்குப்பின் விந்து பரிசோதனையில் டோட்டல் கவுண்ட் 142 மில்லியனும், மொட்டிலிட்டி 80% உயர்ந்துள்ளது.

இது முக்கூட்டு மருத்துவத்தில் ஒரு சாதனையாகும்.

சென்னை புளியந்தோப்பைச் சேர்ந்த, அறவே உயிரணு இல்லாத ரவி எங்களிடம் சிகிச்சை பெற வந்து 2 மாத முக்கூட்டு மருந்தில், நல்ல முறையில் உயிரணு உற்பத்தியாகியுள்ளது.

கோவை பெரியநாயக்கன் பாளையத்தைச் சேர்ந்த லோகநாதனுக்கு அறவே உயிரணு இல்லை. அவருக்கு ஒரே மாத முக்கூட்டு மருந்தில் கவுண்ட் 110 மில்லியன், மொட்டிலிட்டி 20% உற்பத்தி ஆகியுள்ளது.

திருவாரூரைச் சேர்ந்த அறிவழகனுக்கு அறவே உயிரணு இல்லை. அவர் 7 மாதம் தொடர்ந்து முக்கூட்டு மருந்து சாப்பிட்டு உயிரணு உற்பத்தி ஆகியுள்ளது.

உயிரணு குறைவாக இருந்த கேரள மாநிலம் பாலக்காட்டைச் சேர்ந்த சேதுமாதவனுக்கு 16.6.2000ல் கவுண்ட் 20மில்லியன், மொட்டிலிட்டி 50% இருந்தது. 13.7.2001ல் கவுண்ட் 60மில்லியன், மொட்டிலிட்டு 50% என்று முன்னேற்றம் கண்டது.

மகாராஷ்டிர மாநிலம் நியூபாம்பே வாஷி பகுதியைச் சேர்ந்த ஜெயராமனுக்கு உயிரணு குறைவாக இருந்தது. 28.12.2000ல் இருந்த கவுண்ட் 45 மில்லியன், மொட்டிலிட்டி 50% ஒரே மாதத்திற்குள் 26.1.2001ல் கவுண்ட் 92மில்லியன், மொட்டிலிட்டி 30% என்று உயர்ந்தது.

சென்னையைச் சேர்ந்த, உயிரணு குறைவாக இருந்த ரகுவுக்கு 6.5.2000ல் கவுண்ட் 29 மில்லியன், 50% மொட்டிலிட்டி இருந்தது. எங்களது முக்கூட்டு மருந்துகள் மூலம் அவருக்கு 20.8.2000ல் கவுண்ட் 160 மில்லியன் உயர்ந்தது.

சென்னை வண்ணாரப்பேட்டையில் மனோகரன் என்பவருக்கு 6 மாத முக்கூட்டு சிகிச்சையில் உயிரணு உற்பத்தி ஆகியுள்ளது.

காஞ்சீபுரத்தில் கணேசன் என்பவருக்கு சில மாத சிகிச்சையில் உயிரணு உற்பத்தி ஆகியுள்ளது.

வேலூரில் சுப்ரமணியன் என்பவருக்கு உயிரணு நார்மல் ரிசல்ட் உண்டாகியிருக்கிறது.

ஆண் மலட்டுத் தன்மைக்கான காரணங்கள்:

ஆண்களுக்கு இளம் வயதிலேயே புட்டாளம்மை வந்திருந்தாலும், அம்மை வந்திருந்தாலும், மஞ்சள் காமாலை, டைபாய்டு ஜுரத்தால் பாதிக்கப்பட்டிருந்தாலும், விதைகளில் அடிபட்டிருந்தாலும், வெப்பம்

அதிகமுள்ள இடங்களில் வேலை செய்வதாலும், தன்னைவிட வயது முதிர்ந்த பெண்களிடம் தாம்பத்திய உறவு கொண்டாலும் அவர்களால் புத்திர பாக்கியம் அடைய முடியாத நிலை உள்ளது. அவர்களுக்கு முக்கூட்டு மருத்துவ சிகிச்சையால் உயிரணு உற்பத்தி செய்து புத்திரபாக்கியம் அடையச் செய்கிறோம்.

பெண் மலட்டுத் தன்மைக்கான காரணங்கள்:

பெண்களில் கருப்பை ஓவரி வளர்ச்சியே இல்லாமல் இருப்பவர்களுக்கு வளர்ச்சியடைச் செய்கிறோம். வீட்டு விலக்கு ஒழுங்கில்லாதவர்களுக்கு ஒழுங்குபடுத்துகிறோம். சிலருக்கு வீட்டு விலக்கின் போது வரும் சூதக வயிற்றுவலியால் கருத்தரிக்க வாய்ப்பில்லாமல் போகும். இந்தக் குறையை முக்கூட்டு மருந்துகளால் நீக்கி கருத்தரிக்கச் செய்கிறோம்.

சில பெண்களுக்கு கருமுட்டை உற்பத்தி இருக்காது. இத்தகையவர்களை ஸ்கேன் மூலம் பரிசோதிக்கச் செய்து, கருமுட்டை உற்பத்தி நிலையை அறிந்து கருமுட்டை உண்டாக்கி கருவுறச் செய்கிறோம். பெண்களிடமுள்ள பிரதான பெரிய பிரச்னை, கருக்குழாயில் சதை அடைப்பு ஏற்படுவது. அதை முக்கூட்டு மருந்துகளால் கரைத்து அடைப்பை நீக்கி கருத்தரிக்க செய்கிறோம்.

சென்னை புதுப்பேட்டையைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் தம்பதிகளுக்கு எங்கள் வைத்தியத்துக்குப் பின், இரட்டைக் குழந்தை பிறந்தது.

பெங்களூர் ஜெயநகரைச் சேர்ந்த வள்ளி - சேகர் தம்பதியருக்கு எங்கள் சிகிச்சை மூலம் அண்மையில் பெண் குழந்தை பிறந்துள்ளது.

சென்னை குரோம்பேட்டையைச் சேர்ந்த ராஜா – அலமேலு தம்பதியர் திருமணமாகி நான்கு வருடங்கள் குழந்தை இல்லாதிருந்து, அவர்களுக்கு முக்கூட்டு சிகிச்சையளித்ததில், திருமதி ராஜா வுக்கு கடந்த 6.3.2001 அன்று ஆண் குழந்தை பிறந்துள்ளது.

பெங்களூரில் வசிக்கும் ஒரு தம்பதியினருக்கு 20 ஆண்டு காலம் குழந்தை இல்லாமல் இருந்து முக்கூட்டு மருத்துவத்தின் மூலம் குழந்தை பிறந்துள்ளது. மதுரையைச் சேர்ந்த அரசாங்கத்தில் பணிபுரியும் ஒரு மாவட்ட அதிகாரிக்கு 23 ஆண்டு காலம் குழந்தை இல்லாதிருந்து எங்களிடம் சிகிச்சை பெற்ற அவரது மனைவிக்கு கடந்த 5.6.2000ல் பெண் குழந்தை பிறந்துள்ளது.

❍ சென்னை கிண்டியில் கோபால் – சித்ரா தம்பதிகளுக்கு பல ஆண்டுகள் குழந்தை இல்லாமல் இருந்து எங்கள் முக்கூட்டு சிகிச்சையினால் பெண் குழந்தை பிறந்துள்ளது.

❍ விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அவலூர் பேட்டையில் சந்திரமூர்த்தி தம்பதிகளுக்கு ஆண் மகன் பிறந்துள்ளது.

❍ சென்னை, வடபழனி, கங்கையம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த, எங்களிடம் சிகிச்சைப் பெற்ற ஒரு முஸ்லிம் பெண்மணி புத்திரபாக்கியம் அடைந்துள்ளார்.

❍ தஞ்சாவூர் புரசகுடியில் சௌந்தர்ராஜன் - வனரோஜா தம்பதிகளுக்கு ஒரு பையன் பிறந்துள்ளது. மீண்டும் வனரோஜா தற்போது கர்ப்பமாக உள்ளார்.

❍ பாண்டிச்சேரி கணபதிபட்டில் சாந்தி செல்வராஜ் தம்பதிகளுக்கு பெண்ணும், பையனும் பிறந்துள்ளார்கள். சென்னை அரும்பாக்கத்தைச் சேர்ந்த, உயிரணு உற்பத்தி ஆகியும், கருக்குழாய் அடைப்பு நீங்கியும் தற்போது 6மாத கர்ப்பவதியாக உள்ள திருமதி தமிழரசி - முருகன் தம்பதிகள்.

இப்படி எங்கள் சிகிச்சையில் பல ஊர்களில் மாதா, மாதம் குழந்தைகள் பிறந்து கொண்டிருக்கின்றன.

எங்கள் மருத்துவமனையில், தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலிருந்தும், இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலிருந்து வந்தும்; அயல்நாடுகளில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், கனடா, சுவிட்சர்லாந்து, நியூசிலாந்து, சவுதி அரேபியா, துபாய், குவைத், பக்ரைன், ரியாத், ஓமன், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஜெர்மனி போன்ற வெளி நாடுகளில் இருந்து வந்தும் சிகிச்சை பெற்று பயனடைந்து வருகிறார்கள்.

எங்களிடம் சிகிச்சை பெற்று கர்ப்பமடைந்தவர்கள் கர்ப்பமடைந்த பின் 6 மாதம் வரை ஆங்கில மருத்துவர்களிடம் சென்று ஆங்கில மருந்துகளைச் சாப்பிட்டால் கருச்சிதைவு ஏற்படவும் வாய்ப்புண்டு என்றார்'' டாக்டர் அர்ஜுனா. சுகப்பிரசவத்திற்கு மருந்து உண்டு என்கிறார் அவர்.

நீங்களும் குறைந்த செலவில் புத்திரபாக்கியம் அடைய டாக்டர் ஏ. அர்ஜுனா, அவரது மனைவி டாக்டர். வி.ஏ.ஆண்டாள் அவர்களை அணுகவும்.



• டாக்டர் அர்ஜுனா, டாக்டர் V.A. ஆண்டாள் அர்ஜுனா

நவீன வைத்தியாலயா ஹோமியோபதி - சித்தா - ஆயுர்வேத மலடு நீக்கும் ஆஸ்பத்திரி

சென்னையில் சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய தினங்களில் டாக்டரைச் சந்திக்குமிடம்: எண் 65 நெற்குன்றம் பாதை, (டிஎஸ். கவுரி சங்கர் கல்யாண மண்டபம் எதிரில்) 100 அடி ரிங் ரோடு, வடபழனி, சென்னை - 600 026. போன் : 4833464 எஸ்டிடி.044

செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் டாக்டரைச் சந்திக்குமிடம் -

வீடு : நெ. 30, பிராமணர் தெரு, ஈஸ்வரன் கோயில் அருகில், வந்தவாசி.

திருவண்ணாமலை மாவட்டம் - 604 408

போன்: 25208, 26180 எஸ்டிடி. 04183

ADVT

கடைசியில் சாட்டையைச் சொடுக்கி விட்டார் ஜெயலலிதா. ஒரே ஆணையில் 52 ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் பந்தாடப்பட்டுள்ளனர். இது தவிர டஜனுக்கும் மேற்பட்ட ஐ.பி.எஸ் அதிகாரிகளுக்குப் பதவி உயர்வும் இடமாற்றங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.



• வி.கே. ராஜகோபாலன்



• சங்கர்



• கலைவாணன்



• சுகவனேஸ்வர்



• திலகவதி

இந்த மாற்றங்கள் சில மாதங்களாகவே எதிர்பார்க்கப்பட்டவைதான். ஆண்டிப்பட்டியில் வென்று சர்வ பலத்துடன் கோட்டைக்கு மீண்டும் வந்த ஜெ, சட்டசபையில் பேசும்போது கிட்டத்தட்ட ஐந்து மாதம் (அதாவது பன்னீர் ஆண்ட காலம்) கோட்டையில் அதிகாரிகள் விடுமுறைக் காலத்தை அனுபவித்தது போல இருந்ததாகவும் ரிங் மாஸ்டரைப் போல இப்போது அவர்களைத் தான் வேலை வாங்குவதாகவும் தெரிவித்தார். இதனால் புண்பட்டுப் போன ஐ.ஏ.எஸ் சமூகம் சங்கத் தலைவர் ஆதிவேந்தன் தலைமையில் கூடி, தங்களது கண்டனத்தைத் தலைமைச் செயலாளரிடம் கூறியபோது அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. காரணம் சங்கரே பலவிதங்களில் பாதிக்கப்பட்டிருந்தார்.

ஜெயலலிதா விருப்பத்தின் பேரில் டெல்லியிலிருந்து அழைக்கப்பட்டு வந்தவர் சங்கர். ஆனால் ஒரு வருட காலத்திலேயே அவர் விரக்தியடையும் அளவுக்கு சம்பவங்கள் நடந்து விட்டன. முதலில், ஜெயலலிதாவுக்குச் செயலாளராக இருந்த கரியாலிக்கும் சங்கருக்கும் உரசல் இருந்துகொண்டே இருந்தது. ஒருவழியாக கரியாலி வெளியேற்றப்பட்டபின், முதல்வருக்கு இணைச் செயலாளராக இருக்கும் நடராஜனுக்கும் சங்கருக்கும் மோதல் துவங்கியது. பல சந்தர்ப்பங்களில் நடராஜன் தொலைபேசி மூலம் சங்கருக்கு 'ஆணைகள்' பிறப்பித்ததாகவும் "ஒரு இணைச் செயலாளர் அந்தஸ்தில் இருப்பவர் எனக்கு ஆணையிடுவதா?'' என்று சங்கர் வெகுண்டு எழுந்ததாகவும் சொல்கிறார்கள். சங்கர் அனுப்புவித்த சில முக்கியமான கோப்புகள் முதல்வரைச் சரியான சமயத்தில் சென்றடையாமல் பார்த்துக் கொள்ளப்பட்டதாம். இதுபோன்ற கசப்புகள் ஒன்றன் பின் ஒன்றாக வர, திடீரென விடுப்பில் சென்று விட்டார் சங்கர். அதன் பின் கோட்டை வாசம் இனி வேண்டாம் என்று விருப்ப ஓய்வுக்கும் எழுதிக் கொடுத்துவிட்டார். அவர் இல்லாத நிலையில் பொதுத்துறைச் செயலாளர் பிச்சாண்டி கையெழுத்திட்டு மாற்றல் ஆணை போடப்பட்டது. இன்னமும் தில்லியில் செல்வாக்கோடு இருக்கும் சங்கர், மத்தியில் முக்கியமான பொறுப்பைப் பெறக்கூடும்.

நான் ஆணை

நான்கைந்து மாதங்களில் கவர்னராகும் வாய்ப்பும் அவருக்கிருக்கிறது என்கிறார்கள். "நியாயமான மனிதர்; ஆனால் கொஞ்சம் முகடு. இப்போதைய தமிழக அரசியல் சூழல் அவருக்கு மூச்சுத் திணறலை ஏற்படுத்தியிருக்கக் கூடும்" என்கிறார் அவரை நீண்ட காலமாக அறிந்த கோட்டை அதிகாரி ஒருவர்.

சங்கருக்குப் பதிலாகப் போடப்பட்டிருக்கிறார் சுகவனேஸ்வர். கோட்டையில் யாரை விசாரித்தாலும் இவரைப் பற்றி மிக நல்லவிதமாகவே சொல்கிறார்கள். ''நேர்மையான அதிகாரி; நியாயத்துக்காகப் போராடுபவர்'' என்று சொல்லும் அவர்கள் அதே குரலில், "ஆனால் பல சோதனைகளைச் சந்திக்க நேரிடுமே" என்று சங்கடப்படுகிறார்கள். இவர் அறநிலையத்துறை ஆணையாளராக இருந்து செய்யப்பட்ட காரியத்தை மகிழ்ச்சி

- ஜெ.வின் மாற்றல் மேளா!



யிட்டால்...

யுடன் சொல்கிறார்கள் அந்தத் துறை ஊழியர்கள்.

பொதுவாகவே ஓர் அதிகாரி தான் எந்த விதமான வருத்தத்தில் இருந்தாலும் வெளிக்காட்டுவதில்லை. என்ன காரணத்துக்காக ஓர் அதிகாரி மாற்றப்படுகிறார் என்பதையும் அரசு சொல்வதில்லை. தன்னை மாற்றியது சரியல்ல என்று எந்த அதிகாரியாவது நீதிமன்றக் கதவைத் தட்டினால், அரசு அங்கு சொல்வது 'நிர்வாகக் காரணங்களுக்காக அவர் மாற்றப்பட்டார்' என்பதே! பெரும்பாலும் மாற்றல் விவகாரங்களில் நீதிமன்றம் தலையிடுவதில்லை. 'இந்த நிலையில் ஓர் அதிகாரி ஏன் மாற்றபட்டார்; முதல்வருக்கும் அவருக்கும் என்ன பிரச்னை, என்றெல்லாம் ஆராயும்போது வதந்திகளையும் ஊகங்களையும் மட்டுமே சந்திக்க நேர்கிறது.

மாநகராட்சி ஆணையாளராக கலைவாணன் நியமிக்கப்பட்டது ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம். அதிகாரிகள் வட்டாரத்தில், கலைவாணன் கொஞ்சம் பாப்புலரானவர்தான். சென்னை துறைமுக கழகத் துணைத் தலைவராக இருந்தவர் இவர். இவரது மகள் கிராமத்து இளைஞனைக் காதலிக்க, தமது அதிகார பலத்தைக் கொண்டு, அந்த இளைஞனை மிரட்டி அவனுக்கு மொட்டையடித்தார் என்ற குற்றச்சாட்டும் இவர் மீது உண்டு. வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்த குற்றச்சாட்டும் இவர் மீது சொல்லப்பட்டது என்று செய்தி அடிபடுகிறது. ஒரு சில வழக்குகளைச் சந்தித்து வருகிறார். இந்த நிலையில் மாநகராட்சி ஆணையாளராக போடப்பட்டிருக்கிறார். தேர்ந்தெடுக்கப்பட்ட மேயரை, மெஜாரிட்டி பலத்தின் மூலம் பதவியைப் பிடுங்கிய நிலையில், மாநகராட்சி இப்போது முழுவதும் ஆளுங்கட்சியின் கைக்கு வந்துவிட்டது. எனவே ஜாடிக்கேற்ற சரியான மூடியாய் கலைவாணன் செயல்படுவார் என்கிறார்கள்.

அ.தி.மு.க ஆட்சியில், நான்காவது முறையாக போக்குவரத்துச் செயலாளர் மாற்றப்பட்டிருக்கிறார். சமீபத்தில் டான்ஸி வழக்கில் விடுதலையான கற்பூர சுந்தரபாண்டியன் அந்தப் பதவியில் நியமிக்கப்பட்டிருக்கிறார். போக்குவரத்துத் துறையில் சில வழித்தடங்





''நீங்க ரேஸ்லே தோற்கற பணத்தையெல்லாம் சீட்டாட்டத்திலே ஜெயிச்சிடுவீங்களாமே.... எப்படி?''

''ரேஸ்லே யாரும் பார்க்காம குதிரையை மாத்த முடியாதே!''

- சத்யா முருகவேல்

களைத் தனியாரிடம் விட அரசு உத்தேசித்துள்ள நிலையில், முதல்வரின் நம்பிக்கைக்குரிய இவரது நியமனம் முக்கியத்துவம் பெறுகிறது. ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் சங்கத் தலைவரும், மூத்த அதிகாரியுமான ஆதிமூலம் முக்கியத்துவம் இல்லாத துறையான ஆவண காப்பகத்துக்குத் தூக்கியடிக்கப்பட்டிருக்கிறார். சென்ற ஜெயலலிதா ஆட்சியில் நிதித்துறைச் செயலாளராக இருந்த நாராயணன், தி.மு.க ஆட்சியில் கோட்டைக்கு வெளியே அனுப்பப்பட்டார். இப்போது மீண்டும் நிதித்துறைச் செயலாளராகக் கொண்டு வரப்பட்டுள்ளார். நிதித் துறைச் செயலாளராக இருந்த சந்தானம், தமிழக அரசை நிதிச் சிக்கலிலிருந்து விடுபட வைக்க இரவும், பகலும் பாடுபட்டும் அம்மாவிடம் பாஸ்மார்க் வாங்க முடியவில்லை.

மதுரை மாநகராட்சி ஆணையாளராக இருந்த ஹர்சகாய் மீனா மாற்றப்பட்டதைப் பற்றியும் சிலாகிக்கப்படுகிறது. அங்குள்ள தி.மு.க மேயர் ராமச்சந்திரனுடன் மீனாவுக்கு ஏழாம் பொருத்தமாகப் போய்விட்டது. தி.மு.க தலைமையின் மீது கோபத்தோடு இருக்கும் ராமச்சந்திரனை சந்தோஷப்படுத்தும் விதத்தில் மீனா மாற்றப்பட்டிருக்கிறார். இன்னும் கொஞ்சம் பலமான தூண்டிலைப் போட்டால் அதில் ராமச்சந்திரன் மாட்டிக் கொண்டு விடுவார். அதற்குள் தி.மு.க தலைமை நிலைமையைச் சரி செய்து கொள்ளுமா...? டான்ஸி வழக்கில் விடுதலையான சீனிவாசனுக்கும் சிப்காட் தலைவர் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

போலீஸ் அதிகாரிகள் மாற்றங்களில் குறிப்பாகப் பேசப்படுவது கண்காணிப்பு மற்றும் ஊழல் ஒழிப்புத் துறையின் இயக்குனராக திலகவதி நியமிக்கப்பட்டிருப்பது குறித்துதான். இந்தப் பொறுப்பில் இருந்த வி.கே. ராஜகோபாலன் விருப்ப ஓய்வில் போக விண்ணப்பம் கொடுத்து விட்டாராம். ''ராஜகோபாலன் ஏன் போகிறார்'' என்பது குறித்து பலவித ஊகங்கள். முதல்வருக்கு வேண்டிய முன்னாள் தலைமைச் செயலாளர் ஒருவர் மீது வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக வழக்கு இருக்கிறது. அந்த வழக்கில் சில முக்கியமான ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க இருந்தபோது முதல்வர் அலுவலகத்தில் இருக்கும் இணைச் செயலாளர் ஒருவர் தடுத்து நிறுத்தி விட்டாராம். இவர் இப்படி நிறுத்தியது முதல்வருக்கே தெரியாதாம். பின்னர் முதல்வருக்கு விவரம் தெரிந்தபோது மிகவும் வருத்தப்பட்டாராம். ஆனால், அந்த இடைப்பட்டக் காலத்தில் மனம் வெதும்பி விருப்ப ஓய்வுக்குத் தயாராகிவிட்டாராம் ராஜகோபாலன். இப்படி ஒரு தகவல் தவிர, இந்த முக்கியமான பொறுப்பில் இருந்துகொண்டு ஆளுங்கட்சியின் அழுத்தம் காரணமாக, தி.மு.க புள்ளிகள் மீது நடவடிக்கை எடுக்க நேரும் நிலையில், நாளை அரசியல் சூழல் மாறும்போது பல நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடுமே'' என்று தான் விலகிவிட்டதாகச் சொல்கிறார்கள்.

போலீஸ் துறை மாற்றங்களில் இப்போது தேவாரத்தின் கையும் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

அ.இ.அதிமுக ஆட்சிக்கு வந்த இந்த ஒரு வருட காலத்தில் அதிகாரிகள் பாதுகாப்பற்றச் சூழலில் இருப்பதாகவே உணர்கிறார்கள். ஒரு புறம் அனுபவம் இல்லாத அமைச்சர்கள்; மறு புறம் துறை நிர்வாகத்தில் குறுக்கிடும் முதல்வர் அலுவலக அதிகாரிகள். அதுவும் சமீப காலமாக ''முதல்வரின் இணைச் செயலாளர் நடராஜன் 'டிஃபாக்டோ' முதல்வராகவே செயல்படுகிறார்'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறார்கள் கோட்டை அதிகாரிகள். முதல்வர் விருப்பப்பட்டு கொண்டு வந்த ராமகிருஷ்ணன், கரியாலி போன்ற அவரது அலுவலக அதிகாரிகள், வெளியே அனுப்பப்பட்டு விட்டனர்.

தமக்கு வேண்டிய, இணக்கமாக உள்ள அதிகாரிகளை முக்கியமான துறைகளில் போட்டு நிர்வாகத்தை நடத்த முதல்வருக்கு முழு உரிமை இருக்கிறது. ஆனால் ஒட்டுமொத்த அதிகாரவர்க்கத்தின் ஆதரவு இல்லாவிடில் நிர்வாகக் கப்பல் சூறாவளிகளைச் சந்திக்க நேரிடும் என்பது அவருக்குத் தெரியாததல்ல.

- கௌசி



அரிசிக் கூப்பன் அமர்க்களம்!

ரேஷன் அரிசி! தமிழக அரசியலை ஆட்டிப் படைத்து வரும் ஒரு சங்கதி.

1960களில் ஏற்பட்ட அரிசிப் பஞ்சம் தமிழகத்தில் திராவிடக் கட்சிகளின் ஆட்சிக்கு அடிகோலியது. எம்.ஜி.ஆர் ஆட்சியில் பெருமைக்குரிய விஷயமாகச் சொல்லப்பட்டது, அரிசிக்குப் பஞ்சம் இல்லாமலும், ரேஷன் அரிசி விலை ஏறாமலும் பார்த்துக் கொண்டார் என்பது தான்.

தி.மு.க ஆட்சியில், அரிசி விலையை நாலணா, எட்டணா ஏற்றியதற்கே ஏகப்பட்ட எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியதாகிவிட்டது. தி.மு.க அரசு 1400 கோடி மதிப்புள்ள புழுத்த அரிசியை கொடவுன்களில் வைத்து விட்டுப் போய்விட்டது என்றார் ஜெயலலிதா.

கடந்த பட்ஜெட் தொடரில், போலி ரேஷன் கார்டுகளை ஒழிக்க கூப்பன் முறையை அறிமுகப்படுத்தப் போவதாக அறிவித்தது அரசு. அதன்படி ஜூன் மாத துவக்கத்தில் கூப்பன்கள் வழங்கத் துவங்கினார்கள். கார்டுகளை எடுத்துக்கொண்டு கூப்பன் வாங்கச் சென்ற தாய்க்குலங்களுக்கு 'நோ' சொல்லிவிட்டார்கள் அதிகாரிகள். 'கார்டில் புகைப்படமாக இருக்கும் குடும்பத் தலைவரே வந்தால்தான் ஒரு வருடத்துக்குரிய கூப்பன் கொடுக்கப்படும்' என்று திட்டவட்டமாக அறிவித்தது அரசு. தாய்க்குலம் கொந்தளித்தபோது கூப்பன் வாங்குவதற்குக் குடும்பத் தலைவர் வந்தாக வேண்டும் என்று அழுத்திச் சொன்னது அரசு.

இந்த விவகாரத்தில் இவ்வளவு கெடுபிடியாக அரசு இருப்பதற்கு என்ன காரணம்?

''பாஸ்போர்ட் மற்றும் இருப்பிடச் சான்று பெறுவதற்காகக்கூட வசதி படைத்தவர்கள் ரேஷன் கார்டுகள் வைத்திருக்கிறார்கள். அவர்கள் வீட்டு வேலைக்காரர்களுக்கு, கார்டை கொடுத்து அரிசி வாங்கிக் கொள்ளச் சொல்கிறார்கள். ஆனால் கூப்பன்களைக் குடும்பத் தலைவரே நேரடியாக வந்து வாங்கிச் செல்ல வேண்டும் என்றால் வசதி படைத்தவர்கள் வர மாட்டார்கள். உண்மையாகவே அரிசி தேவைப்படுபவர்கள் மட்டுமே கூப்பன் வாங்க வருவார்கள்'' என்று சட்டமன்றத்தில் சொன்னார் ஜெயலலிதா.

''ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் இந்தக் கூப்பன் முறை அமுலில் இருக்கிறது. போலி கார்டுகளை ஒழிக்கவே இந்த முறையை தமிழகத்திலும் கொண்டு வருகிறோம்'' என்றார் பொன்னையன்.

தமிழகத்தில் இப்போது மொத்தம் இருக்கும் ரேஷன் கார்டுகள் ஒரு கோடியே அறுபது லட்சம். இதில் பாதிக்கு மேற்பட்டவை, போலி முகவரிகளில் பதிவு செய்யப்பட்டிருக்கும் ரேஷன் கார்டுகள் என்கிறார்கள் அதிகாரிகள். ஒரு கிலோ ரேஷன் அரிசியின் விலை மூன்று ரூபாய் ஐம்பது காசு. ஒரு நபருக்கு ஐந்து கிலோ என்ற கணக்கின் அடிப்படையில் குடும்பத்துக்கு அரிசி வழங்கப்படுகிறது. நபர்கள் எத்தனை பேர் இருந்தாலும் அதிகபட்சம் ஒரு குடும்பத்துக்கு இருபது கிலோதான் வழங்கப்படுகிறது. வருமான வரம்பை அடிப்படையாக வைத்து, கார்டுக்கு அரிசி பெறும் தகுதி கொடுக்கப்படுகிறது. ஆனால் பெரும்பாலானவர்கள் பொய்யான வருமானத்தைச் சொல்லி, அரிசி கார்டு வாங்கி விடுகிறார்கள். அரசு ஊழியர்கள் போன்றோர் மட்டுமே, பொய் சொல்ல முடியாமல், உண்மையைச் சொல்லி அரிசி பெறும் வாய்ப்பை இழக்கிறார்கள். மாதத்துக்கு சுமார் மூன்று இலட்சம் டன் அரிசி பொது விநியோகத் திட்டத்தில் விற்கப்படுகிறது.

போலி கார்டுகளைக் கண்டுபிடித்து



''மாப்பிள்ளைப் பையன் பிரபல மர்மக் கதை எழுத்தாளர்ங்க!''

''அதுக்காக நாய்கள் குரைக்கும் அமாவாசை நள்ளிரவு பன்னிரண்டு மணிக்குத்தான் என் மகளைப் பெண் பார்க்க வருவார்ங்கிறதா?''

- உ. ராஜாஜி

பொது விநியோகத் திட்டத்துக்கு வழங்கப்படும் அரிசியின் அளவைக் குறைக்க வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டிருப்பதுதான் கூப்பன் முறையில் கெடுபிடியோடு இருப்பதற்குக் காரணமாகச் சொல்லப்படுகிறது. இது தவிர கூப்பன் முறை மூலம் ரேஷன் கடைகளில் நடத்தப்பட்டு வந்த கோல்மாலும் முடிவுக்கு வந்து விடும் என்கிறார்கள் அதிகாரிகள். மாதா மாதம் அரிசி வாங்காத கார்டுகளை அடையாளம் கண்டு அந்தக் கார்டுகளுக்கு பில் போட்டு, மலிவு விலையில் உள்ள அரிசியைப் பெற்று, அரிசிக் கடைகளுக்குக் கொஞ்சம் அதிக விலைக்கு விற்றுக் கொள்ளையடித்து வந்தார்கள் ஊழியர்கள். ''ரேஷன் கடையில் வேலை செய்பவருக்குச் சம்பளம் குறைவு. ஆனால் அதுபற்றி மூணு முணுக்கும் ஊழியர்கள் வேறு வேலைக்கு முயற்சி செய்வதில்லை. காரணம், இது போன்று கொள்ளையடிக்க வழி இருப்பதுதான். அரிசி என்றில்லை. சர்க்கரை, மண்ணெண்ணெய் ஆகிய பொருட்களிலும் இதே ஆட்டத்தை ஆடுவார்கள். எனவே இந்த கூப்பன் முறை கொண்டு வந்தது நல்லதே'' என்கிறார் தி.நகர் சரவணன். ஒரு கடையின் அரிசி தேவை மாதத்திற்கு 2000 டன் என்றால், ஒவ்வொரு மாதமும் கிட்டத்தட்ட 1900 டன் வரை விற்றதாக கடையில் கணக்கு காட்டப்படுகிறது. இனி இந்த அளவு கண்டிப்பாக குறைந்து விடுமாம்.

பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அரிசியின் அளவு குறையக் குறைய, அரசு வழங்கும் மான்யத் தொகையும் குறையும். அரசு கொள்முதல் செய்யும் போது விவசாயிகளுக்கு வழங்கும் விலைக்கும் ரேஷன் அரிசி விற்கப்படும் விலைக்கும் உள்ள வித்தியாசத்தை அரசு மான்யமாக நுகர்பொருள் வாணிபக் கழகத்துக்குக் கொடுக்கிறது. இந்த வகையில் அரசுக்கு வருடத்துக்கு ஐந்நூறு கோடிக்கும் அதிகமாகச் செலவாகிறதாம். எனவே இந்தத் தொகையைக் குறைக்க வேண்டுமென்றால் பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அரிசியின் அளவைக் குறைக்க வேண்டும். அதையும் கருத்தில் கொண்டுதான் இந்த கூப்பன் முறை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது'' என்கிறார்கள் சிவில் சப்ளை அதிகாரிகள்.

''ரேஷன் கடையில் நடக்கும் ஊழல்களைக் களையவும், மான்யத்துக்கு ஒதுக்கப்படும் நிதியைக் குறைக்கவும் இது போன்ற நடவடிக்கைகளை அரசு எடுக்கட்டும். ஆட்சேபணை இல்லை. ஆனால் குடும்பத் தலைவர்தான் கூப்பன் வாங்க வேண்டும்; அவருக்குத்தான் அரிசி கொடுப்போம்'' என்று சொல்வதெல்லாம் நடைமுறைக்கு ஒத்து வராதவை'' என்றார் கூப்பனுக்காக வரிசையில் நின்றிருந்த தங்கவேலு.


கடும் எதிர்ப்பு காரணமாக மாதா மாதம், அரிசி வாங்கவும் குடும்பத் தலைவரே கூப்பனுடன் வர வேண்டும் என்ற உத்தரவைச் சற்று தளர்த்தியிருக்கிறது தமிழக அரசு. குடும்பத்தில் உள்ள பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒருவரை அரிசி வாங்க, ரேஷன் கடை அலுவலரின் அனுமதியோடு நியமித்துக் கொள்ளலாம். ஜூலை மாதத்திலிருந்து கூப்பன்களுக்கு மட்டும்தான் அரிசி வழங்கப்படும். குடும்பத் தலைவருக்கு மாதா மாதம் பை தூக்கும் வேலை காத்திருக்கிறது.

''இதற்கிடையில் வறுமைக் கோட்டுக்குக் கீழே, மற்றும் மேலே என்ற இருவித ரேஷன் கார்டுகள் மட்டுமே இனி வழங்கப்பட இருக்கிறதாம். வறுமைக் கோட்டுக்கு மேலே இருப்பவர்களுக்கு அரிசி, கெரஸின் கிடையாது.

''குடும்பத்தலைவர்தான் கூப்பன் வாங்க வேண்டும்; அவர்தான் மாதா மாதம் அரிசி வாங்க வேண்டும் என்று சொல்வதெல்லாம் முதல்வரின் பெண்ணாதிக்க மனப்பான்மையை வெளிப்படுத்துகிறதோ'' என்று சந்தேகிக்கிறோம்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னார் வடபழனி சங்கர். ஜோக்...?

- ஸ்ரீநிவாசன்

படம்: ராஜன்





2002 ஜூன் 23
சித்ரபானு ஆனி 9
மலர் : 60
இதழ் : 47

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



பாக். பயங்கரவாதம் : பிட்டு வைக்கும் பிரிட்டன்; அடக்கி வாசிக்கும் அமெரிக்கா!

லஷ்கர்-இ-தொய்பா, ஜெய்ஷ்-இ-மொஹமது, ஹர்கத் உல் முஜாஹிதீன் - இவை தடை செய்யப்பட்ட அமைப்புகள் என்பதை நாம் அறிவோம். பிரிட்டிஷ் அரசுகூட இவ்வமைப்புகளைத் தடைசெய்திருக்கிறது. ஆனால், இவ்வமைப்புகள் அனைத்தும் பாகிஸ்தானின் ஆதரவுடனும் ஆசியுடனும் நமது எல்லைப் பகுதிகளில் ஊடுருவி பயங்கரவாதத்தில் ஈடுபட்டு வருகின்றன.

பலமுறை இந்தியா எடுத்துச் சொன்ன இந்த விஷயத்தையே தற்போது பிரிட்டிஷ் அயலுறவுத் துறைச் செயலர் ஜாக் ஸ்ட்ரா கூறியிருக்கிறார். பிரிட்டிஷ் நாடாளு மன்றத்திலேயே அவர் இதைப் பேசியிருக்கிறார்.

பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.தான் எல்லைப் பகுதி பயங்கரவாதத்தைத் தூண்டி விடுகிறது ; பயங்கரவாத அமைப்புகளுக்கு ஆதரவும் பாதுகாப்பும் வழங்குகிறது என்பதை உடைத்துச் சொல்லியிருக்கிறார் ஸ்ட்ரா.



இதுநாள் வரை இந்தியா கூறி வந்ததும் இதுவே. காஷ்மீர் பகுதி பயங்கரவாதத்துக்கு ஐ.எஸ்.ஐ. தூண்டுதலே காரணம் என்ற நமது குற்றச்சாட்டை, பாகிஸ்தான் அடியோடு மறுத்து வந்தது. இப்போது சர்வதேச அளவில் கவனம் கவரக்கூடிய ஒரு முக்கிய நபர், இந்த உண்மையை உலகறியப் பேசியிருக்கிறார்.


ஆனால், அமெரிக்க தரப்பிலிருந்து இவ் விஷயம் குறித்து ஒரு சிறு அதிர்ச்சிகூட தெரிவிக்கப்படவில்லை.

இந்தியா - பாகிஸ்தானிடையே நிலவுகிற டென்ஷனைக் குறைப்பதற்கென்று அமெரிக்க பாதுகாப்புச் செயலர் டோனல்ட் ரம்ஸ்ஃபீல்டை அனுப்பியிருக்கிறது அந்நாட்டு அரசு!

இந்தியா வந்த ரம்ஸ்ஃபீல்ட், போர் ஆயத்தங்களை ரத்து செய்யுமாறு நமது பாதுகாப்பு அமைச்சருக்கு அறிவுரை கூறி, பிரதமரையும் கேட்டுக் கொண்டிருக்கிறாரே யொழிய பயங்கரவாதத்துக்கு ஊக்கமும் உதவியும் தரும் பாகிஸ்தானை அது குறித்து தட்டிக் கேட்கவேயில்லை.

"எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு பகுதியில் அல்கொய்தா தீவிரவாதிகள் இயங்கி வரக்கூடும் என்பதற்கான அறிகுறிகள் தெரிகின்றன" என்று மழுப்பலாகத்தான் சொல்கிறார் ரம்ஸ்ஃபீல்ட்!

இந்தியாவின் எல்லைப் பிரச்னைகளுக்கு, பாகிஸ்தான் ஆதரவுடன் தழைக்கும் பயங்கரவாதம்தான் காரணம் என்பது ஊரறிந்த ரகசியமே! எனினும் அந்த உண்மையை அமெரிக்கா வெளிப்படையாக ஏற்று, பாகிஸ்தானை உலகறிய கண்டனம் செய்யாத வரையில் எல்லைப் பகுதியில் நிலவும் அச்சுறுத்தல் குறையாது. அமெரிக்காவின் மௌனமும் உண்மைகளைச் சந்தித்து ஏற்க மறுக்கும் போக்கும் பாகிஸ்தானின் கரங்களை நேரடியாக பலப்படுத்தும்; பாக். ஆதரவுடன் இயங்கும் பயங்கரவாதிகளின் கரங்களை மறைமுகமாக பலப்படுத்தும். அதன் விளைவாக, அமெரிக்காவுக்கேகூட



அபாயம் விளையும். அமெரிக்க தலைநகரை நாசமாக்கும் ஒரு சதித் திட்டத்தில் பங்கேற்ற அப்துல்லா அல் முஜாஹிர் என்பவர் சிகாகோவில் சமீபத்தில் கைது செய்யப்பட்டிருக்கிறார். அல் கொய்தா அமைப்பினால் ஆஃப்கானிஸ்தானிலும் பாகிஸ்தானிலும் பயிற்சி வழங்கப் பெற்றவர் முஜாஹிர்; ரகசிய, நச்சு அணுகுண்டு ஒன்றை வெடிக்கச் செய்து, வாஷிங்டனைத் தரை மட்டமாக்கும் திட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்.

அல் முஜாஹிரைக் கைது செய்து சிறையில் வைத்த பிறகும் அமெரிக்கா இஸ்லாமிய பயங்கரவாதத்தின் கொடூரம் என்ன என்பதை உணராதது போல் பேசிக் கொண்டிருக்கிறது.

முஷரஃப்போ, தெற்காசியாவே அணு ஆயுதமற்றப் பிரதேசமாக மாற வேண்டும் என்று வாய்ச்சொல் வீரம் பேசிக் கொண்டிருக்கிறார்!

இந்தோ - பாக் யுத்தம் வந்துவிடக் கூடாது என்று அமெரிக்காவும் உலக நாடுகளும் அக்கறை காட்டுவது நியாயமே. யுத்தத்தை இந்தியாவும் விரும்பவில்லை.

ஆனால், அமைதிக்கு இந்தியா மட்டும் அடியெடுத்து வைத்தால் போதாது. பயங்கரவாத அமைப்புகளுக்கு ஆதரவும் பயிற்சியும் தந்து ஊக்குவிப்பதை பாகிஸ்தான் உடனடியாக நிறுத்த வேண்டும். அவ்வாறு நிறுத்தும்படி அமெரிக்காவும் வலியுறுத்த வேண்டும்; அவசியமானால் பொருளாதாரத் தடை போன்ற நிபந்தனைகளை விதித்தும் வற்புறுத்த வேண்டும்.

தவறினால், தெற்காசியாவின் அமைதி மட்டுமின்றி அமெரிக்காவின் அமைதியும் கேள்விக் குறியாகவே இருக்கும்.

பின் லாடனை வேட்டையாட ஆஃப்கானிஸ்தான் மீது அமெரிக்கா போர் தொடுத்தபோது, விமானத் தளம் அமைக்க பாகிஸ்தான் இடமளித்து அமெரிக்காவுக்கு உதவியது. அந்த நன்றியைப் பாராட்டி இன்னமும் பாகிஸ்தானிடம் அடக்கிப் பேச வேண்டியது அவசியம் என்று அமெரிக்கா கருதினால், அதைக் காட்டிலும் அசட்டுத்தனம் வேறு இல்லை! ○



வெங்கடாசலபதிக்கு போயிங் காணிக்கை!

மதுரை ரயில்வே ஜங்ஷன் நுழைவாயிலில் உள்ள மூன்று கயல்களை வடிவமைத்தவர் சுவாமிமலை தேவ சேனாபதி ஸ்தபதி. பதினோரு அடி நீளமுள்ள இந்தக் கயல்களின் எடை ஐந்நூறு கிலோ.

திருப்பதி பெருமாள் உண்டியலில் காணிக்கையாகப் போடப்பட்ட விமானம் இது. இதைச் செய்தவர் சுவாமிமலை தியாகராஜன் ஸ்தபதி. சுத்த வெள்ளியால் செய்யப்பட்ட இதன் எடை ஒன்னேமுக்கால் கிலோ.

- பிரசன்னா குமார், குடந்தை

மைசூர் நஞ்சன்கூடு அருள்மிகு கண்டேஸ்வரருக்குப் படைக்கும் நைவேத்தியத்தில் சிறப்பானது சுகண்டித சர்க்கரை. சர்க்கரை, சுக்கு, வெண்ணெய் மூன்றையும் கலந்து படைக்கிறார்கள். சிவபெருமான் உண்ட நஞ்சு கண்டத்திலேயே நின்றுவிட, அதை ஜீரணிக்கவே இப்படிப் படைக்கிறார்கள்.

- நெ. இராமன், சென்னை



சேவல், 'கொக்கரக்கோ' என்று கூவுகிறது. 'கொக்கரக்கோ' என்றால் 'முருகன்' என்று பொருள். எனவே 'கொக்கரக்கோ' என சேவல் கூவும்போது கன்னத்தில் போட்டுக் கொள்ள வேண்டும். வாயில் போட்டுக் கொள்ளக் கூடாது!

சொன்னவர் : கிருபானந்தவாரியார்

- விருதை ராஜா

வாழ்க்கையில் நாம் எதைச் சந்திக்கிறோம் என்பதை மாற்ற முடியாது - அதுவே பிராப்தம். வாழ்க்கையில் நாம் எப்படிச் சந்திக்கிறோம் என்பது நம் கையில்தான் இருக்கிறது. அதுவே புருஷார்த்தம்.

- சுவாமி சின்மயானந்தர்

- சிவகலாதரன், சிதம்பரம்

இன்று செயல்படுங்கள். இன்று சேமியுங்கள். இன்று நல்லது செய்யுங்கள். நாளை நன்கு ஓய்வு எடுக்கலாம்.

- இங்கிலாந்து பழமொழி

- யுனோத்குமார், பழம்பேட்டை



குச்சி பல்பம் போல ஒடிந்து விழக்கூடிய மெல்லிய உடல், குங்குமப்பூ நிறம் என்ற ஸ்டான்டட் பாலிவுட் நடிகைகளிலிருந்து மாறுபட்டு, மாநிறம், நல்ல வளர்த்தி என்று வித்தியாசமான அழகோடு திகழ்வதாலோ என்னவோ, மளமளவென்று மார்க்கெட் பிடித்துவிட்டார் பிபாஷாபஸு.

'ராஜ்', 'அஜ்னபி' போன்ற படங்களில் கிடைத்ததென்னவோ சிறிய வேஷம்தான். ஆனால் அந்தப் படங்கள் சூப்பர் டூப்பர் ஹிட் ஆனதில், அம்மணியின் கால்ஷீட் 2005 வரை ஃபுல்!

டினோ, மிலிந்த் சோமன், அக்ஷய் குமார், பாபி தியோல் என இவருடன் கிசுகிசுக்கப் படாத நட்சத்திரங்களே இல்லை.

சரி, இவருக்கு என்ன என்கிறீர்களா? டைரக்டர் ஷங்கர் படத்தில் நடிக்க வாய்ப்பு வந்திருக்கிறதாம். தமிழ் கூறும் நல் உலகுக்கு வெல்கம் பிபா!

– சாரதா ஸ்ரீனிவாஸன்



வாங்க... வாங்க...!

இந்தச் சட்டங்களையும் நிறைவேத்துங்க... ப்ளீஸ்!

சமீப சட்டமன்றத் தொடர் ஏகப்பட்ட சட்டங்களை 'திபு, திபு' என்று நிறைவேற்றியுள்ளது. ஆனால் தலையாய பிரச்னைகள் நடுத்தர மக்கள் சந்திக்க வேண்டியிருப்பதை ஏனோ அரசு சிந்திப்பதாகவே தெரியவில்லை.

தலைமை செயலகம், சட்டசபையெல்லாம் மாமல்லபுரத்துக்குக் கிரஹப்பிரவேசம் போவதற்குள் கீழ்க்கண்ட சட்டங்களையும் நிறைவேற்றி, சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றலாமே!



ஓசி பேப்பர் கேட்டு ஈசியாகச் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளும் தம்பிரான்களைத் தனியறையில் பூட்டி தெலுங்கு, மலையாளம், இந்தி, பஞ்சாபி, சீன மொழி நாளிதழ்கள் வாசிக்கக் கொடுக்கப்படும்.



போஸ்ட் ஆபீஸ், பாங்க் போன்ற இடங்களில் பேனா கடன் கேட்கும் கழுத்தறுப்பு கேஸ்களுக்கு 'இனிமேல் ஓசி பேனா கேட்க மாட்டேன்' என பனை ஓலையில் ஆணியால் நூறு தடவை இம்போசிஷன் எழுதச் சொல்லி உத்தரவு போடலாம்.

மெகா சீரியல்களைப் பார்த்து வருஷக் கணக்கில் துக்கம் அனுஷ்டிக்கும் பெண்மணிகளை, ஆர்ட் ஃபிலிம் ரக படங்களை ஐம்பது நாட்கள்

மாதக் கடைசியில் காப்பிப் பொடி, சர்க்கரை என கடன் கேட்டுத் தொந்தரவு செய்யும் பக்கத்து வீட்டு மகராசிகள் ஒரே ஒரு வாரம் எந்த மெகாசீரியலும் பார்க்கக் கூடாது என்றாலே உடனடி பலன் கிட்டும்.



ஆலோசனை: பாஸு
படங்கள்: பிள்ளை



எதையுமே குறைவாகவே எடை போட்டுப் பழக்கப் பட்ட ரேஷன் கடை ஊழியர்களை, தலையில் எடைக் கற்களை வைத்து, குமரி வரை பாதயாத்திரை அனுப்பலாம்.



போலீஸ்காரரை அடையாளம் காண பெரிதும் உதவுவது தொப்பியா, தொப்பையா? என கன்னா, பின்னா தலைப்பிலெல்லாம் பட்டிமன்றம்



நடத்தி மக்களை மட்டிகளாக்கும் பேச்சாளர்களை, தற்காலிகமாக ஒரு மாதம் எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.க்களாக்கி எதைப் பற்றியுமே பேச அனுமதி தராமல் மௌன சாமியார்களாக்கி அனுப்பலாம்!



பார்க்கச் சொல்லி சட்டம் இயற்றலாம்.

அன்றாடங்காய்ச்சியிலிருந்து கள்



ளச் சாராயங்காய்ச்சி வரை எல்லோரையும் 'கிரெடிட் கார்டு வாங்கலையோ, கிரெடிட் கார்டு!' என நச்சரிக்கும் சேல்ஸ்மென்களை போஸ்ட் கார்டு கூட போகாத குக்கிராமத்தில் குடியேற்ற சட்டம் கொண்டு வரலாம்.



மனம் உருகுதே...

"இந்த வீட்டுக்கு என்ன குறைச்சல்?" ராதாகிருஷ்ணன் ரேவதியைப் பார்த்து சற்று அழுத்தமாய்ப் பேசினார்.

"ஒரு குறைச்சலுமில்லை. உங்கப்பா இருந்தது. பெரிய வராண்டா. ஹால். ஹால் மாதிரியே ஒரு சமையல் அறை. அப்படின்னு நன்னாதான் இருக்கு. இருவத்தாறு வருஷமா குடியிருக்கறதுனால அதுவும் பங்காளிச் சண்டையில நிக்கறதுனால எண்பது ரூபா வாடகைல ஆரம்பிச்சு இன்னிய தேதிக்கு எண்ணூறு வாடகையா இருக்கு. எண்ணூறு ரூபாய்க்கு மெட்ராஸ்ல இந்த வராண்டா கூட கிடைக்காது. மூணு ரூம். ஒரு ஹால். ஒரு கிச்சன் வராண்டான்னு இவ்ளோ பெரிய இடம். ரொம்ப சுகம்தான். கிழக்கு பார்த்த வீடு. தெற்கு பார்த்த ஜன்னல். மேற்கு வெயில் வராம இன்னொரு பில்டிங். இன்னொரு பக்கம் துணி உலர்த்தறதுனு திறந்தவெளி. எல்லாம் அற்புதம். இன்னைய தேதிக்கு வாடகைக்கு ஒருத்தன் வந்தா கூசாம பத்தாயிரம் ரூபா கேட்பான். கமர்ஷியல் ஆபீஸ் வைச்சுக்கறேன்னு யாராவது வந்தா ஒரு லட்ச ரூபா கொடுக்கத் தயாரா இருக்கா"

"இந்த ஜார்ஜ் டவுன்ல இப்படியொரு இடம் எப்படி கிடைக்கும்."

"அதனால இங்கயே இருந்துட வேண்டியதா? நமக்கு வேறே ஒரு விதமான வீடு வேண்டாமா? அதுக்கு ஏதாவது நீங்க ஏற்பாடு பண்ணக் கூடாதா?"

"சொல்லிட்ட இல்ல... செய்துடலாம் இரு." அவர் நீண்ட கொட்டாவி விட்டார்.

"என்ன தூக்கம் வருதா?"

"அதெப்படி தூக்கம் வரும்? போர் செய்யும்போது எந்த வீரனும் தூங்குவதில்லை அரசியாரே..." என்று அவர் வசனம் பேச, ரேவதி பூஜை மணியைப் போல் சிரித்தாள். அவரை இழுத்துப் புரட்டி தன் மீது போட்டுக்கொண்டாள். அவள் கூந்தலில் உள்ள பூவின் நறுமணம் அவரைக் கிறங்கடித்தது. அன்பின் பெருக்கம் அவர்களைத் தூங்க வைத்தது. அன்பினால் ஏற்பட்ட அமைதி அவர்களை வருடிக் கொடுத்தது. அவர்கள் அயர்ந்து தூங்கினார்கள்.

விடியல் நேரம் ஐந்தரை மணிக்கு ராதாகிருஷ்ணன் கண் விழித்தார். மனம் ஒரு போர் வீரனைப் போல அன்றைய அலுவலகப் பிரச்னைகளுக்குத் தயாராகிற்று. ரேவதி அவர் அசைவைப் பார்த்து வேகமாய் எழுந்தாள். அவர் கால்களைத் தடவி கண்ணில் ஒற்றிக் கொண்டாள். பின்பக்கம் போனாள்.

பல் தேய்த்துக் கொண்டிருந்த ராதாகிருஷ்ணனிடம் இன்றைக்கு என்ன சமைக்கட்டும் என்று கேட்டாள். புருஷனிடம் அன்றைய சமையல் பற்றிப் பேசுவது அவளுக்குப் பிடித்த விஷயம். அது அவள் வெளிப்படுத்தும் அன்பு.

"இரண்டு நாள் சரியான சாப்பாடு. ஜீரணம் ஆகும் படியா ரொம்ப சிம்பிளா சமை. மிளகு ரசம். இஞ்சி தொக்குன்னு பண்ணிடு."

அவர் வாய் கொப்பளித்துவிட்டு பதில் சொன்னார்.

அடுப்பு மூட்டி, பால் ஏற்றிக் கொண்டிருந்த மனைவியின் பின்புறம் போய் அவளை அணைத்துக் கொண்டார்.

"ரொம்ப தேங்க்ஸ்" என்று அவள் குரலிலேயே கேலியான நன்றி சொன்னார்.

ரேவதிக்கு அந்த அணைப்பும் அந்த



நன்றியும் பரமானந்தமாய் இருந்தன.

"சொந்த வீடு பத்தி கொஞ்சம் யோசனை பண்ணுங்கோ. மறந்துட வேண்டாம்."

சட்டென்று நினைவுபடுத்தினாள்.

"வண்டி நிறுத்து... இந்த வீடுதான்... இந்த வீடுதான்..."

- அந்த வீட்டு வாசலில் அதே நேரம் நான்கு பேர் காரிலிருந்து இறங்கி, கட்டிக் காட்டிப் பேசினார்கள்.

"பெரிய வீடா இருக்கேப்பா. இரண்டாயிரத்து ஐந்நூறு சதுர அடி. மேலே இரண்டாயிரம் சதுர அடி. இருவத்தாறு வருஷமா இருக்கான். ஒண்ணும் அசைக்க முடியலை."

"அதை எங்கிட்ட விடு. நான் அசைக்கிறேன்."

அவர்கள் மறுபடியும் கார் ஏறினார்கள்.

இந்தியா சுதந்திரமடைந்த பிறகு வேலூரிலிருந்து சென்னைக்கு வந்த கந்தசாமி முதலியாருக்கு என்ன வியாபாரம் செய்வது என்று தெரியவில்லை. ஆனால், கையில் ஏகத்திற்குப் பணம் இருந்தது. வெள்ளி நாணயங்களாகவும், கரன்சிகளாகவும கட்டப்பட்டு ஒரு ட்ரங்க் பெட்டியில் இரண்டு பூட்டுகளோடு சென்னைக்கு எடுத்து வரப்பட்டது.

என்ன செய்யலாம் என்று கேட்க வட்டிக்கு விட்டு சம்பாதிக்கலாம் என்று சொன்னார்கள். சிலர் மருந்து வியாபாரம் செய்யலாம் என்று சொன்னார்கள். சிலர் மளிகை என்று சொன்னார்கள்.

இதில் எல்லாவற்றிலும் அவர் பல்வேறு

பாலகுமாரன்

குறையிருப்பதையும், போட்டியிருப்பதையும் கவனித்தார். எல்லா பொருட்களும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி ஆவதைக் கவனித்துக் கொண்டார்.

அமெரிக்காவிலிருந்து உருக்குக் கம்பிகள் இறக்கலாம். தகரம் வரவழைக்கலாம். அலுமினியத் தகடு வரவழைக்கலாம் என்று

ஓர் அரசாங்க அதிகாரி சொல்ல, அதிகம் படிக்காத கந்தசாமி முதலியார் அனுபவம் வாய்ந்த, ஆங்கிலம் தெரிந்த அந்தணர்களைத் தேடினார்.

தன் பெயரிலேயே கம்பெனி துவக்கி, தானே அதற்கு சேர்மன் என்று போட்டுக்கொண்டு அவர்களை மேனேஜர்களாக நியமித்தார்.

சென்னைக்கு வரும் கப்பலில் பாளம் பாளமாக உருக்குக் கம்பிகளும் தாமிரத் தகடுகளும் வரவழைத்தார். அந்தக் கப்பல் திரும்பிப் போகும்போது ஏதேனும் எடுத்துப் போனால் நன்றாக இருக்குமே என்று யோசனை சொல்லப்பட்டபோது ஆந்திராவிலிருந்து ஜாடிகள் வரவழைத்து அதற்கு வைக்கோல் சுற்றி கவனமாகக் கப்பலில் ஏற்றினார்.

வட்டமான இடுப்புயர அட்டை டப்பாக்களில் பருத்தியை ஏற்றி அதற்கு மேல் கித்தான் போட்டு மூடினார். துறைமுகத்திற்கருகே அலுவலகம் வேண்டுமென்று இரண்டு இலட்ச ரூபாய் கொடுத்து அந்த வீடு வாங்கினார். அந்த வீடு ஒரு நாட்டுக்கோட்டை நகரத்தாருக்குச் சொந்தமாக இருந்தது. பிரிட்டிஷ் இந்தியாவில் கோட்டைக்கு மளிகை சாமான்களும், தேக்கு மரங்களும் அந்த நகரத்தார் அனுப்பி வைத்தார்.

வீட்டின் கீழ்ப்பக்கம் கோடவுனாக இருந்தது. மேல்பக்கம் அந்தச் செட்டியார் வசித்து வந்தார். அதேபோல கந்தசாமி முதலியாரும் வீட்டின் கீழே அலுவலகம் வைத்து, மேலே தன்னுடைய வீட்டை வைத்துக் கொண்டார்.

யானைக்கவுனிக்கு அருகே மிகப் பெரிய கோடவுன் வாங்கி, ஆந்திராவிலிருந்து வரும் லாரியை அங்கேயே நிறுத்தி, சாமான்களை இறக்கி வைத்துக்கொண்டார்.

நிறைய லாபம், நிறைய காசு என்று செழிப்போடு வாழ்ந்துகொண்டிருந்த அந்த நாட்டுக்கோட்டை நகரத்தார் சட்டென்று ஒருநாள் மாரடைப்பில் இறந்துவிட, அடுத்த வருடமே அவருடைய குடும்பம் அந்த இடத்தை விட்டுக் குடி பெயர்ந்தது. மயிலாப்பூரில் போய் அமர்ந்துகொண்டது. அதுவரை அவர் சம்பாதித்த காசை வங்கியில் போட்டு வட்டியை வாங்கி அவர் பிள்ளைகள் சுகவாசிகளாய்ச் சாப்பிடத் துவங்கினார்கள். வெறுமே தேவாரம், திருவாசகம் படிக்கின்ற ஆட்களாக மாறினார்கள்.

கந்தசாமி முதலியார் அந்த வீட்டை தன் பெயருக்கு எழுதி வாங்கிக்கொண்டு வேறு பலகை மாட்டி கம்பெனி நடத்த அந்தக் கம்பெனியும் மிகச் செழிப்பாக வளர்ந்தது.

அந்த வீட்டு வாசலில் தேக்கு மரத்தால் செய்த நிலைப்படி இருந்தது. பூ வேலைகளுக்கு நடுவே ஒரு கஜலட்சுமி சிற்பம் புடைப்பாக இருந்தது. அந்தக் கஜலட்சுமி சிற்பம்தான் இந்த வீட்டின் எல்லா நன்மைக்கும் காரணம் என்று கந்தசாமி முதலியார் எண்ணினார். அதற்குத் தினந்தோறும் பூஜை செய்தார். பூமாலை சாற்றினார். வந்த லாபத்தில் பட்டணத்தின் தெற்குப் பகுதியில் அங்கங்கே நிலங்கள் வாங்கிப் போட்டார். வாங்கிய நிலத்தை, பெரும் பணக்காரர்களுக்கு அதிக விலையில் விற்றார். விற்ற காசில் இன்னும் தெற்குப் பக்கம் போய் பெரியதாய் நிலங்கள் வளைத்துப் போட்டார்.

அவருக்கு ஏற்றுமதி இறக்குமதியை விட நில விற்பனையில் ஈடுபாடு அதிகமாயிற்று. அதுவரை வியாபாரத்தைக் கவனித்து வந்த மேனேஜர்கள் ஓய்வு பெற விரும்ப, அவர்களுக்கு நல்ல காசு கொடுத்தார். அவர்கள் தங்கள் ஊரான தஞ்சைப் பக்கம் ஒதுங்கினார்கள். அவர்களுக்குப் பதிலாக அவர்களுடைய சொந்தக்காரப் பையன்களை அங்கு மேனேஜர்களாக நியமித்தார். வந்த இளைஞர்கள் இன்னும் துடிப்பாக இருந்தார்கள்.

கந்தசாமி முதலியாரின் பையன்களோடு கைகோத்துக் கொண்டார்கள். துணிகள் இறக்குமதி செய்தார்கள். தோல் ஏற்றுமதி செய்தார்கள். ஏலக்காய், முந்திரி என்று பெரிய வியாபாரம் பிடித்தார்கள். ஆனால், சென்னையைவிட பம்பாய் வெகுவேகமாக வளர்ந்தது. ஏற்றுமதி உலகம் அங்கே விரிவடைந்தது. கப்பல்கள் வருவதும், போவதும் அங்கே அதிகரித்தன.

"கட்சில நிதி நிலைமை சரியில்லை!"

"உனக்கு எப்படித் தெரியும்?"

"உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினா நிஜமாவே பட்டினிப் போடுறாங்க!"



சிங்கப்பூருக்குப் பட்டும், பித்தளைப் பாத்திரமும் நகர்த்தப்பட்டன. சிங்கப்பூரிலிருந்து பினாஸ்டிக் இறக்குமதி செய்யப்பட்டது.

ஆனால், கந்தசாமி முதலியாரின் புதல்வர்கள் நன்கு படித்து மருந்து கம்பெனி ஆரம்பிக்க எண்ணினார்கள். அடையாறுக்கு அப்பால் வாங்கிப் போட்ட நிலத்தில் மருந்துக் கம்பெனி நிறுவி இருமலுக்கும், சுக்குவாலுக்கும், தலைவலிக்கும், நெஞ்சு வலிக்கும், கண் எரிச்சலுக்கும், காது குடைச்சலுக்கும், கைகால் வீக்கத்திற்கும் மருந்து தயாரித்தார்கள்.

தென்னிந்தியா முழுவதும் அடித்துக் கொள்ள ஆள் இல்லாமல் விற்றார்கள். மறுபடியும், ஏற்றுமதி வியாபாரம் மேனேஜர்களாலேயே நடத்தப்பட்டது.

ராதாகிருஷ்ணன் அப்பா உதவி மேனேஜராக அங்கு சேர்ந்தார். பெயர்தான் உதவி மேனேஜரே தவிர ஓடியாடி நிறைய வேலை செய்ய வேண்டியிருந்தது. மேனேஜர்களுக்கு மயிலாப்பூர் திருவல்லிக்கேணியில் நல்ல வீடு கிடைக்க, இங்கு அலுவலகத்துக்கு மேலே யாராவது இருக்க வேண்டுமென்ற எண்ணத்தினால் உதவி மேனேஜரான ராதாகிருஷ்ணனின் அப்பாவுக்கு வீடு கொடுக்கப்பட்டது.

ராதாகிருஷ்ணனுடைய அப்பா இருபத்து நான்கு மணி நேரமும் அந்தக் கடைக்காக உழைத்தார். எப்பொழுது கந்தசாமிப் பிள்ளையின் மகன்கள் கூப்பிட்டாலும் ஓடிப் போய் நின்றார். எந்த வேலை சொன்னாலும் செய்தார். அதிகம் உழைத்ததனாலோ என்னவோ ராதாகிருஷ்ணனின் பதினோராவது வயதில் அவருடைய அப்பா காலமானார்.

எண்பத்து நான்கு வயது கந்தசாமிப் பிள்ளை உயிரோடு இருக்க நாற்பத்தியொரு வயதான உதவி மேனேஜரான ராதாகிருஷ்ணன் இறந்தது எல்லோருக்கும் வருத்தமாக இருந்தது.

"நாங்க எங்க போவோம், நாங்க எங்க போவோம்?'' என்று ராதாகிருஷ்ணனின் அம்மா நெஞ்சில் அடித்துக்கொண்டு அழ, ''எங்கேயும் போக வேணாம். இங்கேயே இருங்க.'' கந்த சாமிப் பிள்ளை வெறும் வாயால் சொல்லாமல் ஒரு பத்திரம் எழுதி அவர்கள் விரும்பும்போது அந்த வீட்டைக் காலி செய்ய வேண்டுமென்றும், அதுவரை தொந்திரவு செய்யக்கூடாதென்றும் வருடத்திற்குப் பத்து ரூபாய் மட்டுமே வாடகை அதிகப்படுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

அப்பா இறந்த துக்கத்தில் ராதாகிருஷ்ணன் பள்ளியிறுதி படிக்கும்போது, அவருடைய பதினாறாவது வயதில் அம்மாவும் காலமானாள். மாமாவும், மாமியும் ஆதரவாக இருக்க, ராதாகிருஷ்ணன் படிப்பைத் தொடர்ந்தார்.

''காலி செய்து விடுகிறாயா?'' என்று பிள்ளைகள் கேட்டபோது, ''நான் எங்க போவேன்?'' என்று கைவிரிக்க தொண்ணூறு வயதான கந்தசாமிப்பிள்ளை ''போங்கடா அந்தப் புள்ளை இருக்கட்டும். உங்களுக்கு இடமா இல்லை'' என்று கடுகடுத்தார்.

மிகப் பெரிய நிலப்பரப்புகளுக்குச் சொந்தக்காரராக இருந்தாலும் மிக நவீனமான சொகுசு பங்களாவில் குடியிருந்தாலும் இந்த நெரிசலான வியாபார ஸ்தலமான ஜார்ஜ் டவுனில் இரண்டாவது மாடியில் காரைப் பெயர்ந்து கம்பிகள் நகர்ந்து சற்று சிதிலமாக இருக்கின்ற இந்த வீட்டுக்குள் அவர்கள் வர அச்சப்பட்டார்கள். பின்னாலே பார்த்துக் கலாம் என்று இரண்டு, மூன்று வருடம் தள்ளினார்கள்.

கல்லூரியில் படித்து ஒரு வேலை தேடிக் கொண்டு ராதாகிருஷ்ணன் உயர்ந்தபோது மறுபடியும் காலி செய்து விடுகிறாயா என்று கேட்டார்கள்.

"அதெல்லாம் செய்ய முடியாது."

ராதாகிருஷ்ணன் தெளிவாகச் சொல்லி விட்டார்.

அவர்கள் வழக்குத் தொடர்ந்தார்கள்.

அந்த வழக்கு மூன்றாவது வாய்தாவிலேயே உடைபட்டுப் போயிற்று.

அவராகப் போகும்வரை அந்த வீட்டைக் காலி பண்ண வைக்கக் கூடாது. மீறி சொன்னால், வன்முறையில் ஈடுபட்டால், கோர்ட் கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்று எச்சரிக்கப்பட்டது.

"தெள்ளத் தெளிவா எழுதி கொடுத்துருக்



''கொஞ்ச நாளா பக்கத்து வீட்ல எதுவும் இரவல் கேட்க மாட்டேங்கறியே... ஏன்?''

''அவ முன்னே மாதிரி இல்லே.... வாங்கின மறுநாளே கரெக்டா ஞாபகம் வைச்சு நாலு பேர் முன்னாலே திருப்பி கேட்கறா!''

- அம்பை தேவா

காரு உங்கப்பா. என்ன பண்ணச் சொல்றீங்க? ஒண்ணும் பண்ண முடியாது" என்று வக்கீல்கள் கை விரித்தார்கள்.

கந்தசாமிப் பிள்ளை மரணமடைந்தார்.

அவருடைய குமரர்கள் அப்பாக்களின் அனுமதியோடு சொத்துக்களைப் பிரித்துக் கொண்டார்கள்.

இந்த வீடு ஒரு பிள்ளையின் மூன்றாவது மகனுக்கு வந்து சேர்ந்தது.

அந்தச் சொத்து வந்தபோது அவன் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தான். கல்லூரியை முடித்து, வியாபாரத்திற்குக் காசு தேவை என்றபோது அந்தச் சொத்து ஞாபகம் வந்தது. அதற்குள் ஆறு வருடமாகிப் போயிருந்தது.

ஆறு வருடம் கழித்து மறுபடியும் வந்து நின்று இந்த வீடு எங்களுக்கு வேண்டுமே என்று ராதாகிருஷ்ணனிடம் கேட்டபோது "நீங்கள் தொந்தரவு பண்ணுவதாகப் புகார் சொல்லி விடுவேன்! மிக மோசமான அளவில் நீங்கள் நடத்தப்படுவீர்கள்" என்று வேகமான ஆங்கிலத்தில் பேச, அந்தப் பேரன்கள் பின்னடைந்தார்கள்.

இன்னும் மூன்று வருடம் காத்திருந்தார்கள். மறுபடியும் வழக்கு தொடர்ந்தார்கள்.

தனக்குக் கிடைத்த இந்த ஒரேயொரு சொத்தை தாம் அனுபவிக்க முடியாமல் ராதாகிருஷ்ணன் தொந்திரவு செய்கிறார் என்று சொல்லப்பட்டது. எங்களுடைய ஜீவனத்தை ராதாகிருஷ்ணன் கெடுக்கிறார் என்று அந்த மகன் வழக்கு தொடர்ந்தான்.

ராதாகிருஷ்ணன் ஆறாயிரம் ரூபாய் வக்கீலுக்குச் செலவு செய்தார். மிகத் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. உங்கள் ஜீவனம் பற்றி அவருக்கு எந்த அக்கறையும் இல்லை. உங்கள் ஜீவனத்திற்கு நீங்கள் வேறு வழி பார்த்துக் கொள்ள வேண்டியதுதான். வேண்டுமென்றால் வாடகையைச் சற்று உயர்த்திச் சொல்லலாம். இதுவரை அவர் கொடுத்துக் கொண்டிருந்த இருநூற்று பத்து ரூபாய் என்பதிலிருந்து எண்ணூறு ரூபாய் என்று கொடுக்க வேண்டும். அடுத்த மூன்று வருடங்களுக்கு இதே வாடகையில் இருக்கும் என்று சொல்லப்பட்டது. அந்தப் பையன் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்றே ராதாகிருஷ்ணன், அந்தப் பையன் தம்மை மிரட்டுவதாகப் புகார் கொடுத்தார்.

கோர்ட் போலீஸ் நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிட்டது. போலீஸ்காரர்கள் கந்தசாமிப் பிள்ளையின் பேரனிடம் போய் "என்னா விளையாடறீங்க. தேவையில்லாத வம்பு காட்றீங்க. அவரு படிச்ச ஐயரு. அவரெல்லாம் கோர்ட்டுக்குள்ள இறங்கினாருன்னா உங்களைக் கண்ணுக்குள்ள விரலை விட்டு ஆட்டிடுவாரு. உங்களை யாரு ஐயரைக் குடி வைக்கச் சொன்னது? ஐயரைக் குடி வைச்சாலே வம்புதான். நியாய தருமத்துக்குக் கட்டுப்படவே மாட்டான். எல்லாம் இங்கிலீஷ்ல பேசி உங்களை அறுத்துடுவான். வழக்கு வாய்தால்லாம் உங்களுக்குக் கஷ்டம். அவனுக்குச் சுலபம். அவன் வெச்சிருக்கற வக்கீலுக்கு ஒரு விஷயமும் தெரியாது. இவன்தான் மொத்த பாயிண்ட்டையும் எடுத்துக் கொடுக்கறான். இவன் மட்டும் கோட் மாட்டி கோர்ட்ல நின்னா சொத்தை அவனுக்குன்னே எழுதி வாங்கிடுவான். அப்படிபட்ட சாமர்த்தியம். அதனால சும்மா இருங்க. நீங்க அடிக்க வந்ததா ஐயர் சொல்றாரு. உங்க மேல என்னா கேஸ் தெரியுமா? கொலை செய்ய முயன்றதாகக் குற்றம். நாலு வருஷம் உள்ள போட்டுடுவாங்க. ஏன் ஜெயில் சோறு தின்னணும்னு ஆசையா? சும்மாயிருக்க முடியலை?" என்று சமாதானப்படுத்தி விட்டுப் போனார்கள்.

(தொடரும்)



டான்ஸா?

உடான்ஸா?

பிரபு தேவாவைப் பற்றி ஷாக் அடிக்கும் செய்தி ஒன்று கோலிவுட்டில் கசிகிறது. கையில் படங்களே இல்லையே! மறுபடி டான்ஸ் மாஸ்டர் தொழிலுக்கே திரும்ப முடிவு செய்துவிட்டாராம். 'பாபா' படப்பிடிப்பில் ரஜினியை நேரில் சந்தித்து, சான்ஸ் கேட்டதாகக் கிசுகிசு...

''அதெல்லாம் பொய்... பிரபுதேவாவுக்கு மைசூரில் ஆடம்பர கல்யாண மண்டபம் உள்ளது. அங்கே 'பாபா' ஷூட்டிங் நடக்க ஒப்பந்தம் ஆகியிருப்பதால், அது பற்றிப் பேசப் போனார்'' என்று மறுக்கிறார்கள் பிரபுதேவா தரப்பில்...

காதில் பாய்ந்த தேன்!

பிற பத்திரிகைகளில் வெளியான சில கடிதங்கள். சற்றே சுருக்கமாக.

இந்தியாவின் பா.ஜ.க அரசு பலவித போர் முழக்கங்களைச் செய்து வந்தாலும், ஒரு விஷயத்துக்காக அந்தத் தலைவர்களை நிச்சயம் மதிக்க வேண்டும். அணு ஆயுதங்களைப் பயன்படுத்தப் போவதாக அவர்கள் தங்கள் பேச்சில் குறிப்பிடுவதில்லை. இந்தக் கோணத்தை மீண்டும் மீண்டும் முன்வைப்பது பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரஃப்தான். பாகிஸ்தானின் குடிமக்களாகிய நாங்கள் இதுபோன்ற கருத்துக்களை ஒருபோதும் வெளியிடக்கூடாது என்று முஷாரஃப்பிடம் வலிமையாக எடுத்துச் சொல்ல வேண்டிய நேரம் இது.

(தி ஹிண்டு- டாக்டர் குர்ஷித் அஹமத், இஸ்லமாபாத்)

என் தம்பி சென்று கொண்டிருந்த கார் வேகமாக வந்து கொண்டிருந்த ஒரு டிரக்கின் மீது நாசிக் - மும்பை நெடுஞ்சாலையில் மோதியது. கார் ஓட்டுனர் இறந்துவிட்டார். என் தம்பி நினைவிழந்த நிலையில் கிடந்தான். பல வாகனங்கள் இதைப் பார்த்தபடி தங்கள் பயணத்தைத் தொடர்ந்தன. அந்தப் பக்கமாக வந்த ஒரு விவசாயி தனது கட்டைவண்டியில் என் தம்பியை ஏற்றிக்கொண்டு அருகிலிருந்த மருத்துவமனையில் கொண்டு சேர்த்தார். மருத்துவ சிகிச்சையால் என் தம்பி உடல்நலம் தேறி வரும்போது அந்த விவசாயியும் அவனுடைய கர்ப்பிணி மனைவியும் மருத்துவமனைக்கு அவ்வப்போது வந்து அவனை விசாரித்து விட்டுச் சென்றனர். பணம் பறிக்கத்தான் அந்த விவசாயி இப்படி அடிக்கடி எங்களை வந்து சந்திக்கிறார் என்றனர் அருகிலிருந்த நோயாளியின் குடும்பத்தினர். வருத்தமாக இருந்தது. எவ்வளவு பணம் கொடுத்தாலும் சரியான நேரத்தில் வெளிப்படுத்திய அந்தக் கருணைக்கு ஈடாகுமா?

(ஃபெமினா - நளினி ஷர்மா, பிலாய்)

இளமை தவறிழைக்கும் காலமென்றும், நடுத்தர வயது போராட்டங்களுக்கானது என்றும், முதுமை வருத்தப்படுவதற்கானது என்றும் கூறுவார்கள். ஆனால் இளமையில் தான் கனவுகளும், அவற்றைச் செயல்படுத்தும் வேகமும், புதிய உயரங்களை எட்ட வேண்டும் என்ற தாகமும் இருக்கும். இவற்றுக் கான சக்தியும் அவர்களிடம் தான் அதிகம் உண்டு. எண்ணங்களை நடைமுறைப்படுத்த இளைஞர்களால்தான் சாத்தியம் எனும்போது எதிலுமே அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதே நல்லது.

(தி காம்படிஷன் மாஸ்டர் - வினோத் சிங், சுல்தான்பூர்)

சமீபத்தில் சட்டமன்றத்தில் தமிழக முதல்வர் அரசின் மையத்தை இடமாற்றம் செய்ய எண்ணியுள்ளதாக அறிவித்த செய்தி காதில் தேன் பாய்ந்ததாக இருந்தது.

தலைநகரை மாற்றுவது என்பது அரசுத் துறைகள் பலவற்றை மாநிலத்தின் மத்திய பகுதி நகரங்களுக்கு மாற்றுவதுதான். விவசாயத் துறையைக் கோவைக்கும், மீன்வளத் துறையைத் தூத்துக்குடிக்கும், கால்நடை பல்கலைக் கழகத்தை நாமக்கல்லுக்கும் இடம் மாற்றம் செய்யலாம். இந்த முறையால் மாவட்டங்கள் சீரான சமமான வளர்ச்சி பெற உதவும். மேலும் மக்களின் பிரயாண நேரம், செலவு குறையும். இப்போது கம்ப்யூட்டர் புரட்சியும் நடப்பதால், தகவல் ஒருங்கிணைப்பு பெரிய விஷயமில்லை. சென்னை நகரின் நெருக்கடிக்கும் இது தீர்வாக அமையும்.

தென்னாப்பிரிக்கா மூன்று தலைநகரங்களைக் கொண்டுள்ளது. பிரிடோரியா நிர்வாகத் தலைநகரமாகவும், பொலோயம்பென்டென் நீதித்துறை தலைநகரமாகவும், கேப்டவுன் சட்டசபை தலைநகரமாகவும் உள்ளன.

(தினமலர் - கே.பி. கருணானந்தம், பெத்தாம்பட்டி)

தொகுப்பு: **ஜிஎஸ்எஸ்.**





மாற்றான் தோட்டம்

இதயத்தில் மண்வாசம்!

"சென்ற வருடத்தில் மட்டும், இந்தியாவில் மொத்தம் நூற்றைம்பது கோடி ரூபாய்க்கு வாழ்த்து அட்டைகள் விற்பனையாகியுள்ளன" என்கிறார்கள். வாழ்த்து அட்டைகள் மற்றும் பரிசுப் பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்யும் பிரபல நிறுவனமான ஆர்ச்சீஸின் இயக்குனர்களான பிரமோத் அரோராவும், விஜயந்த் சோப்ராவும். கடந்த இருபது வருடங்களாக இந்தத் துறையில் இருக்கும் நிறுவனம் இது.

"நீங்கள் வெளியிடும் வாழ்த்து அட்டைகள், பெரும்பாலும் ஆங்கிலத்தில்தான் இருக்கின்றன. ஏன் பிராந்திய மொழிகளில் வெளியிட முன் வரவில்லை?"



"சுமார் ஓராண்டுக்கு முன்பு, மராத்தியில் வாழ்த்து அட்டைகள் வெளியிட்டோம். மகாராஷ்டிராவில நல்ல வரவேற்பு. ஆறு மாதங்களுக்கு முன்பு, இந்தி வாழ்த்து அட்டைகளை வெளியிட்டோம். கடந்த துர்கா பூஜா சீசனில் பெங்காலி வாழ்த்து அட்டைகளை வெளியிட்டோம். குஜராத்தியில் வெளியிட திட்டமிருந்தாலும், சமீபத்திய குஜராத் நிகழ்வுகளால் அதனை ஒத்திப் போட்டிருக்கிறோம்."

"தமிழ் போன்ற தென்னிந்திய மொழிகளில் வெளியிடும் உத்தேசமில்லையா?"

"சினிமா, டி.வி சீரியல் போல, ஒரு மொழியில் எடுத்ததை வேறு மொழியில் டப்பிங் செய்து வாழ்த்து அட்டை பிசினஸ் செய்ய முடியாது. தமிழில், பொங்கல் அல்லது மலையாளத்தில் ஓணம் ஆகியவற்றுக்காக வாழ்த்து அட்டைகள் தயாரித்தால், அட்டையில் இடம் பெறும் வாசகங்கள், வெறும் மொழி பெயர்ப்பாக இல்லாமல், இதயபூர்வமான உணர்வுகளை வெளிப்படுத்தும்படியாக, மண்ணின் மணம் வீசும் படியாக அமைய வேண்டும். அதற்கு எங்களுக்குப் போதிய மொழி அறிவோ, அனுபவமோ இல்லை. தகுதியானவர்களை வைத்து, அனைத்து இந்திய மொழிகளிலும் வாழ்த்து அட்டைகள் வெளியிட வேண்டும் என்பதே ஆர்ச்சீஸ் இலட்சியம். அது ஒருநாள் நிறைவேறும் என்பது நிச்சயம்.

"இப்போது இன்டர்நெட் மூலம் ஈ கார்டுகள் அனுப்புவது அதிகரித்து வருகிறதே! இதனால் வாழ்த்து அட்டைகள் விற்பனையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா?"

"ஓரளவுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதே உண்மை. ஈ கார்டு மட்டுமின்றி எங்களுக்குப் புதிதாக இன்னொரு வில்லனும் முளைத்திருக்கிறான். அதுதான் செல்ஃபோன் மூலமாகத் தகவல் பரிமாறிக் கொள்ளும் எஸ்.எம்.எஸ் என்கிற வசதி. கடந்த புத்தாண்டின்போது, டெல்லியில் மட்டும் நாலு இலட்சம் புத்தாண்டு வாழ்த்துக்கள் எஸ்.எம்.எஸ் மூலம் அனுப்பட்டது என்கிறது ஒரு புள்ளி விவரம். ஆனால், என்னதான் இருந்தாலும் இன்டர்நெட் மூலம் வரும் ஒரு ஈ கார்டைப் பார்க்கலாம்; படித்து ரசிக்கலாம். ஆனால், அப்படியே எடுத்து வைத்து, பாதுகாக்க முடியாதே! இந்தக் கோணத்தில் மக்கள் மத்தியில் வாழ்த்து அட்டைகளை விளம்பரப் படுத்தி, விற்பனையைப் பெருக்குவதே எங்கள் வியூகம்."


- கௌதம் ராம்

கும்பகர்ணனுக்கு ஒரு கோயில்!

ஜே.எஸ். ராகவன்

நெய் ஒழுகும் சுவையான சர்க்கரைப் பொங்கலைச் கடச்கட தொன்னையில் வினியோகிப்பதுபோல், இறை உணர்வை பக்த கோடிகளுக்கு வழங்கும் பத்திரிகைகளில் இதுவரை இடம் பெறாதது குறட்டை மிகு ஸ்ரீ கும்பகர்ணன் கோயில். தூக்க தேவதையின் தலையணைக் கரங்களால் தழுவப்படாது விழித்திருக்கும் பக்தர்களைத் தடுத்தாட்கொள்ள (அதாவது தூங்க வைக்க) தரும மிகு சென்னையம்பதியில் உள்ள கொரட்டூரில் எழுந்தருளியிருக்கும் அவரைக் கற்பனை உலகில் தரிசிக்க, படுக்கையைச் சுருட்டி வைத்துவிட்டு வாருங்களேன், போய் வரலாம்!

கோயிலைச் சுற்றி அடர்ந்த தூங்கு மூஞ்சி மரங்கள். நண்பகலிலும் சூரிய ஒளி மறைக்கப்பட்டதால் சூழ்ந்திருக்கும் மெல்லிய இருள். 'குறட்டையூர்' என்று கல்வெட்டில் உள்ள குறிப்பால், அப்பெயர்தான் 'கொரட்டூர்' எனக் காலப் போக்கில் மருவியிருக்கும் என்று அசப்பில் தேவகௌடாவைப் போல் தோற்றமளிக்கும் தர்மகர்த்தா அரைத் தூக்கத்தில் புரண்டு படுத்தவாறே முணுமுணுப்பது காதில் விழுகிறது.



மற்ற கோயில்களைப் போல் கருவறை, பள்ளியறை என்ற பாகுபாடு இல்லாமல் இங்கு பள்ளியறையே கருவறையாகவும், கருவறையே பள்ளியறையாகவும் அமைந்துள்ளது. தூக்கத்தின் தாசானுதாசன் குறட்டை மிகு ஸ்ரீ கும்பகர்ணன் புஜங்க சயனமாகக் காட்சி அளிக்கிறார். திவ்ய தரிசனம். திருப்பாதத்திலிருந்து மோவாய் வரை சிறிதும் நெகிழாமல் இழுத்துப் போர்த்தப்பட்ட நேர்த்தியான ஷோலாப்பூர் போர்வை. கருவறை மூலையில் பூஜ்யம் வாட் ஒளி உமிழும் நைட்லாம்ப் - நந்தாவிளக்காக எரிந்து கொண்டு இருக்கிறது. திரை கிடையாது. அதற்குப் பதில் கொசுவலை.

தேவியர் (அதுவும் அழகிய) இருந்தால் தூக்கம் போய் நாளடைவில் துக்கம் வந்து சேரலாம் என்ற விவேகத்தாலோ என்னவோ தூக்க உபாசகன் தம்பதி சமேதராகக் காட்சி அளிக்கவில்லை. மூன்று வேளை பூஜை என்கிற நியதி இங்கே கிடையாது. எப்போதாவது ஒருமுறை அர்ச்சகர் வந்து போவதுண்டு. அவ்வாறு கர்ப்

பக்கிரகத்தில் காலடி வைக்கும்போது அவர் கிறங்கிய கண்களுடன் இருக்க வேண்டும் என்பதும், பூஜை செய்யும் உரிமை தூக்கத்தில் நடக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கு மட்டுமே சொந்தம் என்றும் தெரிய வருகிறது.

லோகத்தில் கெட்ட ஆவிகள் நீங்கி கொட்டாவிகளும், கோட்டுவாய்களும் நிறைந்து இருக்க வேண்டும் என்பதும்; அரக்கனாயினும், துகில் உரித்த துச்சாதனனைவிட துயில் உற்ற கும்பகர்ணன் சாலச் சிறந்தவன் என்பதும்; விழித்திருந்து அடாத தீய செயல்களைப் புரிவதைவிட தூங்கியிருந்து செயலற்றவனாக இருப்பதே மேல் என்பதும் இக்கோவிலைப்



பற்றி குறட்டையூர் சித்தர் ஸ்ரீ நித்திரா மூர்த்தி சுவாமிகள் அருளிய, எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தத்தில் அமைந்த 'ஸ்ரீகும்பகர்ண திருப்பள்ளி மாலை'யின் சாராம்சமாகும்.

பூஜை நடக்கும்போது மணி அடிப்பதில்லை. கற்பூரமும் கிடையாது. வீரியம் குறைந்த மங்கலான டார்ச் விளக்கே மூன்று முறை ஆரத்தியாகச் சுற்றப்படுகிறது. அச்சமயம் சொல்லி வைத்தாற்போல் அலறும் டைம்பீசின் அலார சப்தத்தை, கோவில் சிப்பந்தி வெறியுடன் தலையில் தட்டி நிறுத்தி ஸ்ரீ கும்பகர்ணனைப் ப்ரீதி செய்கிறார்.

ஆந்திராவிலிருந்து ஸ்பெஷலாகத் தருவிக்கப்படும் கெட்டியான எருமைத் தயிரை விட்டுப் பிசைந்த பழையதுதான் பிரதான பிரசாதம். விசேட நாட்களில் தலைக்கு ஒன்று என்ற கட்டாயக் கணக்கில் நைவேத்தியம் செய்யப்பட்ட தூக்க மாத்திரைகள் ஸ்பெஷலாக விநியோகம் செய்யப்படுகிறது.

கோயிலைச் சுற்றி அமைந்த தோப்பில்




தாழ்வான கிளைகளில் கட்டப்பட்ட கலர்கலரான குட்டித் தொட்டில்கள்... அட! தொட்டில்கள் இல்லையே... கட்டில்கள்! தூக்கம் வராத பக்தர்கள் குறட்டைத் தலைவனை வேண்டி கட்டில்களைத் தொங்க விட்டால், எண்ணி ஒரு மண்டலத்துக்குள் வியாதி நீங்கி, விளாவிய வெந்நீரில் குளித்து, சாம்பிராணி புகை போட்டு, குழைந்த ரசம் சாதம் உண்ட குட்டிப் பாப்பாக்கள் போல நிஷ்களங்கமாகத் தூங்கு வார்கள் என்பதும், அன்னாரின் (ஆண்கள்) இரவு மற்றும் பகல் கனவுகளில், தாடகை மற்றும் சூர்ப்பணகை போன்ற கொடிய அரக் கிகள் வராமல், ஊர்வசி (அன்றைய) மற்றும் ரம்பா (இன்றைய) போன்ற அழகுக் கிளிகள் வருவார்கள் என்றும் நம்பப்படுகிறது. நேர்த்திக் கடனாக பக்தர்கள் ஸ்ரீ கும்பகர்ணனுக்குக் கைத்தறி மற்றும் மில் போர்வைகளைச் சாத் துவது வழக்கம். உறுத்தாத உயர்ந்த கம்பளிப் போர்வை சாத்தினால் விசேஷம்.

திருவிழா அன்று குறட்டைத் தலைவனை எழுப்புவது ஒரு சடங்கு. கம்பநாட்டாழ்வார் கும்பகர்ண வதைப் படலத்தில் கூறிய முறைகளை மனத்தில் கொண்டு, 125 டெசிபலுக்கு மேல் சப்திக்கும் அணுகுண்டுகளை வெடித்தும் மற்றும் 108 ராட்சச தண்ணீர் லாரிகளைச் சேர்ந்து ஹாரன் அடிக்கும்படிப் பணித்தும் சிம்பாலிக்காக ஸ்ரீ கும்பகர்ணனைத் திருப்பள்ளி எழுச்சி செய்வர். நீண்ட தூக்கத்திற்குப் பின் எழும் அகோரப்பசியைத் தீர்க்க, அறுசுவை உண்டி படைப்பர்.

தான் தூங்கும்போது நிகழ்ந்த அக்கிரமங்கள் மற்றும் அநீதிகளை எழுந்தவுடன் கேள்விப்படும் கும்பகர்ணன், "என்னுடைய அறிவுரை இரண்டு காதுகள் என்ன_ இருபது காதுகள் பெற்று, சாத்திரம் பயின்ற மண்டைகளிலேயே ஏறாதபோது, விழித்திருந்து என்ன பயன்?" என்ற ஆதங்கத்துடன் விழா முடிவில் மறுபடியும் தூங்கப் போய்விடுவார் என்பது ஐதீகம்!

புக் பேங்க்



ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள் திரட்டு

ராமகிருஷ்ணரின் இல்லறச் சீடர்களில் ஒருவரான மகேந்திர நாத் குப்தர் தொகுத்த அவரது உபதேசங்களின் மொழி பெயர்ப்பு இந்நூல். ராமகிருஷ்ணர் காட்டுகிற கதைகளும், உதாரணங்களும், உவமைகளும், கடினமான தத்துவங்களைக்கூட எளிதாகப் புரிய வைக்கின்றன.


ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை - 4. விலை ரூ.25.



இன்று விடுமுறை - பாலுசத்யா

பல்வேறு பத்திரிகைகளில் வெளியான சிறுகதைகள். அடித்தட்டு மக்களை மையமாகக் கொண்டு பெரும்பாலான கதைகள் அமைந்திருக்கின்றன.

மருதா, 3, கீழ்த்தளம், ரியல் ஏஜென்ஸி, 102, பாரதி சாலை, சென்னை - 14. விலை ரூ.40)



நலம், நலமறிய - சந்திரமௌலி

பத்திரிகைகளில் தாம் பேட்டி கண்டு எழுதிய மருத்துவம் மற்றும் உடல் நலம் குறித்த கட்டுரைகளைத் தொகுத்துள்ளார் ஆசிரியர்.

தமிழ்ப் புத்தகாலயம், ஜி.3/8, மாசிலாமணி தெரு, பாண்டிபஜார், சென்னை - 17 விலை ரூ.39)



தௌதஜிங் - ஞானமும் நல்வாழ்க்கையும்

ஞானமும் நல்லறிவும் என்று அழைக்கப்படும் லாவோட்ஸு-வின் தௌதஜிங், சீன மற்றும் பல்வேறு நாட்டு அறிஞர்களின் கவனத்தை ஈர்த்து வந்திருக்கிறது. முனைவர் ரமணியின் மொழி பெயர்ப்பில் தமிழுக்கு வந்திருக்கும் இந்தப் புத்தகம் தத்துவங்களையும் ஞானத்தையும் பேசுகிறது. இனிமையான மொழி பெயர்ப்பு.

கண்ணதாசன் பதிப்பகம், 23, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை - 17. விலை ரூ.30)



டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி - தி.முத்துகண்ணப்பர்

தமிழக சட்டசபையின் முதல் பெண் உறுப்பினர், முதல் பெண் மருத்துவர் உட்பட பல்வேறு முதன்மை ஸ்தானங்களைப் பெற்று வரும் இந்திய மாதர் சங்கத்தைத் தோற்றுவித்தவருமான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் வாழ்க்கை வரலாற்று நூல்.

கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17. விலை ரூ.20)

— அழகி

உச்ச தீ!

நேசம் கசியும்
நெருக்கமான
பார்வை

வேரின் சுவாசம்
உணரும் தனிமை

கட்டுப்பாட்டு
கயிறுகளால்
கட்டப்பட்ட உணர்வுகள்

இருவருள்ளும்
எரிகிறது தீ!

நாணத் தாழ்ப்பாள்
நழுவிக்கொண்டே போகிறது.

ஆலிங்கனத்திற்கு
அழைப்பு விடுக்கிறது
ஆழ்மனம்...

திணை, பால்
திரிந்த நிலை
நெற்றி மேட்டில்
முத்து முத்தாய்,
அச்சத்தின் அடையாளங்கள்

இன்னொரு முறை வேண்டாம்,
இதுபோன்ற சந்திப்பு....
தவிப்பின் உச்சம்
தாங்காது இதயம்.



பால. மூர்த்தி

ஏ.ஆர்.ரஹ்மானுக்கு அரசு வேலை?

கர்நாடக சுற்றுலாத் துறை திடீரென்று விழித்துக் கொண்டிருக்கிறது. சர்வதேசப் பயணிகளை ஈர்க்க புதுப்புது திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இதற்கென ஒரு தூதரைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தூதர், சர்வதேச அளவில் வி.ஐ.பி.யாக இருக்க வேண்டும் என்பது முக்கிய கண்டிஷன்!

பற்பல பிரமுகர்களின் பெயர்கள் அடிபட்டுக் கொண்டிருக்கின்றன. ஐஸ்வர்யா ராய், ஷில்பா ஷெட்டி, அனில் கும்ப்ளே, ராகுல் திராவிட்... என மண்ணின் மைந்தர்கள் பலர் இருந்தாலும் ஹாட் ஃபேவரிட் ஏ.ஆர். ரஹ்மானின் பெயர் லிஸ்டில் முதலாவது இடத்தில் இருக்கிறது.



மென்மையான தோற்றம், வசீகரமான குரல் மற்றும் மகுடி ஊதும் இசை என சர்வமும் சரிவிகித அளவில் இருப்பதால் கர்நாடகாவில் சுற்றுலாத் துறை வளர்ச்சித் தூதராக ரஹ்மானை நியமித்தால் என்ன என்றொரு ஐடியா இருக்கிறதாம்.

"கோக், ஒமேகா, நக்ஷத்திரா டைமண்ட்... என திரை நட்சத்திரங்கள் மற்றும் கிரிக்கெட் ஸ்டார்கள்தான் மாடல்களாக உள்ளனர். ஒரு மாநிலத்தின் வளர்ச்சியும் ஒரு பொருளின் வளர்ச்சியைப் போலத்தான். இதற்கும் மார்க்கெட்டிங் தேவைப்படுகிறது. முக்கிய பிரமுகர் ஒருவரைத் தேடிக் கொண்டிருக்கிறோம். இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் முடிவாகி விடும்" என்கிறார் சுற்றுலாத் துறை அமைச்சர் ரோஷன் பேக்.



★ அண்டை ஆந்திராவில் கடும் வெயில் காரணமாகப் பலர் மேல் உலகத்துக்கு சம்மர் டிக்கெட் வாங்கிக் கொண்டிருக்க பெங்களூரில் திடீர் மழை. இரண்டு மூன்று நாட்களாக அடித்து பெய்த மழையின் காரணமாக சாலையெங்கும் வெள்ளம். டிராஃபிக் ஜாம், சகதி பிரெட், சாக்கடை நீர்... என தாக்குதல்களினால் பொது மக்கள் திண்டாடிப் போனார்கள். குல்மோஹர் மரங்கள் முறிந்து போக்குவரத்து ஸ்தம்பித்துவிட்டது. இந்த லட்சணத்தில்



சாலையைத் தோண்டி ஆப்டிகல் ஃபைபர் கேபிள் போடும் பணி வேறு. சீஸன் மாறிப் போனதில், இப்போது பெங்களூர் பெருங்குளிராகி விட்டது. பக்கத்து மாநிலங்களுக்கும் வருண பகவானை விஸிட் செய்யுமாறு இறைஞ்சி கேட்டுக் கொள்கிறோம்.

★ 'முத்தப்பா ராய் துபாயில் பிடிபட்டார்' என செய்தி வந்ததுமே கர்நாடக காவல் துறை உஷாராகிவிட்டது. யாரிவர்? முத்தப்பா ராய் பயங்கர தாதா. தாவூத் இப்ராகிமுடன் நெருங்கிய தொடர்புள்ள ரவுடி! ஆறு வருஷங்களுக்கு முன் இங்கிருந்து ஓடிப் போய் துபாயில் பதுங்கி விட்டாராம். அவர்மீது பதினாறு கொலை கேஸ்கள் வளமுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. போலி பாஸ்போர்ட் வைத்திருந்ததால் மனைவி, குழந்தை சகிதம் முத்தப்பாவை, துபாய் போலீஸ் உள்ளே தள்ளி விட்டது. பெங்களூர் போலீஸ் கமிஷனர் சங்கிலியானா துபாய் போலீஸைத் தொடர்பு கொண்டு முத்தப்பாவை ஒப்படைக்கும்படி கேட்டுள்ளாராம். துபாய் செவி சாய்த்து விடும் எனத் தோன்றுகிறது. 'முத்தப்பா.. முத்தப்பா.. ப்ளீஸ் வொர்ரி முத்தப்பா' என்று மாற்றிப் பாடினால் தப்பாப்பா?

★ குக்கிராமங்களில் மின்சாரம், குடி நீர் என்பது நீங்காத பிரச்னையே. இப்போதைக்கு இரு கிராமங்களில் அது தீர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. பெங்களூரில் இருக்கும் இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் சயின்ஸ் தும்கூரில் இருக்கும் ஹனுமந்த் நகர் மற்றும் ஹொசஹள்ளி எனும் இரு கிராமங்களுக்கு அடிப்படை வசதி கொடுத்து புண்ணியம் கட்டிக் கொண்டிருக்கிறது. மாதம் பத்து ரூபாய் செலுத்தினாலே போதுமாம். சாணம், இலைகள், விறகு போன்றவற்றால் தயாராகும் பயோ மாஸினால் இது சாத்தியமாகிறதாம். தண்ணீரும் மின்சாரமும் நாள் முழுதும் கிடைக்காவிட்டாலும் தினமும் மூன்று நான்கு மணி நேரமேனும் மக்களுக்குக் கிடைக்குமாம். அடுத்த மாதத்திலிருந்து இன்னும் பல கிராமங்களுக்கு இவ்வசதி அளிக்கப்படும் என்கிறார்கள். இதற்கென ஆகும் செலவை கர்நாடக அரசு, இந்திய - கனடா என்விரோன்மெண்ட் மற்றும் க்ளோபல் என்விரோன்மெண்ட் அமைப்புகள் ஏற்றுக் கொண்டிருக்கின்றனவாம்.

★ 'உதயா', 'உஷே' என எந்த கன்னடச் சானலைத் திருப்பினாலும் டாக்டர் ராஜ்குமார் வெள்ளைப் பனி மலையில் உலவிய படியே பாடும் 'நாதமயே' (படம் : ஜீவன சைத்ரா) பாடல்தான்! வீரப்பன் காட்டு அனுபவம்தான் அவரை உருக உருகப் பாடவைத்தது என்கிறார்கள். அண்ணோரு அபிப்ராயம் என்னவோ?

— லதா சேகர்

''அரசே! நாட்டிற்குள் பஞ்சம் தலை விரித்தாடுகிறது...''
''உடனே அதற்குத் தலைபின்னி பூச்சூடுமாறு உத்தரவிடுகிறேன்.''

- முருகன்



நமக்கு நாமே..!



• ஸ்ரீ நாச்சியப்ப தேசிக சுவாமிகள்

இருபத்து ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு நகரத்தார்கள் என்றழைக்கப்படும் நாட்டுக் கோட்டை செட்டியார் இனத்தவரை ஒன்று சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டு சுமார் தொண்ணூற்று ஆறு ஊர்களில் உள்ள ஒரு இலட்சம் மக்களை ஒன்று சேர்த்து நகரத்தார் மாநாட்டை நடத்தியுள்ளார், காரைக்குடிக்கு அருகிலுள்ள நகரத்தார் ஆதீனங்களுள் ஒன்றான கோவிலூர் ஆதீன மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ நாச்சியப்ப தேசிக சுவாமிகள்.

"அரசியல் கட்சியாகவோ அல்லது அரசியலுக்காகவோ இதைக் கூட்டவில்லை. நலிந்த நகரத்தாரின் மேம்பாட்டுக்காக ஆரம்பித்துள்ளோம். நகரத்தார் குழந்தைகள் கல்வி வசதி பெற ஏழு கோடி ரூபாயில் கல்வி அறக்கட்டளை ஒன்றின் மூலம் படிப்பு உதவி செய்ய திட்டம் ஆரம்பித்துள்ளோம். அதற்கு ஒரு கோடி ரூபாயை நான் கொடுத்துள்ளேன்.

"நாங்களே பணத்தைச் சேர்த்து, எங்களுக்குள்ளேயே உதவி செய்து கொள்வதென்று முடிவு செய்திருக்கின்றோம். அரசாங்கத்தின் உதவியை எப்போதும் நாடப் போவதில்லை.

"இதைப் போல, நகரத்தார் மக்களுக்கு ஏற்படும் திருமண முறிவு, மனக் கசப்புகளை கோவிலூர் ஆதீனத்தில் அவர்களின் உறவினர்களை வைத்துப் பேசி, நல்ல தீர்வு காண்பது, உலகில் உள்ள நகரத்தார்களை இணைக்க தகவல் தொடர்பகம் கோவிலூர் ஆதீனத்தில் நிறுவுதல், தமிழகத்திலும், பிற இடங்களிலும் உள்ள நகரத்தார் கோயில்கள், இடங்களைக் கண்டறிந்து மீட்பது போன்ற நடவடிக்கைகளை எடுக்க உள்ளோம்.

"கடந்த நான்கைந்து ஆண்டுகளாகவே நகரத்தார் சமூகம் மேம்பாடு அடைய ஏதாவது செய்ய வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். அதற்கு இப்போது தான் நேரம் வந்துள்ளது" என்கிறார் எண்பது வயதான ஸ்ரீலஸ்ரீ நாச்சியப்ப தேசிக சுவாமிகள்.

ருக்மணி அருண்டேலின் மாணவர்களுள் ஒருவரான நாச்சியப்பன் (சுவாமிகளின் பூர்வாசிரம பெயர்) உலக அளவில் அச்சுத் தொழிலில் கொடி கட்டிப் பறந்தவர். இந்தியாவில் முதன் முதலில் வண்ணப்படம் அச்சிட்ட பெருமை இவரைச் சேரும்.

நலிவடைந்து வரும் திருக்கோயில் சார்ந்த இசை, நாட்டியம், சிற்பம் போன்ற பத்து விதமான கலைகளுக்கு, தனித்தனி பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பித்து பல்கலைக் கழகமாக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளார்.

தனக்கென ஒரு தலைவரை எப்போதுமே வைத்துக் கொள்ளாத நகரத்தார் சமூகம், முதன் முதலாக கோவிலூர் ஆதீன கர்த்தரை வழிகாட்டியாக ஏற்க முற்பட்டுள்ளது.

சந்திப்பு, படம்: கி. சிங்காரவடிவேல்

கற்பனைக்கெட்டாத கொடூரம்!



• சுப்ரமணியன்

லால்குடியிலிருந்து பத்து கிலோமீட்டர் தொலைவில் உள்ளது திண்ணியம் கிராமம். அங்கு கிராம வெட்டியான் வேலை பார்க்கிறார் கருப்பையா. ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர். இரண்டு ஆண்டுகளுக்கு முன், தமது தங்கை பானுமதிக்குத் தொகுப்பு வீடு ஒன்று ஒதுக்குவதற்காக அப்பொழுது பஞ்சாயத்து தலைவியாக இருந்த திமு.கவின் ராஜலெட்சுமியிடம் இரண்டாயிரம் ரூபாயை லஞ்சமாகத் தந்திருக்கிறார் கருப்பையா. முன்னாள் பஞ்சாயத்துத் தலைவியின் கணவர் சுப்ரமணியன் ஓய்வு பெற்ற பள்ளி ஆசிரியர். கள்ளர் இனத்தைச் சேர்ந்தவர்கள்.

தன் தங்கைக்குத் தொகுப்பு வீடு கிடைக்காமல் இருக்கவே, தான் கொடுத்த லஞ்சப் பணத்தையாவது திருப்பித் தருமாறு கேட்டிருக்கிறார் கருப்பையா. ஒரு கட்டத்தில் அவர்கள், "உன்னிடம் பணமே வாங்கவில்லை. உன்னால் ஆனதைச் செய்துகொள்!" என விரட்டியடித்துள்ளார்கள்.

மனம் வெறுத்துப் போன கருப்பையா மறுநாள் காலையில் கிராமம் முழுவதும் தண்டோரா போட்டு, நியாயம் பெற்றுத் தருமாறு முரசறைந்து சென்றிருக்கிறார்.

காலையில் நடந்த இச்சம்பவம் அக்கிராமத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தவே, அதன் பின்னர் சங்கிலித் தொடராய் நிகழ்ந்த சம்பவங்கள் அனைத்தும் தீண்டாமைக் கொடுமைத் தீயின் கோர நர்த்தனத்தைத் தோலுரித்துக் காட்டியுள்ளன.

தண்டோரா போட்ட கருப்பையாவைத் தேடிப் பிடித்து இழுத்து வந்து தன் வீட்டில் வைத்து அடித்து, உதைத்து சித்ரவதை செய்து மன்னிப்புக் கேட்க வைத்துள்ளது ராஜலெட்சுமி - சுப்ரமணியன் குடும்பம். கருப்பையாவும் மன்னிப்புக் கேட்டிருக்கிறார்.

மறுபடியும் தெருக்களில், "காலையில் நான் ராஜலட்சுமி அம்மா குறித்து கூறியது அனைத்தும் உண்மையல்ல. அதற்காக நான் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்!" என அறிவித்தபடியே தண்டோரா போட்டுச் சென்றிருக்கிறார் கருப்பையா. அத்துடன் அவர்களுக்குப் பயந்துகொண்டு வெளியூருக்குக் கிளம்பிச் சென்றுவிட்டார் அவர்.



• முருகேசன், கருப்பையா



முதன் முதலாக தண்டோரா போட்ட போது கருப்பையாவுடன் சென்றிருந்த அவரது உறவினர்களான முருகேசன், ராமசாமி ஆகிய இருவரையும் முன்னாள் பஞ்சாயத்து தலைவியின் வீட்டுக்கு அழைத்து வந்து இம்சித்திருக்கிறார்கள். ராஜலெட்சுமி, சுப்ரமணியன், மகன் பாபு மற்றும் அவர்களது உறவினர்களான கொடியரசு, அசோக், சிதாமணி ஆகிய ஆறு பேருமாகச் சேர்ந்து இழிவாகப் பேசி அடித்து உதைத்திருக்கிறார்கள். அழுதவாறே அவர்களிருவரும் கீழே விழுந்து மன்னிப்புக் கேட்டுள்ளனர்.

அப்பொழுதும் அவர்கள் கோபம் தணிந்ததாகத் தெரியவில்லை. பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியை ராஜலெட்சுமி கொண்டு வந்து தர முருகேசன், ராமசாமிக்குக் கதற கதற சூடு வைத்துள்ளது சுப்ரமணியக் கும்பல்.

ராஜலெட்சுமியின் கணவர் சுப்ரமணியனுக்கு அப்போதும் உக்கிரம் தணிந்ததாகத் தெரியவில்லை. "வரப்பிலே (காய்ந்த மலம்) அள்ளிட்டு வாங்கடா"ன்னு ஆளனுப்பி இரும்பு முறத்தில் கொண்டு வரச் செய்திருக்கிறார். காய்ந்த மலத்தை ஒருவர் மாற்றி ஒருவர் ஊட்டி விட்டுக் கொள்ளுமாறு இம்சித்திருக்கிறார்கள். உயிர் பயத்தில் காட்டுமிராண்டி செயலுக்கு அடிபணிந்து முருகேசனும், ராமசாமியும் காய்ந்த மலத்தை எடுத்து ஒருவர் மாற்றி ஒருவருக்கு ஊட்டிக் கொள்ள, இழி செயலொன்று அரங்கேறிப் போனது.

திண்ணியம் கிராமத்தில் நடந்த இக்கொடூரச் செயல், விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு மற்றும் மனித உரிமை வழக்கறிஞர்கள் கூட்டமைப்பு மூலமாக வெளிச்சத்திற்கு வந்தது. அதன் பின்னர் முருகேசன்,



• பானுமதியும் பணம் கொடுத்து ஏமாந்தவர்களும்

ராமசாமி ஆட்கள் திருச்சி மாவட்ட கலெக்டரிடம் நேரடியாகப் புகார் மனு தரவே, மாவட்ட கலெக்டர் டாக்டர் க. மணிவாசன் திண்ணியம் கிராமத்திற்குச் சென்

நிருந்து நேரடி விசாரணையில் ஈடுபட்டார்.


இச் சம்பவத்தில் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட தகவலை மாவட்ட நிர்வாகத்துக்குக் கொடுக்கத் தவறியதற்காக அப் பகுதி கிராம நிர்வாக அதிகாரி மாவட்ட கலெக்டரால் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார். விசாரணை நடைபெறுவதை அறிந்ததும் தலைமறைவான அந்தக் குறிப்பிட்ட ஆறு நபர்களும் போலீசாரால் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முன்னாள் பஞ்சாயத்துத் தலைவி, அவரது கணவர் மற்றும் குடும்பத்தினர் தற்போது சிறையில் இருப்பதால் அவர்கள் தரப்பு கருத்தை அறிய முடியவில்லை. நாம் நேரில் சென்று திண்ணியம் கிராமத்தில் விசாரித்து அறிந்த வகையில் நடந்த சம்பவங்கள் அனைத்தும் உண்மையே என கூறுகிறார்கள் ஆதி திராவிட இனப் பொதுமக்கள்.

கட்டுரை, படங்கள்:
இருள்நீக்கியான்

"பிடியுங்க... பரிசை!"

கடந்த ஆண்டு பாகிஸ்தான் அதிபர் முஷாரஃப், தில்லியில் தாம் வளர்ந்த நகர்வாலாகலிக்குச் சென்றதைப் போல, சில வருடங்களுக்கு முன் மத்திய தகவல் ஒளிபரப்பு அமைச்சர், நல்லெண்



ணம் பயணம் மேற்கொண்டு பாகிஸ்தான் சென்றவர், தமது பூர்வீகமான ஸஹிவால் பகுதிக்குச் சென்றார்.

'ஹரியானா முர்ரா' எருமையைப் போல, அப்பகுதியில் 'ஸஹிவால் பசு' பிரசித்தி பெற்றது.

இந்திய அமைச்சரின் வருகையை ஒட்டி அப்பகுதி மக்கள் சார்பில் ஸஹிவால் பசுமாடு ஒன்று அவருக்கு அன்பளிப்பாகத் தரப்பட்டது. அதை நன்றியுடனும் மகிழ்ச்சியுடனும் பெற்றுக்கொண்ட அமைச்சர், தாம் மட்டும் விமான வழியாகப் புதுதில்லி திரும்பி விட்டார்.

இதையடுத்துப் பல மாதங்களுக்குப் பிறகு, தகவல்-ஒலிபரப்பு அமைச்சகத்துக்கு, வெளியுறவு அமைச்சகம், மத்திய நிதிஅமைச்சகம் ஆகியவற்றின் வழியாக ஒரு கோப்பு வந்தடைந்தது.

இந்திய - பாகிஸ்தான் எல்லையில் ஓரிடத்தில் பணிபுரிந்து வந்த சுங்கத்துறை அதிகாரி ஒருவரிடமிருந்து வந்த அவசரத் தந்தி, அந்தக் கோப்பில் இருந்தது.

பாகிஸ்தான் தரப்பில் ஸஹிவால் பசுமாடு ஒன்றும் கன்றுக்குட்டி ஒன்றும் இந்தியத் தரப்பிடம் ஒப்படைக்கப்பட்டன; ஆனால், தாய்ப் பசுவுக்கு மட்டும்தான் ஆவணங்கள் உள்ளன; கன்றை எப்படி அனுமதிப்பது? மேலும், தாய்ப்பசுவுக்கும் கன்றுக்கும் ஆகும் பராமரிப்புச் செலவை எந்தப் பிரிவிலிருந்து ஈடுகட்டுவது? போன்ற 'மிக முக்கிய' அம்சங்கள் கோப்பில் எழுப்பப்பட்டிருந்தன.

ஸஹிவால் பசு அன்பளிப்பாகத் தரப்பட்டு, 'சிவப்பு நாடா' நடவடிக்கைகள் முடிந்து, அது தரை வழியே வந்து சேருவதற்குப் பல மாதங்கள் ஆனபடியால், பசு, ஒரு கன்றையும் ஈன்றுவிட்டது!

ஒரு வழியாக, தகவல் - ஒலிபரப்பு அமைச்சகம், செலவை ஏற்றுக் கொண்டது. பின்னர், பசுவும் கன்றும், கர்னால் என்னுமிடத்தில் உள்ள புகழ் பெற்ற கால்நடை ஆராய்ச்சிப் பண்ணைக்கு அனுப்பப்பட்டன!

இப்போது அண்மையில் பாகிஸ்தான் சென்ற மத்தியத் தகவல் - ஒலிபரப்பு அமைச்சர் சுஷ்மா சுவராஜுக்கு அன்பளிப்பு எதையும் அளிக்கும் நிலையில் பாகிஸ்தான் இல்லை; பெற்றுக் கொள்ளும் நிலையில் நாமும் இல்லை!

- தி.கண்ணன்



"சம்பளம் ஒழுங்காக வருகிறதா? அது போதும். பிள்ளைகள் படித்தால் என்ன? படிக்கலைன்னா என்ன?' என்ற ஏனோ தானோ நிலை உருவாகி வருகின்ற ஆசிரியர் சமுதாயத்தில், பொன்மலர் ஓர் அதிசயம்.

ஸ்ரீவில்லிப்புத்தூரிலிருந்து 7 கி.மீ தொலைவில் உள்ள பூவாணி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி பழுதடைந்த கதவுகளுடன் பூட்டப்படாத நிலையில் இயங்கிக்கொண்டிருந்தது. கிராம மக்கள் தங்களின் விளை பொருட்களை உலர்த்தும் களமாகவும், இளைஞர்கள் சீட்டு விளையாடவும், படுத்துறங்கும் இடமாகவும் வைத்திருந்தனர்.

நான்கு ஆண்டுகளுக்கு முன் இடைநிலை ஆசிரியையாக பணிக்குச் சேர்ந்த பொன்மலரின் வரவு நிலைமையைத் தலைகீழாக மாற்றிவிட, மாதிரி பள்ளியாக நிலை கொண்டுவிட்டது.



• பொன்மலர்

டீச்சர்!

"முதல்நாள் வகுப்பறைக்குள் வந்தவுடனே பிள்ளைகள் டிரஸ் போடாமலும், குளிக்காமலும் வந்திருந்தாங்க. முதல் வேலையாக, பிள்ளைகளைச் சுத்தமாக பள்ளிக்கு வரச் செய்தேன். வகுப்பறைகளுக்கு என்னுடைய சொந்தச் செலவில் வெள்ளையடித்து, கதவுகள், ஜன்னல்களைச் சீர் செய்தேன். அவ்வளவுதான். கிராமத்து மக்கள் எல்லாம் திரண்டுவந்து தங்களுடைய சுதந்திரம் பறிபோனதாக எண்ணி என்னை எதிர்க்க ஆரம்பிச்சாங்க... மொட்டைக் கடிதம் எழுதி என்னை மாற்ற முயற்சி செய்தாங்க... நான் மனம் தளரவில்லை" என்கிறார் பொன்மலர்.

எந்த ஒரு பெரிய மனிதரோ, அரசியல் பிரமுகரோ அறிமுகம் இல்லாத நிலையில் கட்டடப் பொறியாளர் ஒருவர் மூலம் மதிமுக தலைவர் வை.கோ.வின் எம்.பி நிதியிலிருந்து ஒன்றரை இலட்சம் ரூபாய் பெற்று பள்ளிக்கு, சுற்றுச் சுவர் எழுப்பி, வேம்பு, பலா, இலவம் என்று மரக்கன்றுகளை நட்டு, பராமரிப்பதற்கு முந்நூறு ரூபாய் மாதச் சம்பளத்தில் ஒரு பெண்ணையும் நியமித்துள்ளார். பள்ளிக்குக் கூடுதலாக ஒரு பட்டதாரி ஆசிரியரை எண்ணூறு சம்பளத்தில் நியமித்துள்ளார். மாதத் தேர்வில் நல்ல மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு பரிசுப் பொருட்களும் வாங்கிக் கொடுப்பதுண்டாம்.

அதிக வசதியில்லாத நெசவாளர் குடும்பத்தில் பிறந்த ஏழு பிள்ளைகளில் ஆறாவது பெண் பொன்மலர்.

"எனக்குப் படிக்க ஆசை. என்னுடைய மூத்த அண்ணன் தான் என்னைப் படிக்க வைத்தார். அப்போதே எனக்குள் ஏழைக் குழந்தைகளுக்கு ஏதாவது நல்லது செய்ய வேண்டும் என்று தோன்றிவிட்டது. என்னுடைய எண்ணத்தைச் செயலாக்க என்னுடைய கணவரும் உதவுகிறார். என்னுடைய சம்பளத்தில் ஒவ்வொரு மாதமும் இரண்டாயிரம் ரூபாய் பள்ளிக்குச் செலவு செய்கிறேன். எந்த மறுப்பும் சொல்வதில்லை" என்று சொல்லும் இவரது கணவர் குருசாமி ஸ்ரீவில்லிப்புத்தூரில் ஜவுளிக்கடை வைத்துள்ளார்.

"சிவப்ரியான்னு ஒரு பொண்ணு. அடிக்கடி பள்ளிக்கு வராமல் இருந்தாள். பெற்றோரை அழைத்து விவரம் கேட்டேன். அப்பொழுதுதான் தெரிந்தது சிவப்ரியாவுக்கு இதயத்தில் ஓட்டை இருக்கிற விஷயம். உடனே தெரிந்தவர்கள் மூலமும், நாளிதழ்களில் விளம்பரம் செய்தும் இருபதாயிரம் ரூபாயைத் திரட்டி அறுவைச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தேன். இன்று நல்ல நிலையில் படித்து வருகிறாள் சிவப்ரியா" என்றார் தாய்ப் பாசத்துடன்.

5ம் வகுப்புவரை படிக்கின்ற ஒவ்வொரு குழந்தைக்கும் ஆண்டு ஒன்றுக்கு ஆறு ரூபாய் செலுத்தி சுமார் 145 குழந்தைகளுக்கு விபத்து காப்பீட்டு திட்டத்தை, தமது சொந்த செலவில் செய்ய உள்ளார் பொன்மலர்.

சந்திப்பு - படங்கள்:

சிங்காரம்

சிவகாமியின் சபதம்

முப்பத்து எட்டாம் அத்தியாயம்

சந்திரன் சாட்சி

இரவு ஜாம நேரத்துக்கு மேல் மாமல்லர், சிவகாமி, ஆயனர் ஆகியோர் திரும்பிக் கிராமத்தை அடைந்தபோது, நாவுக்கரசர் மடத்து வாசலில் பெருங்கூட்டம் நிற்பதைக் கண்டார்கள்.

நிலாவொளியில் அந்தக் கூட்டத்தின் மத்தியில் கத்தி கேடயங்களும், வாள்களும், வேல்களும் மின்னின.

மூன்று பேரும் துணுக்கமடைந்து வீதி முனையில் கோயில் மதில் ஓரமாக ஒதுங்கி நின்றார்கள். மடத்து வாசலில் நின்ற வீரர்கள் யாராயிருக்கும் என்ற கேள்வி மூவருடைய மனத்திலும் எழுந்தது.

அன்று காலையில் குண்டோதரனுக்கும் மாமல்லருக்கும் ஒரு சிறு வாக்குவாதம் நடந்தது. மேலே நடக்க வேண்டிய காரியத்தைப் பற்றித்தான். வராக நதியில் வெள்ளம் வடிந்து விட்டபடியால், பானைத் தெப்பம் ஒன்று கட்டி, அதில் தம்மை வராக நதிக்கு அக்கரையில் கொண்டு போய்விட்டு விட்டுக் குண்டோதரன் திரும்பி வந்துவிட வேண்டும் என்றும்; தாம் அங்கிருந்து காஞ்சிக்குப் போய் விடுவதென்றும், குண்டோதரன் ஆயனருக்கும் சிவகாமிக்கும் துணையாக மண்டபப்பட்டுக் கிராமத்திலேயே சில காலம் இருக்க வேண்டும் என்றும் மாமல்லர் சொன்னார்.

குண்டோதரன் இதை மறுத்து, தான் முதலில் அக்கரை சென்று பல்லவ சைனியத்தைப் பற்றித் தகவல்

அமரர் கல்கி

விசாரித்து வருவதாகவும் அதற்குப் பிறகு என்ன செய்வதென்பதை முடிவு செய்து கொள்ளலாமெனவும் கூறினான். மாமல்லரும் இன்னும் ஒருநாள் சிவகாமியுடன் இருக்கலாம் என்ற ஆசையினால் அதற்கு இணங்கினார்.

ஆனாலும் அன்றைக்கெல்லாம் அவருக்கு அடிக்கடி மனத்தில் பரபரப்பு உண்டாகிக் கொண்டிருந்தது. சாயங்காலம் ஆக, ஆக, "குண்டோதரன் ஏன் இன்னும் வரவில்லை?" "எத்தனை நாள் இங்கே சும்மா உட்கார்ந்திருப்பது?" என்ற எண்ணங்கள் அவ்வப்போது அவர் உள்ளத்தில் தோன்றி அல்லல் செய்தன.

மோகன நிலவொளியில் சிவகாமியுடன் பேசிக் கொண்டிருந்தபோது கூட நடு நடுவே மாமல்லரின் மனம், "குண்டோதரன் இதற்குள் வந்திருப்பானோ? என்ன செய்தி கொண்டு வந்திருப்பான்?" என்று எண்ணமிட்டுக் கொண்டுதான் இருந்தது.

இப்போது மடத்து வாசலில் கூட்டத்தைக் கண்டதும், அதிலும் வாள்கள் வேல்களின் ஒளியைக் கண்டதும், மாமல்லருடைய மனத்தில் ஏக காலத்தில் பல கேள்விகள் எழுந்தன. இவர்கள் யார்? பகைவர்களா? பல்லவ வீரர்களா? பல்லவ வீரர்களாயிருந்தால் ,இங்கு நாம் இருப்பது தெரிந்து வந்திருக்கிறார்களா? தெரிந்தவர்களாயிருந்தால், திடீரென்று நம்மைக் கண்டதும் கோஷம் இடுவார்களே? கிராமவாசிகளுக்குத் தெரிந்துபோய் விடுமே?

மாமல்லருடைய மனத் தயக்கத்தையும் அதன் காரணத்தையும் ஒருவாறு அறிந்து கொண்ட ஆயனர், "பிரபு! தாங்களும் சிவகாமியும் சற்று இவ்விடமே நில்லுங்கள். நான் முன்னால் சென்று வந்திருப்பவர்கள் யார் என்று பார்க்கிறேன்" என்று கூறிச் சென்றார்.


சிவகாமியும் மாமல்லரும் கோயில் மதில் ஓரத்தில் மதிலுக்குள்ளிருந்து கொப்புங் கிளையுமாய் வெளியே படர்ந்திருந்த மந்தார மரத்தின் அடியில் நின்றார்கள். அப்போது மாமல்லர் மடத்து வாசலில் நின்ற கூட்டத்திலிருந்து வந்த சப்தத்தைக் காது கொடுத்துக் கவனமாய்க் கேட்டார். கலகலவென்று எழுந்த பல பேச்சுக் குரல்களுக்கிடையில் தளபதி பரஞ்சோதியின் குரல் கணீரெனக் கேட்டது. கிராமவாசிகள் பலர் ஏக காலத்தில் மறுமொழி கூறினார்கள். அந்தப் பல குரல்களுடன் சுகப்பிரம்ம முனிவரும் சேர்ந்து, "மாமல்லா! மாமல்லா!" என்று கீச்சுக் குரலில் கூவிய சப்தம் எழுந்தது.

மாமல்லரின் மனக் குழப்பமெல்லாம் ஒரு நொடியில் நீங்கிவிட்டது. "நமது தளபதி பரஞ்சோதிதான் வந்திருக்கிறார்! வா! சிவகாமி! நாமும் போகலாம்!" என்று அவர் உற்சாகம் ததும்பும் குரலில் கூறி மேலே நடக்கத் தொடங்கியபோது, சிவகாமி அவருடைய கரத்தை மெதுவாகத் தொட்டு, "பிரபு!" என்றாள். மந்தார மரத்துக் கிளைகளின் வழியாக வந்த பால் நிலவின் ஒளியில் அவளுடைய கண்களில் துளித்திருந்த இரு கண்ணீர்த் துளிகளும் முத்துப் போல் பிரகாசித்ததை மாமல்லர் பார்த்தார்.

"என் கண்ணே! இது என்ன?" என்று மாமல்லர் அருமையுடன் கூறி, தமது அங்கவஸ்திரத்தினால் கண்ணீரைத் துடைத்தார்.

"உங்கள் தளபதியின் குரல் கேட்டதும் இந்தப் பேதைப் பெண் அவசியமில்லாமல் போய் விட்டேனல்லவா?" என்று சிவகாமி விம்மினாள்.

இவ்விதம் நேரும் என்று சற்றும் எதிர்பாராத மாமல்லர் அவளுக்கு எவ்விதம் தேறுதல் சொல்லுவதென்று தெரியாமல் சற்றுத் திகைத்து நின்றார்.



பின்னர், "என் ஆருயிரே! ஏன் இவ் விதம் பேசுகிறாய்? சற்று முன்னால் நீதானே உன் வாயார வீர மொழிகள் புகன்று என்னைப் போர்க்களத் துக்குப் போகும்படி ஏவினாய்? போக வேண்டிய சமயம் வந்திருக்கும்போது இவ்விதம் நீ கண்ணீர் விட்டால், நான் என்ன தைரியத்துடன் போவேன்?" என்று கூறி, சிவகாமியின் அழகிய முகவாயைப் பிடித்து நிமிர்த்தினார். அப்போது சிவகாமியின் முகத்தில் நிலாமதியின் கிரணங்கள் நேராக விழ, அவளுடைய இயற்கைப் பொன்னிற முகம் தந்த நிறம் பெற்றுத் திகழ்ந் தது.

சிவகாமி அவருடைய கரத்தைத் தன் முகவாயிலிருந்து எடுத்துத் தன் கண்களிலே சேர்த்துக் கண்ணீரால் நனைத்தவண்ணம் "இந்தப் பேதை நெஞ்சம் ஏனோ காரணமில்லாத பீதி கொண்டிருக்கிறது. என் வாணாளின் இன்பம் இன்றோடு முடிந்துவிட்டது போல் தோன்றுகிறது. பிரபு! என்னை மறக்க மாட்டீர்கள் அல்லவா? மத்த யானையின் மேலேறி யுத்த களத்தில் சத்ருக்களைத் துவம்ஸம் செய்யும் போதும் அகில சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாகி மணிமுடி தரித்து ரத்தின சிங்காதனத்தில் அமர்ந்திருக் கும்போதும் இந்த ஏழைச் சிற்பியின் மகளை மறவாமலிருப்பீர்கள் அல் லவா?" என்று கேட்டாள்.

மாமல்லர் வானக் கடலிலே மிதந்த பூரணச் சந்திரனைச் சுட்டிக்காட்டி, "சிவகாமி! அதோ, அமுத நிலவைச் சொரிந்துகொண்டு வானவீதியில் பவனி வரும் சந்திரன் சாட்சியாகச் சொல்கிறேன், கேள்! இந்த ஜன்மத்தில் உன்னை நான் மறக்க மாட்டேன் என்று வாக்குறுதி கூறுவதில் பொருள் இல்லை. நான் முயன்றாலும் அது முடியாத காரியம். உன் மனத்தில் கார ணம் இன்றித் தோன்றும் பீதிக்கு ஏதா வது உண்மையில் காரணம் இருக்கு மானால் ஒன்றே ஒன்றுதான் இருக்க முடியும். ஒருவேளை போர்க்களத்தில் நான் வீரமரணம் அடைவேன்..."

"ஐயோ! அப்படிச் சொல்லாதீர் கள். ஒருநாளும் அப்படி நேராது!" என்று விம்மலுடன் உரத்துக் கூவி னாள் சிவகாமி.

மாமல்லர் சொன்னார்: "அப்படி நேரவில்லையென்றால், உன்னை நான் மறப்பது என்ற பேச்சுக்கே இட மில்லை. யுத்தமெல்லாம் முடிந்து இந் தப் பரந்த பல்லவ சாம்ராஜ்யத்துக்குச் சக்கரவர்த்தியாகி நான் ரத்தின சிங்காதனத்தில் வீற்றிருக்கும் காலம் வரும்போது, நீயும் என் அருகிலேதான் வீற்றிருப்பாய். ஆனால் போர்க்களத் துக்குப் போகும்போது, வெற்றி அல் லது வீர மரணத்தை எதிர்பார்த்துத் தான் போக வேண்டும். நான் போர்க் களத்தில் உயிர் துறக்க நேர்ந்தால்தான் என்ன, சிவகாமி! எதற்காகக் கவலைப் பட வேண்டும்? இந்த ஒரு பிறப்போடு, நமது காதல் முடிந்துவிட்டதா? ஒரு நாளும் இல்லை. போர்க்களத்தில் உயிர் போகும்போது எனக்கு நினை விருந்தால் பிறைசூடும் பெருமானைத் தியானித்து, 'இந்தப் புண்ணிய பாரத பூமியிலே பாலாறும் பெண்ணையும் காவேரியும் அமுதப் பிரவாகமாய்ப் பெருகும் தமிழகத்திலே, மீண்டும் வந்து பிறக்கும் வரம் தாருங்கள்' என்று கேட்பேன். அவ்விதமே இந்தத் தமிழகத்தில் பிறந்து, ஊர் ஊராய் அலைந்து திரிவேன். பூர்வ ஜன்மங் களிலே நான் காதலித்த சௌந்தர்ய வடிவத்தை, மோகன உருவத்தை, ஜீவனுள்ள தங்க விக்கிரகத்தைத் தேடிக்கொண்டு அலைவேன். இம் மாதிரி கார்த்திகை மாதத்துத் தாவள்யமான நிலவொளியிலே உன்னை மீண்டும் காண்பேன். கண்டதும் தெரிந்து கொள்வேன் நீதான் என்று. 'இந்தப் பெண்ணின் முகத்திலே ததும் பும் சௌந்தர்யம், இவளுக்குச் சொந்தமானதில்லை. பல ஜன்மங் களிலே தொடர்ந்து வந்த என் காத

வின் சக்திதான் இந்த முகத்துக்கு இந்த மோகனத்தை அளித்திருக்கிறது' என்று தெரிந்து கொள்வேன். உன் கண்களில் ஜொலிக்கும் மின் ஒளியிலே என் உயிரின் கடலைக் கண்டு தெரிந்துகொள்வேன். உன் இதழ்களின் புன்னகையில் என் இருதயத்தின் தாபம் தணிவதை உணர்ந்து அறிந்துகொள்வேன். இவள்தான் என் சிவகாமி! ஜன்ம ஜன்மங்களிலெல்லாம் என் உயிரிலே கலந்த இன்ப ஒளி இவள்தான்; சரத்கால சந்திரனின் மோகன நிலவில் நான் பார்த்துப் பார்த்து மகிழ்ந்த 'சௌந்தரிய வதனம் இதுதான்! இந்தக் கருங்குவளைக் கண்களிலேதான் என்னுடைய விழிகளாகிய வண்டுகள் ஓயாது மொய்த்து மதுவருந்தி மயங்கின!'' என்று தெரிந்து தெளிவேன். சிவகாமி, வாக்குறுதி போதுமா? திருப்தியடைந்தாயா?''

மாமல்லரின் கவி இருதயத்திலிருந்து பிரவாகமாய்ப் பொழிந்த அமுதச் சொற்கள் சிவகாமியைத் திக்குமுக்காடச் செய்தன. அவளுடைய தேகம் சிலிர்த்தது! புளகாங்கிதம் உண்டாயிற்று. தரையிலே நிற்கிறோமா, வானவெளியில் மிதக்கிறோமா என்று தெரியாத நிலையை அவள் அடைந்தாள்.

திடீரென்று கலகலத்வனியையும், ''அதோ மாமல்லர்!'' ''அதோ பல்லவ குமாரர்!'' என்ற குரல்களையும், ''மாமல்ல பல்லவேந்திரர் வாழ்க!'' ''வாழ்க! வாழ்க!'' என்ற கோஷங்களையும் கேட்டுச் சிவகாமி சுயப்பிரக்ஞை அடைந்தாள்.

''எனக்குத் திருப்திதான்! ஜனங்கள் இங்கு வருவதற்குள் தாங்கள் முன்னால் செல்லுங்கள்!'' என்று கூறினாள்.

முப்பத்து ஒன்பதாம் அத்தியாயம்

''விடு படகை!''

கட்டத்தில் எல்லாருக்கும் முன்னதாகத் தளபதி பரஞ்சோதி விரைந்து வந்து மாமல்லருக்கு வணக்கம் செலுத்தி, ''பிரபு! இதென்ன இப்படி செய்துவிட்டீர்கள்? எங்களையெல்லாம் கதிகலங்க அடித்துவிட்டீர்களே?'' என்றார். மாமல்லர் பரஞ்சோதியை ஆர்வத்துடன் ஆலிங்கனம் செய்துகொண்டு, ''உங்களுக்கெல்லாம் ரொம்பவும் கவலைதான் அளித்து விட்டேன். அப்புறம் நீங்கள் என்ன செய்தீர்கள்? வெள்ளத்தினால் நமது படையில் சேதம் அதிகம் உண்டா?'' என்று கேட்க, பரஞ்சோதி, ''சூலபாணியின் அருளால் நல்ல சமயத்தில் எச்சரிக்கப்பட்டோம். அதனால் உயிர்ச்சேதம் ஒன்றுமில்லை, எத்தனையோ விஷயங்கள் சொல்ல வேண்டும்; பேச வேண்டும்; வாருங்கள். பிரபு! இந்தக் கோயிலுக்குள் சிறிது போய்ப் பேசலாம்!'' என்று கூறினார். இருவரும் கை கோத்துக் கொண்டு உற்சாகமாக நடந்து சென்று முன்கோபுர வாசல் வழியாகக் கோயிலுக்குள் பிரவேசிக்க பின்னோடு கூட்டமாக வந்த கிராமவாசிகளைக் கோயிலுக்குள் செல்லாதபடி வீரர்கள் தடுத்து நின்றார்கள்.

மாமல்லரும் பரஞ்சோதியும் அவ்விதம் குதூகலமாகப் பேசிக்கொண்டு போனதையும், சற்றுப் பின்னால் மரத்தடியில் நின்ற தன்னை யாரும் கவனியாததையும் கண்ட சிவகாமிக்

குப் பெரும் மனோவேதனை உண்டா யிற்று. ஆயனரும் அவரோடு ரதியும் சுகரும் மட்டும் சிவகாமி நிற்குமிடம் வந்தார்கள். "இனிமேல் நீங்கள் தான் என் உண்மையான சிநேகிதர்கள்!'' என்று கூறுவதுபோல், ரதியை யும் சுகரையும் சிவகாமி தடவிக் கொடுத்தாள். முன்னால் சென்ற கூட்டத்தின் ஆரவாரம் சற்று அடங் கியதும் இவர்கள் மடத்தை நோக்கிச் சென்றார்கள்.

வழியில் கோயில் வாசலை நெருங்கிச் சென்றபோது, அங்கே கூடியிருந்த கிராமவாசிகள் சிலர்





பேசிக்கொண்டிருந்த வார்த்தைகள் சிவகாமியின் காதில் விழுந்தன.

"பல்லவ குமாரர் இப்படி நம்மை ஏமாற்றி விட்டாரே?"

"நான்தான் சொன்னேனே, முகத்தில் இராஜ களை வடிகிறதென்று? கேவலம் சிற்பியின் முகமா அது?"

"தகப்பனாரைப் போலவே புதல்வரும் வேஷம் போடுவதில் வெகு சமர்த்தர் போலிருக்கிறது!"

"ஆயனர் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகவே இந்த வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டாராமே?"

"என்னதான் அபிமானம் இருந்தாலும் அவ்வளவு தூரத்துக்குப் போயிருக்கக் கூடாது. ஏதாவது அபாயம் நேர்ந்திருந்தால் பல்லவ சாம்ராஜ்யத்தின் கதி என்ன ஆகிறது?"

"மாமல்லரை விடப் பரஞ்சோதி பெரிய வீரராமே?"

"அதெல்லாம் இல்லை; இரண்டு பேரும் சமம்தான்!"

"யார் சொன்னது? மாமல்லருக்குச் சமமான வீரர் உலகத்திலேயே கிடையாது. பரஞ்சோதியை போர்க்களத்திற்குச் சக்கரவர்த்தி அழைத்துப் போயிருந்தார். அதனால் அவருடைய வீரம் வெளியாயிற்று. மாமல்லர் முதன் முதலில் புள்ளலூர்ச் சண்டையில்தானே கலந்துகொண்டார்? அங்கே பரஞ்சோதி இருந்த இடம் தெரியாமல் போய் விடவில்லையா?"

"அவர்களுக்குள்ளே வித்தியாசமே கிடையாதாம். அவ்வளவு அந்நியோன்னிய நண்பர்களாம். நாம் ஏன் வித்தியாசப்படுத்திப் பேச வேண்டும்?"

"எது எப்படியாவது இருக்கட்டும். இரண்டு பேரும் நம் ஊரில் விருந்துண்ணாமல் திரும்பிப் போகக் கூடாது!"

இந்த மாதிரி பலவிதமான பேச்சுக்களையும் காதில் வாங்கிக்கொண்டு சிவகாமி மடத்துக்குப் போய்ச் சேர்ந்தாள். அவளுடைய உள்ளம் அளவில்லாத பெருமையையும் சொல்ல முடியாத வேதனையையும் மாறி மாறி அடைந்துக்கொண்டிருந்தது.

கிராமவாசிகளின் விருப்பத்தின்படியே மாமல்லரும் பரஞ்சோதியும் மற்ற வீரர்களும் கிராமவாசிகள் அவசரமாகப் பக்குவம் செய்து அன்புடன் அளித்த விருந்தை உண்டார்கள்.

விருந்து முடியும்போது அர்த்த ராத்திரிக்கு மேலே ஆகிவிட்டது. பொழுது விடிந்த பிறகு போகலாம் என்று கிராமப் பெரியோர்கள் கேட்டுக்கொண்டது பயன்படவில்லை. இரவுக்கிரவே கிளம்ப வேண்டியது அவசியமாயிருந்தது.

புறப்படுகிற சமயம் வந்தபோது, ஆயனரிடமும் சிவகாமியிடமும் விடைபெற்றுக் கொள்ள மாமல்லர் மடத்துக்குள்ளே சென்றார்.

"ஆயனரே! உங்களிடம் விடைபெறுவது எனக்குச் சங்கடமாய்த்தானிருக்கிறது. ஆயினும் என்ன செய்யலாம்; புலிகேசியின் படைகள் காஞ்சியை நெருங்கி வந்து கொண்டிருக்கின்றனவாம். உடனே வரும்படி சக்கரவர்த்தி சொல்லியனுப்பியிருக்கிறார்" என்றார் மாமல்லர்.

மாமல்லரிடம் அளவில்லாத அன்பும் மரியாதையும் கொண்டவரான ஆயனர், "பிரபு! இவ்வளவு நாள் தாங்கள் இங்கிருந்தது நாங்கள் செய்த பாக்கியம். இதற்கு மேல் நாங்கள் ஆசைப்படக் கூடாது. போய் வாருங்கள். உங்களை வழி அனுப்ப நாங்களும் நதிக்கரை வரையில் வரலாமல்லவா?" என்றார்.

"அவ்வளவு தூரம் வருவது அவசியமில்லை. இஷ்டப்பட்டால் வாருங்கள்!" என்றார் மாமல்லர்.

மாமல்லர் சிவகாமியை நோக்கிய போது, அவள் வேறு பக்கம் பார்த்துக்கொண்டிருந்தாள்.

அந்த அபூர்வமான காதலர்க்கு



அருள்வாக்கு



தேவை என்று ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு விட்டோமானால் அப்புறம் அதைப் பூர்த்தி செய்து கொள்ளும் ஓயாத பிரயாசை ஏற்படத்தான் செய்கிறது. இது திருப்திக்கும் சாந்திக்கும் பங்கம்தான். போதுமென்ற மனமே பொன்னான திருப்தியைத் தருவது. சமீபகாலம் வரை படாடோப (luxury) வஸ்துக்களாக இருந்த ரேடியோ, ஃபோன் மாதிரியானவற்றைக்கூட இப் போது அவசியமாக்கிக் கொண்டு (necessaries), இவை கிடைக்கவில்லையே என்று தாபப்படுவதும், அதிருப்திப் படுவதுமாக இருக்கிறார்கள். தேவையை எவ்வளவுக்கு எவ்வளவு அதிகப்படுத்திக் கொள்கிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு சாந்தி குறையும். சௌக்கியம் குறையும். நிம்மதியும் திருப்தியும் குறையும். தரித்திரம், துக்கம் உண்டாகும். Standard of living என்பதை 'வாழ்க்கைத் தரம்' என்று மொழி பெயர்ப்பதே சரியல்ல. 'வாழ்க்கைத் தரம்' என்பது மிகவும் உயர்ந்த விஷயம். நல்ல குணங்களுடன், ஈசுவர பக்தியுடன் வாழ்கிற வாழ்வே 'தரமான' வாழ்வு. வாழ்க்கைத் தரத்தை Quality of life என்று சொல்ல வேண்டும். தற்போது பொருளாதாரத் தேவைகளை அதிகமாக்கிக் கொண்டே போவதைத்தான் 'வாழ்க்கைத் தரம்' என்கிறார்கள். இதைவிட மனசினால் உயர்ந்து, வாஸ்தவமாகவே வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதைத்தான் பெரிதாக எண்ண வேண்டும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

மத்தியில் திடீரென்று ஒரு திரை விழுந்துவிட்டது போலிருந்தது.

இரவு மூன்றாம் ஜாமம் முடியும் சமயத்தில், சந்திரன் மேற்கு வானவட்டத்தின் அடியில் பிரகாசித்துக் கொண்டிருக்கும்போது, வராக நதியில் ஆயத்தமாக நின்ற படகுகளில் மாமல்லர், பரஞ்சோதி முதலியோர் ஏறிக் கொண்டார்கள்.

கரையிலே கிராமவாசிகளும் ஆயனரும் சிவகாமியும் நின்றார்கள். இத்தனை நேரமும் எங்கேயோ போய் விட்டு அப்போதுதான் ஓட்ட ஓட்டமாய்த் திரும்பி வந்திருந்த குண்டோதரனும் பின்னால் நின்றான்.

நதிக்கரையில் மாமல்லர் சிவகாமியுடன் பேசுவதற்கு வசதி கிடைக்கவில்லை! படகில் ஏறிக் கொண்டதும் அவர் கரையிலிருந்த சிவகாமியை உற்று நோக்கினார்.

சிவகாமியும் அவரை அப்போது ஆர்வத்துடன் ஏறிட்டுப் பார்த்தாள்.

ஏதாவது சொல்ல வேண்டுமென்று மாமல்லருடைய உதடுகள் துடித்தன. ஆனால், வார்த்தை ஒன்றும் வரவில்லை.

தளபதி பரஞ்சோதி, விடு படகை!" என்று கட்டளையிட்டார்.

படகு சென்றதும், சிவகாமிக்கு தன் வாழ்நாளின் இன்பத்தையெல்லாம் அந்தப் படகு கொண்டு போவது போல் தோன்றியது.

(தொடரும்)

குருப்பெயர்ச்சி பலன்கள்

குருபகவான் சித்திரபானு வருஷம் ஆனி மாதம் 20ம் தேதி 41 நாழிகை 31 விநாடிக்கு மிதுனராசியிலிருந்து கடக ராசிக்குப் பிரவேசம்.

திருக்கணிதப்படி ஆனந்தபோதினி பஞ்சாங்கம்

நாம் காலங் காலமாக அனுஷ்டித்து வரும் நெ 28, வாக்கிய பஞ்சாங்கப் படி குரு 30.6.2002 அன்று கடக ராசிக்குப் பிரவேசம்.

இங்கு திருக்கணிதப்படியே பலன்கள் தரப்படுகின்றன.

ஓம் சாந்தி

குரு பெயர்ச்சி – மிதுனம், கன்னி, விருச்சிகம், மகரம், மீன ராசி – அன்பர்களுக்குச் சுபயோக பலன்கள். கடகம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம், மேஷம் இந்த ராசிக்காரர்களுக்குச் சாதகமான பலன்களைக் கூறுவதற்கில்லை என்றாலும் மேஷம், கடகம், சிம்மம், தனுசு இந்த ராசி அன்பர்களுக்கு சற்று அனுகூலமும், துலாம், கும்பம், ராசி அன்பர்களுக்குப் பாதகப் பலன்கள் சற்று கூடும். ஆயினும் மற்ற கிரகங்களின் சஞ்சாரம் ஜென்ம கால ஜாதக கிரக அமைப்பு, நடக்கும் திசை/புத்தி இவற்றைக் கொண்டு பலன்கள் நிர்ணயிக்கப்படும்.



மேஷம்: முதல் இரண்டரை மாதம், குருபகவான் இந்த ராசியில் உச்சமாயிருந்து மற்ற கிரகங்களின் சஞ்சாரப்படி, ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி வரை சுபப் பலன்கள் தருகிறார். ஆகஸ்ட் முதல் நவம்பர் வரை மேஷ ராசிக்காரர்கள் எந்தக் காரியத்திலும் விழிப்புடன் செயலாற்றுவது நல்லது. சொத்து, வீடு, ரியல் எஸ்டேட் போன்ற இனங்களில் ஒருமுறைக்கு இருமுறை சிந்தித்து செயல்படுவது அவசியம். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். டிசம்பர் மாதம் குரு வக்கிரம் அடைவதால், டிசம்பர் முதல் பிப்ரவரி வரை எல்லா செயல்பாடுகளிலும் எச்சரிக்கை தேவை. தொழில், வியாபாரம் இவற்றில் சுணக்கம் ஏற்படும். பணம், கொடுக்கல் – வாங்கல் விஷயத்தில் கவனம் தேவை. மார்ச் முதல் ஏப்ரல் வரை வாகனம், பிரயாணம் இனங்களில் எச்சரிக்கையாக இருக்கவும். ஏப்ரல் 4ம் தேதி முதல் குரு வக்கிர நிவர்த்தி ஆவதால், சுபப்பலன்களே ஏற்படும். பொருளாதார நிலைமை வெகுவாக முன்னேறும். பிரமுகர்கள், முக்கியஸ்தர்கள் தொடர்பு ஏற்படும், ஆதாயமும் அனுகூலமும் ஏற்படும், தாய், தாய்வழி உறவினர்களால் சிறுசிறு பிரச்னைகள் ஏற்படும்.

மேஷ ராசி உடைய பெண்களுக்கு, உற்சாகமான காலம். குடும்பத்தில் மன நிறைவும், தாம்பத்திய சந்தோஷமும் இருக்கும். திருமணம் ஆகாதவர்களுக்கு, சுப காரியம் நடக்கவும், குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு, தொட்டில் கட்டும் யோகமும் அமையும்.

மாணவர்கள் படிப்பில் சுட்டிகையாகத் திகழ்வார்கள். வெளிநாட்டுப் படிப்பு சித்திக்கும்.

வியாபாரிகளுக்கு முன்னேற்றமான காலம். தாமதமான கடன்கள் வசூலாகும். தெய்வபக்தி நலமே தரும்.

வாழ்க வளமுடன்!

ரிஷபம்: இரண்டாமிடத்தில் இருக்கும் குரு பகவான், 3ம் இடத்துக்குப் போவதால், குடும்

பத்தில் பிரச்னைகள் ஏற்படும். கணவன் – மனைவி இடையே கருத்து வேறுபாடு தோன்றி சிறுசிறு பூசல்களை உருவாக்கும். உடன் பிறந்தவர்களிடம் பேசும்போது நிதானமும், பொறுமையும் தேவை. வீண் மனஸ்தாபம் ஏற்படும். திடீர் பகைவர்கள் முளைப்பார்கள் என்பதால், அறிமுகமில்லாத ஆட்களிடம் பழகும்போது எச்சரிக்கை தேவை. ஒரு சிலருக்கு அசுப சம்பவங்களில் பங்கு கொள்ளவும் நேரிடும். கொடுக்கல் வாங்கலில் நலமில்லை. எனவே பணம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் யாரையும் நம்ப வேண்டாம்.

உத்தியோகஸ்தர்களுக்கு, அலுவலகத்தில் சுமுகமான சூழ்நிலை இருக்காது.

குடும்பத்தில் பெண்களால் பிரச்னைகள் ஏற்படும். மனநிம்மதி இல்லாமல் தவிக்க நேரிடும்.

அரசாங்கம், அரசுப் பணியாளர்கள் விழிப்புடன் செயல்படுவது அவசியம். உத்தியோகத்தில் திடீர் இடமாற்றம், விருப்பமில்லாத இடத்துக்கு மாறுதல் என சங்கடங்கள் நேரும்.

வாகனம், வீடு, நிலம் ஏதாவது வாங்கும் எண்ணமிருந்தால் தள்ளிப் போடுங்கள். இது உகந்த தருணமல்ல.

டிசம்பர் முதல் குரு வக்கிரம் என்பதால், இதுவரை இருந்து வந்த மன உளைச்சல், பிரச்னைகள் நீங்கி நல்ல பலன்கள் நடக்க ஆரம்பிக்கும். ஜனவரி முதல் ஏப்ரல் வரை பொருளாதார மேன்மை, தொழில் முன்னேற்றம் என வளர்ச்சி ஏற்படும். ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை குடும்பத்தில் மறுபடியும் பூசல்கள், கணவன் – மனைவி பிரச்னை, பிள்ளைகளால் மனவருத்தம் போன்றவை ஏற்படும். இந்த ராசிக்காரர்கள் சதா குரு பகவானைத் தியானம் செய்து வருதல் அவசியம்.

நலமே விளைக!

மிதுனம்: ஜன்மராசியில் உலவி வந்த குரு பகவான், தன் உச்ச வீடான தனஸ்தானமாகிய கடக ராசிக்குப் பிரவேசம். கடந்த ஓராண்டு காலமாக இருந்து வந்த அலைச்சல், ஸ்திரமின்மை, ஏமாற்றங்கள் எல்லாமே மறையும். மனத்துக்கினிய திருப்பங்களைத் தருவார். முக்கியமாக ஜூலை முதல் செப்டெம்பர் வரை குடும்பத்தில் சந்தோஷம், பொருளாதார ஏற்றம் போன்றவை நிகழும். தள்ளிப் போன திருமணம் நடக்கும். பிரிந்து போன உறவினர்கள் மீண்டும் இணைவார்கள்.

தொழில் ரீதியாக தொட்டதெல்லாம் பொன்னாகும். விவசாயிகள் ஏற்றம் பெறுவார்கள். கூட்டுத் தொழில் லாபம் தரும். கடன்கள் வசூலாகும்.

டிசம்பர் முதல் பிப்ரவரி வரை மகிழ்ச்சிகரமான சூழ்நிலையே அமையும் என்றாலும், குரு வக்கிரத்தால் சிறு சிறு பிரச்னைகள் நெருஞ்சி முள் போல உறுத்தத்தான் செய்யும். தீயவர்களின் சகவாசமோ, தீயப்பழக்க வழக்கங்களோ இந்தக் கால கட்டத்தில் கூடவே கூடாது. வாகனம், பிரயாணம் போன்றவற்றில் மிகவும் எச்சரிக்கை தேவை.

குறிப்பாக, வியாபாரிகள் பணம் கொடுக்கல் வாங்கல் விஷயத்தில் விழிப்புடன் இருக்க வேண்டும்.

பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை பெண்களுக்கு உகந்த காலம். ஆடை ஆபரணச் சேர்க்கை நிகழும். வாழ்க்கையில் வசதி பெருகும்.

ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை, மீண்டும் நிலைமை சீரடையும். அரசியல்வாதிகளின் முயற்சிகள் யாவும்



வரவேற்பு பெறும். வாக்கு சாதுரியத்தால் நினைத்ததைச் சாதிப்பார்கள்.

குருவருள் நிறைக!

கடகம்: உங்கள் ஜென்மராசிக்கு, குரு பிரவேசம் என்பதால், வீண் அலைச்சல், திடீர் இடமாற்றம் என சங்கடம் கொடுப்பார் என்றாலும், உங்கள் ராசிக்கு, குருபகவான் வாக்கியாதிபதியாக இருப்பதால் தாக்குப் பிடிக்கும் சாமர்த்தியத்தையும் தந்து விடுவார். பயப்பட வேண்டாம். சனி, ராகு 11ல் இருந்து, மற்ற கிரகங்களின் சஞ்சாரப்படி, பார்த்தால், ஆகஸ்ட் - செப்டெம்பர் வரை அதிகமான

பாதிப்புகள் ஏற்படாது. நவம்பர் மாதத்தில் முக்கியமான பணிகளில் அனுகூலம் ஏற்படும்.

டிசம்பர் மாதம் முதல், குரு வக்கிரம் என்பதால், ஏப்ரல் மாதம் வரை சுபச் செலவுகள் கட்டுக்கடங்காமல் ஏற்படும்.

அரசியல்வாதிகள் செல்வாக்குச் சற்றே சரியும். வியாபாரிகள் அகலக்கால் வைக்கக் கூடாது. தொழிலதிபர்கள் ஆற்றில் போட்டாலும் கூட அளந்தே போட வேண்டும். பொருளாதார கணக்கம் நெருக்கடி தரும்.

ஜூலை முதல் ஆகஸ்ட் வரை, குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். குறிப்பாக தாய், தந்தை, முதியோர் உடல் நலத்தில் அக்கறை தேவை. உடன் பிறந்தவர்களிடம் நிதானமாகப் பேசிப் பழகவும்.

இந்த ராசிக்காரர்களுக்கு குரு உச்சமாக இருந்தால், பாதகப் பலன்கள் குறைந்து, தெம்பளிக்கக் கூடிய நல்ல பலன்களே நடக்கும்.

கடக ராசிக்காரர்கள், திருச்செந்தூர் முருகனை வழிபடுவது அவசியம். முருகப் பெருமான் அருளால், மலைபோல் வந்த கஷ்டங்கள் பனி போல் நீங்கி சுகம் தரும்.

குரு தரிசனம், பாப விமோசனம்!



சிம்மம்: கடந்த ஒரு வருஷமாக, 11ல் இருந்த குருபகவான், நினைத்ததையெல்லாம் நல்லபடியாக நடத்திக் கொண்டிருந்தாரல்லவா? அவர் தற்போது விரயஸ்தானமாகிய கடகத்துக்குப் பிரவேசம். ஆயினும் குரு, உங்கள் ராசிக்கு எட்டுக்குடையவன் என்பதால் ஏற்றமே தருவார் என மகிழலாம்.

மக்கள் நலம் மேன்மையடையும். மக்களாலும் மேன்மைகள் வந்தடையும். உடன்பிறந்தவர்களால் நன்மைகள் நிகழும். குறிப்பாக மூத்த சகோதரி வழியில் அனுகூலமான பலன்கள் ஏற்படும்.

குடும்பத்தில் சுபச் செலவுகள் உண்டாகும். பெண்கள் மனம் போல மாங்கல்யம் பெறுவார்கள். கணவன் – மனைவி உறவு சீராக இருக்கும்.

அரசியல்வாதிகளுக்கும், உயர் பதவியில் இருப்பவர்களுக்கும் மிகவும் சோதனையான காலம். அரசு அலுவலகர்கள், பணியாளர்கள் கடமை தவறாது நடக்க வேண்டும். பண விஷயத்தில் நிதானம் இழக்க நேரிடும். எச்சரிக்கை!

டிசம்பர் முதல் ஏப்ரல் வரை எதிர்பாராத நிகழ்வுகளால் சங்கடங்கள், பொருள் இழப்பு, பதற்றம் ஏற்படலாம். முக்கியமான முடிவுகளை எடுக்கும்போது, அவசரம் கூடாது. வேகம் விவேகமாகாது. பெரியவர்களின் ஆலோசனைப் படியே நடக்க வேண்டும்.

ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை மீண்டும் அம்சமான பலன்கள் நடைபெறத் துவங்கும். குறிப்பாக, 'சிம்மத்தானோடு செருக்கே!' என்ற ஜோதிட மொழிக்கேற்ப, பகைவர்கள் காணாமல் போவார்கள். மனை, வீடு, வாகனம் வாங்கும் யோகம் சித்திக்கும். பெண்களுக்குத் திருமணம், மகப்பேறு போன்ற விசேஷங்கள் நடக்கும். மக்களால் பெற்றோர்கள் பெருமை அடைவார்கள்.

குருவே...நிதியே... சரணம்!

கன்னி: கடந்த ஓராண்டு காலமாக, 10ல் நின்ற குரு, 11-க்கு உச்ச ராசியான கடகத்துக்குப் பிரவேசமாகிறார். மகிழ வேண்டிய விஷயம். கௌரவம், பாதிப்பு, இடமாற்றம், பொருளாதார சிக்கல், பதவியில் தொல்லை, அலுவலக அல்லல் என மிகவும் நொந்து போயிருந்த நீங்கள் தற்போது, மிகவும் பிரகாசமான காலகட்டத்துக்கு வந்து விட்டீர்கள். இனி, நிம்மதி பெருமூச்சு விட்டு, வாழ்க்கையை இனிதாகத் தொடங்கலாம்.

குரு பகவான், 4க்கும் 7க்கும் உடையவனாக இருப்பதாலும், 11-ம் வீட்டில் இருப்பதாலும், 3,5,7ம் இடத்தைப் பார்ப்பதாலும், அதிர்ஷ்ட தேவதையின் இனிய பார்வை உங்களுக்குக் கிடைக்கும். இதனால் மனதுக்கினிய சம்பவங்கள் நடைபெறும். குறிப்பாக அலுவலகத்தில் இழந்த செல்வாக்கு மீண்டும் கிடைக்கும். முன்பை விட அதிக துணிச்சலும், ஆற்றலும், நிர்வாகத் திறமையும் கொண்டு செயல்படுவீர்கள்.

குடும்பத்தில் ஒற்றுமை திகழும். புத்திர வழியில் மன மகிழ்ச்சி கிடைக்கும்.

தன்னம்பிக்கை, தைரியம் இரண்டையும் தொலைத்து விட்டிருந்த நீங்கள் தெம்புடன்

நவக்கிரக பாராயணம்

ஓம் ஹ்ரீம் ஆதித்யாயச
சோமாய புதாயச குரு சுக்ர
சனிப்யச்ச ராஹுவே கேதவே நமஹ:

பிரதி தினமும் மேற்கண்ட ஸ்லோகத்தை, தூய மனத்தோடு 16 தடவை பாராயணம் செய்தால், நன்மையே நடக்கும்.

உயர்ந்து நிற்க தனவான்கள், முக்கியஸ்தர்கள் உதவுவார்கள்.

ஜூலை பிற்பகுதியிலிருந்து வீடு, மனை, வாகனம் என எதையும் தைரியமாக வாங்கலாம். அதிர்ஷ்டமே அழைக்கும். வேலையில்லாதவர்களுக்கு விருப்பமான வேலை வாய்க்கும்.

3ல் கேது என்பதால் மகான் தொடர்பு, ஞானிகள் தரிசனம் ஏற்படும். தல யாத்திரை போகவும், குல தர்ம பிரார்த்தனை நிகழ்த்தவும் ஏற்ற காலம்.

டிசம்பர் முதல் ஏப்ரல் வரை, புதிய முயற்சிகள் வேண்டாம். ஷ்யூரிடி, ஜாமீன் போன்றவற்றில் கையெழுத்திடக் கூடாது.

ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை, பெண்களுக்கு நல்ல நேரம். நினைத்தது நடக்கும். புது வாழ்வு பிறக்கும்.

வாழ்க! வளர்க!

துலாம்: 9ல் நின்ற குரு, 10ம் இடமான கடக ராசிக்குள் பிரவேசம் என்பதால், துலாம் ராசிக்காரர்களுக்கு, நல்ல பலன்கள் ஏற்பட வாய்ப்புகள் குறைவே. எனினும், குருவானவர், குடும்பஸ்தானத்திலும், தன் வீடான 6ம் வீட்டைப் பார்ப்பதாலும், தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போய்விடும்.

உத்தியோகத்தில் ஸ்திரமில்லாத நிலைமை ஏற்படும். திடீர் இடமாற்றம், கட்டாய ஓய்வு, உத்தியோகத்தில் குளறுபடி போன்றவை நிகழும்.

தொழிலாளர் பிரச்னைகளில், சுணக்கம் ஏற்படும். வியாபாரிகள் முக்கியமான முடிவுகளை எடுக்கக் கூடாது. புதிய முயற்சிகள் கூடாது. கூட்டுத் தொழிலில் லாபம் கிடைக்காது. தொழிலதிபர்கள் அகலக்கால் வைக்கக் கூடாது.

கோர்ட் கேஸ், சொத்து விவகாரங்களில் தடாலடியான முடிவுகள் எடுக்க நேரிட்டால், வீண் பிரச்னைகளே ஏற்படும். எச்சரிக்கை!

ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரை, மனக்கிலேசம் தரும் பலன்களே நிகழும். பெண்களால் குடும்பத்தில் சங்கடங்கள் நிகழும். தாயார் உடல் நலம் பாதிக்கலாம். பொருளாதார தேக்கம் குடும்பத்தின் மகிழ்ச்சியை மிகவும் சீர்குலைக்கும்.

ஜனவரிக்குப் பிறகு பாதகப் பலன்கள் பெருமளவு குறைந்து, மன நிம்மதியும், பண வரவும் கிடைக்க ஆரம்பிக்கும்.

ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை, கஷ்ட நஷ்டமெல்லாம் அறவே நீங்கி, வாழ்வில் புதிய தெம்பு பிறக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், ஆரோக்கியமும் நிலைக்கும்.

கணபதி ஹோமம், சுதர்ஷன ஹோமம் போன்றவற்றை முறையாகச் செய்து வந்தால், கெடுதியான பலன்கள் நேராது. ஸ்ரீ ஹயகிரீவரைத் தியானிக்கவும். சர்வ மங்களமும் உண்டாகும்.

குருவின் தாள் போற்றி!

குருவே சரணம்!

குரு, பூர்ணமான சுப கிரகம். 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பன்னிரண்டு ராசிகளையும் வலம் வருகிறார். தெய்வீக அறிவுக்கும் வேதாந்த ஞானத்துக்கும் மூலப் பொருளாக விளங்கும் தூய்மையானவர். பொருளாதார மேன்மை தருபவர்.

விருச்சிகம்: இதுவரை எட்டாம் வீட்டிலிருந்த குருபகவான், உச்சவீடானதும், பாக்கியாதிபதியுமான கடகத்துக்குள் பிரவேசிக்கிறார். விருச்சிக ராசிக்காரர்களைப் பொறுத்தவரை இது மிகவும் விசேஷமான காலமாக அமையும்.

துக்க சம்பவங்கள், உடல் நலிவு, பொருள் இழப்பு போன்ற பலவகைப் பிரச்னைகளால் கடந்த ஆண்டு மிகவும் துயருற்ற நீங்கள். இப்போது மிகவும் வளமான பலன்களை அனுபவிக்கவிருக்கிறீர்கள்.



காரணமேயில்லாமல் தடைபட்டு வந்த திருமணம், கிருகப்பிரவேசம் போன்ற சுப காரியங்கள் தங்குதடையின்றி நடக்கும். குரு பகவானின் அருட்கடாட்சத்தால், பொருளாதார அபிவிருத்தி ஏற்படும். கடன் தொல்லைகளால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தவர்கள், நிம்மதிப் பெருமூச்சு விடுவார்கள்.

சமூகத்தில் நல்ல அந்தஸ்தில் உள்ளவர்களுடன் நெருங்கிய நட்பு ஏற்படும். அரசாங்க விஷயங்கள் மிகவும் ஜரூராக நடக்கும். ஜூலை முதல் நவம்பர் வரை ஏற்றமிகு பலன்களே நிகழும். குடும்பம், உத்தியோகம், வியாபாரம் போன்றவற்றில் ஏதேனும் முக்கிய முடிவுகளை எடுப்பதாக இருந்தால், இந்தச் சமயத்தில் எடுப்பது நல்ல பலன் தரும்.

நவம்பர் முதல் ஜனவரி வரை, சுபப்பலன்களின் நிகழ்வு மெள்ள குறைய ஆரம்பிக்கும். எதிர்பாராத பிரச்னைகள், இடையூறுகள் நேரும். குடும்பத்திலும் சிறு சிறு சலசலப்புகள் ஏற்பட்டு, மன அமைதி கெடும்.

ஜனவரி முதல் ஏப்ரல் வரை, குரு வக்கிர கதியிலிருப்பதால், உடல் நலம் கவனிக்கப்பட வேண்டும். மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெறுமளவுக்கு ஆரோக்கியம் கெட வாய்ப்புகள்

உண்டு. உஷார்! உடன் பிறந்தவர்களால் பிரச்னை வரும்.

ஏப்ரல் 4க்கு மேல், குரு வக்கிர நிவர்த்தி. மக்கள் கல்வி, இல்வாழ்வில் சந்தோஷம், மனதுக்கினிய சம்பவங்கள் என திருப்திகரமான பலன்கள் நடக்கும்.

குருவை வணங்குவோம்!

தனுசு: இதுவரை ஏழாம் இடத்திலிருந்த குரு மகராஜன், 8ம் இடமும், உச்சராசியுமான கடகத்துக்குள் பிரவேசம். ஜூலை முதல் செப்டெம்பர் வரை குரு எந்தப் பாதகமும் செய்ய மாட்டார் என உறுதியாகச் சொல்லலாம். ஆனாலும் பண விஷயத்தில் நெருக்கடி ஏற்படும். குறிப்பாக கொடுக்கல் – வாங்கல் இனத்தில் நஷ்டம் ஏற்படும்.



குரு பகவான் உங்களுடைய ராசியாதிபதியாக இருந்தாலும், 12ல் உலவிடும் கேதுவைப் பார்ப்பதாலும், 2ம் இடமான மகரத்தையும் 4ம் இடமான சுகஸ்தானத்தையும் பார்ப்பதாலும், தெய்வானுகிரகம் ஏற்பட்டு, பகை சுற்றி நில்லாது துள்ளியோடும்.

செப்டெம்பர் மாதத்திலிருந்து டிசம்பர் வரை மாணவர்கள் தகுதிக்கேற்ற மேன்மை பெறுவார்கள். பெண்களுக்குப் பிறந்த வீட்டிலிருந்து அனுகூலம் கிடைக்கும். பிரயாணம் நன்மை தரும். டிசம்பர் முதல் ஏப்ரல் வரை, மறுபடி குரு வக்கிரமாகிறார். நன்மையும் தீமையுமாகக் கலந்து பலன்கள் ஏற்படும். சுபச் செலவுகளுக்குத் தயாராக இருங்க. எதிர்பாராத செலவினங்களால் திண்டாட்டம் ஏற்படும்.

ஏப்ரலிலிருந்து ஆகஸ்ட் வரை, கெடுதியான பலன்கள் மங்கிக் கொண்டே வந்து, குடும்பத்தில் மன மகிழ்ச்சி, பண வரவு, சகல காரியங்களிலும் வெற்றி என யோகமான பலன்கள் தலை தூக்க ஆரம்பிக்கும். ரேஸ், லாட்டரி, ஸ்பெகுலேஷன் போன்ற இனங்கள் அளவோடு நன்மை தரும். அரசியல்வாதிகள், நண்பர்கள், உறவினர்கள் உதவியினால் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவார்கள். கணவன் – மனைவி உறவு பாசத்துடன் ஒளிரும்.

பொதுவாக இந்த ராசிக்காரர்களுக்கு, ராசியாதிபதி 8ல் இருப்பதால், உடல் நலம் கவனம் தேவை. தாய்நலம், சகோதரி நலம் கவனிக்கப்பட வேண்டும்.

வியாழன் தோறும் ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகளை வழிபாடு செய்து, மனமுருக வேண்டி நின்றால், ஸ்ரீ குரு ராஜன் துணையிருப்பான்.

அபயம் குருநாதா!

குருவருள் கிடைக்க...

தேவாம்ச ருஷினாம்ச குரும்
காஞ்சன ஸந்நிபம்
புத்தி பூதம் த்ரிலோகஸ்யதம்
நமாமி ப்ருஹஸ்பதிம்!!

மகரம்: ஏழாம் வீட்டுக்கு உச்ச கிரகமான கடகத்துக்குள், குரு பிரவேசம் செய்கிறார் என்பதால் மகர ராசிக்காரர்கள் மகா அதிர்ஷ்டசாலிகளே!

ஜூலை முதல் செப்டெம்பர் வரை மிகவும் யோகமான காலம். நினைத்தது நடக்கும். தொட்டது துலங்கும். கேட்டது கிடைக்கும். திடீர் பண வரவு வந்து, கொண்டாட்டம் போட வைக்கும். நல்ல இடத்தில் கல்யாண சம்பந்தம் அமையும். பொருளாதார உயர்வு கிடைக்கும்.

நீண்ட நாளாக வெளிநாட்டுப் பயணம் போக வேண்டும் என திட்டம் போட்டிருந்தீர்களானால், அது நிறைவேறும் வாய்ப்புள்ளது. வெளிநாட்டுச் செய்தி அனுகூலம் தரும்.

பிதுரார்ஜித சொத்துக்களில் இருந்து வந்த பிரச்னைகள் சுமுகமாகத் தீரும். வாகனம், வீடு, மனை, வாசல் என புதிய சொத்துக்கள் சேரும். ரியல் எஸ்டேட் லாபம் தரும். கோர்ட், கேஸ், அரசாங்க காரியங்களில் வெற்றி கிடைக்கும். பயணங்கள் ஆதாயம் தரும்.

மாணவர்களுக்கு உன்னதமான காலம். மேற்படிப்பு மாணவர்களுக்கு உத்தியோகம் கிடைக்கும். அரசுப் பணியாளர்களுக்கு உயர் பதவிகளும், விருப்பத்துக்குரிய இடத்துக்குப் பணி மாற்றமும் எளிதில் வாய்க்கும்.

தொழிலில் அளவான லாபம் கிடைக்கும். இயந்திரம், கம்ப்யூட்டர், எலக்ட்ரானிக்ஸ் துறையில் சிறப்பான வளர்ச்சி ஏற்படும்.

பெண்களுக்கு மிகவும் முன்னேற்றமான காலம். மக்கள் நலம் பேணப்படும். மகப்பேறு பாக்கியம் அமையும்.

டிசம்பர் முதல் ஏப்ரல் வரை குரு வக்கிரகதி என்பதால், எதிலும் எச்சரிக்கை தேவை. உடல் நலம் மிகவும் பாதிக்கப்படும். தாயார் நலம் குன்றி, கவலை ஏற்படும். உஷார்!

ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை, பழையபடி அதிர்ஷ்டம் பூ சொரிய ஆரம்பிக்கும் என்றாலும், குலதெய்வப் பிரார்த்தனை செய்வது விசேஷம். கணபதி ஹோமம், சுதர்ஷன

ஹோமம் செய்து, மனமுருக பிரார்த்தனை செய்யவும்.

குருவின் நாமம் வாழ்க!

கும்பம்: பூர்வ புண்ணியஸ்தானமாகிய 5ம் வீட்டிலிருந்து ஆறாம் வீட்டுக்குள் குரு பகவான் பிரவேசிக்கிறார். ஆறாம் வீடு என்பது கடன், உடல் நலக் குறைவு போன்றவற்றைக் குறிப்பிடும். குரு உச்சமாகி, ஜீவஸ்தானமாகிய விருச்சிகத்தையும், விரயஸ்தானமாகிய 12ஐயும், குடும்பஸ்தானமாகிய 2ஐயும் பார்ப்பதால், பிரச்னைகள், காரியத் தடைகள் நேரிடும். என்றாலும் தெய்வ அனுகிரகத்தால், தைரியமாகச் சமாளிப்பீர்கள்.

நீங்கள் வைக்கும் ஒவ்வொரு அடியிலும் எச்சரிக்கை இருக்கட்டும். குறிப்பாக குழந்தைகள் நலம் பெரிதும் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது என்பதால், கவனம் தேவை. பிதுரார்ஜித சொத்து விவகாரங்கள், பணம் கொடுக்கல் – வாங்கல், சொத்து வாங்குதல் அல்லது விற்றல் போன்ற சமாசாரங்களில் பதற்றம் கூடாது. பெரியவர்களின் ஆலோசனைப்படியே நடப்பது உத்தமம்.

வழக்கறிஞர்கள், அரசியல்வாதிகள், பிரசங்கிகள் போன்றவர்கள் எச்சரிக்கையாகப் பேச வேண்டும்.

பெண்களைப் பொறுத்தவரை, உஷ்ண சம்பந்தமான வியாதிகளில் பாதிக்கப்படுவார்கள். கணவன் – மனைவி உறவு சிறு சிறு சண்டைகள் இருந்தாலும், சுமுகமாகவே தொடரும். கேளிக்கை, விருந்து, சுபக் காரியங்களுக்கு இது உகந்த நேரமல்ல. நெமிலி பாலா திரிபுர சுந்தரியைத் தியானம் செய்து வழிபட்டு வாருங்கள். அன்னை காப்பாள்.

டிசம்பர் முதல் ஏப்ரல் வரை குரு வக்கிரகதி என்பதால், நற்பலன்கள் எதிர்பார்க்கலாம். தேக ஆரோக்கியத்தில் நல்ல சுகம் தெரியும். கடன் தொல்லை குறையும். மனத்தில் புதிய தெம்பும், குடும்பத்தில் ஒற்றுமையும் பிறக்கும்.

குரு 6ல் என்பதால், இந்த ராசிக்காரர்கள் கண்டிப்பாக கிரக சாந்தி, கிரக வழிபாட்டில் ஈடுபட வேண்டும். தான தருமங்கள், ஏழை எளியோருக்கு உதவி செய்தாலும், ஆறாம் இடத்து குரு சாந்தமாகிவிடுவார்.

ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை, எந்தப் புதிய காரியத்திலும் இறங்க வேண்டாம். குறுக்கீடுகளும், காரணத் தடைகளும் ஏற்பட்டு, மனக்கிலேசம் உண்டாகும். ஆகஸ்டுக்குப் பிறகு ஆறுதல் கிடைக்கும். பெரியோர் நல்லாசியை நாடுங்கள்!

ஸ்ரீ குரு ரக்ஷது!

குருவை வழிபடும் க்ஷேத்திரம்

ஆலங்குடி மற்றும் அரக்கோணம் அருகில், கோவிந்தவாடி அகரம்.

மீனம்: மீனராசிக்காரர்களும் யோக சாலிகளே! போன ஆண்டு 4ம் இடத்தில் உலவி வந்த குருபகவான், பூர்வ புண்ணியஸ்தானமான 5ம் இடத்துக்கு உச்ச வீடான கடகத்துக்குள் பிரவேசமாகிறார். இது ஓர் உன்னதமான கால அமைப்பாகும்.

கடந்த ஒரு ஆண்டு காலமாக நீங்கள் பட்ட பாடு, கொஞ்சமா, நஞ்சமா? போட்ட திட்டமெல்லாம் வீணாகப் போனதும், விரைந்து முடிய வேண்டிய காரியங்கள் இழுத்தடித்து நஷ்டம் உண்டாக்கியதும் தீராத சங்கடம்தான். ஆனால் இப்போது நிலைமை தலைகீழ்!

எதிர்பாராத தன வரவு வந்து குடும்பத்தில் அதிர்ஷ்டமழை பொழிய வைக்கும். லாட்டரி, ரேஸ், பங்கு மார்க்கெட், ஸ்பெகுலேஷன் இனங்கள் லாபம் குவிக்கும். வெளிநாட்டுத் தொடர்பால் தொழில் ரீதியான ஆதாயம் பெருகும். மேல் படிப்புக்காக வெளிநாடு போகும் வாய்ப்பு அமையும்.



கன்னிப் பெண்களுக்கு மனசுக்குப் பிடிச்ச மணவாளன் அமைவார். மக்கட்பேறு கூடி வரும். ஜூலை முதல் டிசம்பர் வரை, உடல் நலம், வசீகரம், வாக்கு சாதுர்யம், தன லாபப் பிராப்தி போன்ற நல்ல பலன்களே நிகழும்.

தெய்வ அனுகிரகம் கூடியிருப்பதால், சாதுக்கள் தரிசனம், மகான்களின் புண்ணிய பூமிக்கு யாத்திரை என அருளாசி கூடும்.

குரு உச்சமாக இருந்த போதிலும், கேது 9ல் இருப்பதால், வீண் ஆடம்பரம், புதிய முயற்சிகள் செய்யக் கூடாது. எதிலும் நிதானம் தேவை.

ஆகஸ்ட் நெருங்கும் சமயத்தில் பெண்கள் மீண்டும் ஏற்றம் பெறுவார்கள். உற்சாகமும், காரியங்களில் தெளிவான வளர்ச்சியும் தென்படும். வியாபாரிகள் லாபம் அடைவார்கள். உத்தியோகஸ்தர்கள் நல்ல இடமாற்றம் பெறுவார்கள்.

கேது 9ல் என்பதால் ஸ்ரீ ராகவேந்திரர், ஸ்ரீ சத்யசாயிபாபா போன்ற மகான்களை வழிபடவும். கெடுதல் குறைந்து, மன அமைதி ஏற்படும்.

குருவடி மலரடி போற்றி!

படங்கள் உதவி : சுரேஷ் குமார்

ஹைஹய்யா! கொஞ்ச நாட்களாக தாய் மண்ணில், தமிழ் மண்ணில் இருப்பது போல் இங்குள்ள தமிழினம் உணர்ச்சி வசப்பட்டுக் சிலிர்த்திருக்கிறது! எம்.எல்.ஏக்களைக் கடத்திக் கொண்டு போய், அடைத்து வைத்து, குளுகுளு ட்ரீட்மெண்ட் கொடுத்து, வளைத்துப் போட்டு, வோட்டுகளை விலைக்கு வாங்கி அரசைக் கைப்பற்றுவதெல்லாம் நாம் பிள்ளையார் சுழி போட்டு ஆரம்பித்து வைத்த கலைகள்தானே? இவர்களுக்குப் புதுசாயிருப்பதால் என்னமோ மானமே போய்விட்டதென்று அலறுகிறார்கள். மஹாராஷ்ட்ர அரசின் சரித்திரத்தில் இப்படி ஒரு தலைகுனிவா என்று தலை தலையாய் அடித்துக் கொள்கிறார்கள். விலாஸ்ராவ் தேஷ்முக்கும் சகன்புஜ்பலும், ஜனநாயக முன்னணிக்கு விசுவாசமாயிருக்கும் ஒரு நூறு எம்.எல்.ஏக்களை, பெங்களூரில் ஒளித்து வைத்து, குடும்பத்துடன் ரகசியமாக மைசூரைச் சுற்றிக் காட்டி, பிருந்தாவனத்தில் பாட விட்டு குஷிப்படுத்துகிறார்கள். இவர்களைத் துரோகித்த சில பல எம்.எல்.ஏக்களைச் சிவசேனைக்காரர்கள், தாக்கரேவுக்குச் சொந்தமான, ஜோகேஸ்வரியிலுள்ள மாதோஸ்ரீ ஹெல்த் க்ளப்பில் பூட்டி வைத்து, ராஜோபசாரம் செய்கிறார்கள். முனிசிபாலிடிக்காரர்கள் முணுமுணுக்கவே, பாந்த்ராவிலுள்ள ரங் சாரதா ஓட்டலுக்கு, குட்டி போட்ட பூனையைப் போல், சர்வ ஜாக்ரதையாக மாற்றியிருக்கிறார்கள். இரு சாராருக்குமே எண்ணத்தில் உயர்வில்லை; எண்ணுவதில்தான் குறியாயிருக்கிறார்கள். 'எங்கள் அரசைக் காப்பாற்றியே தீருவோம்' என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது ஜனநாயக முன்னணி; 'அடுத்த சி.எம். சிவசேனையின் ராணேதான்; டெபுடி சி.எம். பி.ஜே.பி.யின் முண்டே' என்று சர்வ நிச்சயமாக அறிவித்திருக்கிறது எதிரணி! தீர்ப்பு 'தேரா தாரிக்' (13ம் தேதி) அன்று! யார் வென்றாலும் அவரை 'தேரா மன்னா' என்று சாபம் கொடுக்க தோற்றவர்கள் தயாராக இருப்பார்கள், 'கஜானாவைக் காலியாக்கிய இவர்களில் யார் வென்றால் என்ன? எல்லாம் தேறாத கேஸ்தான்' என்று பொது மக்கள் அசால்ட்டாக இருப்பார்கள். அரசு கடைத் தேறும் என்று நினைப்பவர்கள்தான் யாருமில்லை!

'யாருமில்லை' என்ற நிலையில் இருப்பவரை, ஊரே சொந்தம் கொண்டாடிக் கொண்டு வரும் அதிசயமும் நிகழத்தான் செய்கிறது. அருணாவின் கதை நினைவிருக்கிறதா? ஒரு டாக்டருக்கு நிச்சயிக்கப்பட்டிருந்த இந்த நர்ஸை, அவள் வேலை செய்த கே.ஈ.எம். ஹாஸ்பிடலைச் சார்ந்த வார்ட்பாய் ஒருவனே கற்பழித்து, நடைபிணமாக்கிய கதைதான். 54 வயதாகும் அருணா, 'ப்ரெயின் டெட்' நிலையில் இன்றும் கே.ஈ.எம்-ல் படுத்திருக்க, ஏனைய நர்ஸுகளும் டாக்டர்களும் அவளைக் கவனித்துக் கொள்ளும் கதையைப் பிங்கி விரானி என்ற பத்திரிகையாளர், புத்தகமாக வெளியிட்டு அனைவரையும் உலுக்கினார். அதே கதை, பின்பு நாடகமாக்கப்பட்டு, நெஞ்சங்களை நெகிழ்த்தியது. இன்று அருணாவின் கதையைத் திரைப்

மனீஷாவைக்



நிர்மலா • சிவாஜி •

படமாக்கப் போகிறார்கள். அமோல் பலேகரின் மனைவியான சித்ரா பாலேகர் தயாரிக்கும் இப்படத்துக்கு, இவரும் பிங்கியுமாக வசனமெழுதப் போகிறார்களாம். சித்ரா - பிங்கி ஜோடி, இந்தியிலும் மராட்டியிலுமாகப் படம் பண்ணவிருக்கிறது. ஹாலிவுட்டில் பாலிவுட்டின் தாக்கம் மிகுந்திருக்கும் இந்தக் கால கட்டத்தில், இப்படம் சர்வதேச அளவில் பிரபலமடைந்தாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை!

ஆச்சர்யப்படுவதற்கும் ஒரு எல்லை இல்லாமல் இருக்கிறதே? இப்படி எல்லாம் கூட நடக்குமா என்ன? நிர்மலா என்பவள் பலே ட்ரெயின் திருடி; சிவாஜி பவாரும் அப்படியே! இருவரும் ஒருவரை ஒருவர்




1992ல் சந்தித்து காதல் வயப்பட்டிருக்கிறார்கள். உண்மையான தொழிலை வெளியிட்டால் காதல் கசந்துவிடப் போகிறதே என்று சிவாஜி, தன்னை ஒரு தியேட்டரில் வேலை பார்ப்பவனாக அறிமுகப் படுத்திக் கொண்டிருக்கிறான். நிர்மலாவும் மூச்சுக் காட்டவில்லை; திருமணமான பின்பும் இருவர் தொழிலும் தொடர்ந்தது – மற்றவருக்குத் தெரியாமலே! தியேட்டரில் கொஞ்சம் நேரம் டிக்கெட் கிழித்துவிட்டு, சிவாஜி வெஸ்டர்ன் ரயில்வேயில் தன் கைவரிசையைக் காண்பிக்கப் போய்விடுவான். வீட்டிலிருப்பது போல் பாவ்லா செய்து கணவன் அகன்றதும், கல்யாண் – மும்ரா பகுதியில் மும்முரமாகி விடுவாள் நிர்மலா. அண்மையில் நிர்மலா பிடிபட்ட போதுதான், உண்மை வெளிவந்திருக்கிறது. சிவாஜியும் தன் உண்மை சொரூபத்தை வெளியிட்டிருக்கிறான். இப்போது இருவரும் கைகோத்துக் கொண்டு ஜாலியாகத் தொழில் புரிகிறார்கள். பிடிபட்டால் "கிட்டே வராதீர்கள்; எங்களுக்கு எய்ட்ஸ்" என்று பயமுறுத்துகிறார்கள். போலி சான்றிதழ்களையும் வைத்திருக்கிறார்கள், பாதுகாப்பிற்காக!

காப்பாற்றிய பாபா!

பாதுகாப்பு, அதுவும் 24 மணி நேரப் பாதுகாப்பு கிடைத்திருக்கிறதே மனீஷா கொய்ராலாவுக்கு! அதுவும் நம்ம சூப்பர் ஸ்டார் புண்ணியத்தில்..! ரஜினியுடன் சென்னையில் இருந்த ஷூட்டிங்கிற்கு மனீஷா மூன்று நாள் தாமதமாக வந்தாராம். இவர் முன்பே வந்திருப்பார் என்ற நினைப்பில், இவரைக் கடத்த மும்பை அண்டர்வர்ல்ட் தாதாக்கள் அங்கே ஆஜராக, அவரைச் சுட்டு வீழ்த்தியதாமே சென்னை போலீஸ்? மனீஷா லேட்டாகப் போனதால், லேட் மனீஷாவாகாமல் தப்பித்தாரே!

– ஜெயஸ்ரீ ராஜ்



* பிங்கியுடன் சித்ரா

இரட்டை இலையில் சத்யராஜ்!

■ ஏவிஎம். படப் பிடிப்பு வளாக பிள்ளையார் கோயிலில் எளிமையாகத்தான் நடந்தது அந்தப் புதிய படத்துக்கான பூஜை. சத்யராஜ், மீனா காம்பினேஷனில் 'இதயக்கனி' ஏ.ஜகந்நாதன் இயக்குகிறார் என்று அழைப்பிதழில் அச்சாகியிருந்தது. படத்தின் தலைப்பைக் கேட்டால் ஒரு கணம் திகைத்துப் போவீர்கள்!

'இரட்டை இலை!'

■ சிந்து பைரவி சிறகடிக்க, நித்யஸ்ரீ கணீர்



குரலில் கலக்கிய (ஒலிநாடாவாக வெளியிடப்பட்ட ஒரே சின்னத் திரைப்பாடல்!) 'சித்தி' புகழ் 'கண்ணின் மணி' பாடலில் தொடங்கி செஞ்சுரி அடித்தவர் இசையமைப்பாளர் தினா. இப்போது 'கிங்' படத்தின் மூலம் வெள்ளித் திரைக்கும் விஜயம்.

'கிங்' பாடல்களைத் தயாரிப்பாளர் ஆர்.பி. சௌத்ரி கேட்டுவிட்டு பட்டென்று 'அற்புதம்' தெலுங்குப் படத்துக்கு இசையமைக்கும் வாய்ப்பைக் கொடுக்க, தமிழில் பிரபலமாகும் முன்பே அங்கே தினம் தினம் தினா பாடல்கள்தானாம்.

■ 'ஏப்ரல் மாதத்தில்' படப்பிடிப்புக்காகப் போனபோது சினேகாவுக்கு வாகன விபத்தென்றால், 'மனசெல்லாம்' படப் பிடிப்பில் ஸ்ரீகாந்துக்கு விபத்து. இரண்டு பேரும் இப்போதைக்கு எழமாட்டார்கள் என்று காற்றில் மிதந்து வந்த செய்திகளைப் பொய்யாக்கி விட்டார்கள் இருவருமே! கண் திருஷ்டியா இருக்கும். கவனமா இருங்க!

■ 'பாபா' படம் பற்றி கண், காது மூக்கு வைத்து தினசரி ஒரு செய்தி வந்து கொண்டிருக்க சில உண்மைத் தகவல்களும் அந்த யூனிட்டில் இருந்தே கசிகின்றன. 'பாபா' படப்பிடிப்பில் பல நாள் காத்திருந்தும், தன்



• தினா குடும்பம்



சம்பந்தப்பட்ட காட்சிகள் எடுக்கப்படாத தால், பொறுமையிழந்த நடிகர் பிரகாஷ்ராஜ், படப்பிடிப்பில் இருந்தே வெளியேறினார். இப்போது அந்தப் பாத்திரத்தில் நாசர் நடித்து வந்தாலும், ரஜினிக்குத் திருப்தி இல்லை. இதனால் மீண்டும் பிரகாஷ் ராஜுக்குத் தூது விடப்பட்டிருக்கிறதாம்!

தமிழ் தவிர ஹிந்தி, தெலுங்கு மொழி களிலும் பாபா 'டப்' செய்யப்படுவதால், அமிதாப்பச்சனையும், தெலுங்கு நடிகர் மோகன் பாபுவையும் கதையில் சேர்த்துவிட் டார்கள். டப்பு பாபு டப்பு!

■ இதுவரை போலீஸ் அதிகாரி, கிராமத்துப் பெருசு என்று டிபிகல் ஆக்ஷன் மசாலாவில் மூழ்கிக் கிடந்த விஜய்காந்த் ஒரு 'சாது'வாக 'ரமணா' படத்தில் நடிக்கிறார். 'தீனா' முருகதாஸ் படத்தை இயக்குகிறார். 'பாபா' ரிலீஸ் ஆகும் அதே ஆகஸ்ட் பதினைந்து அன்று 'ரமணா'வையும் ரிலீஸ் செய்வது என்று கங்கணம் கட்டிக் கொண்டு ஜரூராகப் படப்பிடிப்பு நடக்கிறதாம். 'நீயா... நானா'னு ஒண்டிக்கு ஒண்டி மோதிப் பார்த்துட்டாப் போகுது!

■ மீனாவுக்கும், தேவயானிக்கும் போட் டாப்போட்டி! எதிலே தெரியுமா! பக்திப் படங்களைப் 'பக்'குன்னு கற்பூரம் மாதிரி பிடிச்சுக்கிறதுலேதான். இரண்டு பேரிடமும் தலா மூன்று பக்திப் படங்கள். தவிர 'சிவகாமி' படத்தில் மீனாவும் 'கற்பூர நாயகி' படத்தில் தேவயானியும் நரிக்குறவப்பெண் வேடத்தில் நடிக்கிறார்கள்... சபாஷ் சரியான போட்டி!

— சக்கரம்









எழுத்தும் பத்திரிகைகளும்...

எழுத்தாளர்களுக்கும் பத்திரிகைகளுக்கும் இடையே நல்லுறவு இருக்க வேண்டியது முக்கியம். சிறு பத்திரிகையானாலும் சரி, பெரிய பத்திரிகை ஆனாலும் சரி, அந்த நல்லுறவே எழுத்துலகின் அஸ்திவாரம். அந்த நல்லுறவை இரு தரப்புமே தொடர்ந்து பாதுகாத்து வந்தால்தான் எழுத்துலகம் தழைக்க இயலும்.

என் முதல் படைப்பு ஒரு கவிதை. ஆனந்தவிகடனில் வெளியாயிற்று. அதைப் பிரசுரிக்கத் தேர்ந்தெடுத்த விகடன், என் புகைப்படத்தைக் கேட்டு அன்போடு ஒரு கடிதம் அனுப்பிற்று. பி.ஏ. முதலாண்டு மாணவனின் கவிதை அவனது புகைப்படத்தோடு ஒரு பெரிய பத்திரிகையில் இடம் பெற்றால் பெருமைக்குக் கேட்க வேண்டுமா? எனக்குத் தொடர்ந்து எழுத்துலகில் இயங்க உற்சாகம் தந்ததே அந்தக் கடிதம் தான். ஒரு பத்திரிகை ஓர் எழுத்தாளரை மதிக்கும் அடையாளம்தான் அந்தப் பத்திரிகையிலிருந்து வரும் கடிதம்.

சன்மானத்தைவிட அதிகமாகத் தன்மானத்தை மதிக்கிற வர்க்கம் எழுத்தாளர் வர்க்கம். பத்திரிகைகள் எழுத்தாளர்களிடம் தாய்மைக் கனிவோடு நடந்து கொள்ள வேண்டியது அவசியம். எழுத்தாளர்களும் பத்திரிகைகளிடம் கண்ணியத்தோடும் பொறுப்புணர்ச்சியோடும் நடந்து கொள்ள வேண்டியது முக்கியம். இந்த இரு தரப்பு நல்லுறவு இரு தரப்புக்கும் நல்லது.

நா.பா. கேட்டு சுந்தரராமசாமி கல்கியில் சிறுகதை எழுதியது நட்பால் விளைந்த பலன். நா.பா. இலக்கியத்தின் பலம் அவரது நடை. நா.பா. வாழ்வின் பலம் அவரது நண்பர்கள். தந்திர பூமி என்று தன் நாவலுக்குத் தலைப்பை முடிவு செய்துவிட்டார் நா.பா. தில்லிக் களனில் கதை எழுதவென்று தில்லியை அறிய தில்லிக்கே சென்றார். இந்திரா பார்த்தசாரதி இல்லத்தில் தங்கினார். தில்லிக் கதை எழுத அங்கேயே வாழ்ந்து வரும் இ.பா.தான் இன்னும் பொருத்தமான நபர் எனச் சில நாட்களிலேயே உணர்ந்தார். தன் தலைப்பை அவருக்குக் கொடுத்து, தீபத்தில் அந்தத் தலைப்பிலேயே இ.பா.வைத் தொடர் எழுத வைத்தார். தந்தை மரணப் படுக்கையில் இருந்த சூழலில், அதன் பொருட்டுக் கும்பகோணம் செல்லும் வழியில் தீபம் அலுவலகத்திலேயே அமர்ந்து தன் தொடரின் முதல் அத்தியாயத்தை இ.பா. எழுதிக் கொடுத்துவிட்டுத் தந்தையைப் பார்க்க ஓடினாரே - அது நட்புக்கும் சரியான தேதியில் தீபம் வெளிவர வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சிக்கும் அவர் காட்டிய மரியாதை.



• இந்திரா பார்த்தசாரதி

கல்கியில் தி. ஜானகிராமன் எழுதிய தொடர் கதைக்கு நா.பா. தான் தலைப்பு வைக்க வேண்டும் என்று தி.ஜா. சொன்னதும், 'அன்பே ஆரமுதே' என்று தலைப்புச் சூட்டி நா.பா. மகிழ்ந்ததும்... அதெல்லாம் இலக்கியவாதிகளிடையே நட்பு கொடி கட்டிப் பறந்து கொண்டிருந்த பொற்காலம்.

நா.பா. கதிரில் ஆசிரியராக இருந்தபோது தில்லியில் இருந்த வாஸந்தி சென்னை வந்தார். அவரை வீட்டுக்கு விருந்து சாப்பிட அழைத்தார் நா.பா. விருந்தோடு விருந்தாக

சுவடுகள் 24



• தி.ஜானகிராமன்



• வாஸந்தி

கதிருக்கு ஒரு தொடர் எழுதச் சொன்னார். வீட்டில் விருந்து கொடுத்துக் கேட்டு வாஸந்தி எழுதிய 'ஆகாச வீடுகள்' என்ற தொடர் வாசகர்களுக்கு இலக்கிய விருந்தாக அமைந்தது.

எத்தனையோ சந்தர்ப்பங்களில் ஆர்.சூடாமணியிடம் கதை கேட்டுக் கடிதங்கள் எழுதியிருக்கிறேன். அந்தக் கடிதம் போய்ச் சேர்ந்தவுடன் விரைவில் கதை அனுப்புவதாக ஒரு பதில் வரும். பிறகு கதை வரும். கதையுடன் அஞ்சல் தலைகளும் வைக்கப்பட்டிருக்கும். 'வெளியிடப் பொருத்தமில்லை என்று கருதினால் திரும்ப அனுப்பத் தபால்களும் வைத்திருப்பதாக' கடிதத்தில் குறிப்பிட்டிருப்பார். அவர் கதையை யாவது திரும்ப அனுப்புவதாவது! உளவியல் பின்னணியில் அவர் எழுதும் ஒவ்வொரு கதையும் (ஆர்.சூடா) 'மணி'க் கதை அல்லவா! ஆனாலும் பத்திரிகையுடனான அவரது நல்லுறவில் தான் எத்தனை பண்பாடு!

இப்போது சில எழுத்தாளர்களிடம் கதை கேட்கவே பத்திரிகைகள் தயங்க நேர்கிறது. பல பத்திரிகைகளில் போய்த் திரும்பி வந்த கதையை, கேட்ட பத்திரிகையின் தலையில் கட்டி விடுகிறார்கள். மிகச் சுமாரான அந்தக் கதையை நிராகரித்தாலோ மேடை தோறும் தாக்கிப் பேச அவர்கள் தயங்குவதில்லை. நாகரிக வரம்பை மீறி மேடையில் என்ன வேண்டுமானாலும் பேசலாம் என்ற அரசியல் கலாசாரம் இப்போது இலக்கியத்திலும் தொடங்கிவிட்டதே!

நான் ஒரு சிறு பத்திரிகையில் இயங்கிக் கொண்டிருந்த காலம். ஓர் எழுத்தாளரின் கதையை (அதன் அளவுகடந்த நீளம் கருதி) நிராகரிக்க நேர்ந்தது. கதை திரும்ப அனுப்பட்ட மறு தபாலில் அவரிடமிருந்து கடிதம் வந்தது. 'கதையைப் பெற்றுக் கொண்டேன். கதை போலவே என் சந்தாவையும் திரும்ப அனுப்பிவிடுங்கள்' என்று! தான் எழுதியது அனைத்துமே அமர காவியம் எனத் தன்னைத் தானே தன் உள்ளங்கையில் வைத்துக் கொள்பவர்கள் இரங்கத் தக்கவர்கள். பத்திரிகைகள் படைப்பைத்தான் பார்க்க இயலும். படைப்பாளியை அல்ல.


எழுத்தில் இருவகைப் போக்கு இருக்கிறது. கண்ணியக் குறைவான வார்த்தைகள் எதையும் பயன்படுத்தாத போக்கு. கண்ணியக் குறைவு என்று தோன்றினாலும் பாத்திர வார்ப்பின் யதார்த்தத் தன்மைக்கு உதவுவதாக இருந்தால் சில கெட்ட வார்த்தைகளையும் கூடப் பயன்படுத்தலாம் எனக் கருதும் போக்கு. இரண்டும் இரண்டு வகையான போக்கே தவிர ஒன்று மட்டும் இன்னொன்றுதான் சரி எனப் பட்டிமன்றம் வைத்துக் கட்சி கட்டத் தேவையில்லை. நா.பா. முதல் வகைப் போக்கைச் சார்ந்தவர். கி. ராஜநாராயணன் இரண்டாம் வகைப் போக்கைப் பின்பற்றுபவர். கி.ரா.வின் இலக்கிய மேதைமையைப் பற்றிச் சொல்ல வேண்டுமா! நா.பா.வுக்குக் கி.ரா. எழுத்தின் மேல் ஒரு தனி மதிப்பு உண்டு. (எனக்குக் கி.ரா. எழுத்தில் ஒரு மயக்கமே உண்டு!)


அவர் தீபத்திற்கு ஒரு கதை எழுதினார். அந்த உயர்ந்த கதையில் ஒரு கெட்ட வார்த்தை இடம் பெற்றிருந்தது. ஒரு பாத்திரம் பேசுவதாக வரும் வார்த்தை அது. தீபம் வாசகர்கள் அந்த வார்த்தையைப் பிரசுரித்தால் அதிர்ச்சி அடைவார்கள் என்று நா.பா. கருதினார். அந்த வார்த்தையை மட்டும் நீக்க அனுமதி கேட்டுக் கி.ரா. வுக்குக் கடிதம் எழுதினார். 'நா.பா.! உங்களுக்கில்லாத உரிமையா!' எனக் கி.ரா. பதில் எழுதினார். தன் கதை இடம் பெறவிருந்த பத்திரிகையின் தன்மையைக் கி.ரா. சரியாகப் புரிந்து கொண்டிருந்ததும், நா.பா.வுக்கும் அவருக்குமிடையே இருந்த ஆழ்ந்த நட்பும்தான் இதற்குக் காரணங்கள்.

எழுத்தாளர்கள் பத்திரிகையையும் பத்திரிகை எழுத்தாளர்களையும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். தமிழில் நல்லிலக்கியம் தழைக்க இது ஒன்று தான் வழி.

திருப்பூர் கிருஷ்ணன்







விடிய விடிய வெடி!

ஊர் கூடித் தேர் இழுப்பது நமக்குத் தெரியும். ஊர் கூடி வெடிவெடிப் பார்களா? கேரள மாநிலம் பாலக்காடு அருகில் உள்ள வல்லங்கியில் (நிம்மரா) திருவிழாவாகவே நடக்கிறது. அவர்களுக்கு இது அதிபுராதனமும் சரித்திரப் பெருமையும் பெற்ற விழா.

ஒவ்வொரு ஆண்டும் பங்குனியில் நடைபெறும் இந்த விழாவுக்குப் பெருங்கூட்டம் திரள்கிறது. சுமார் மூன்று மணி நேரத்துக்குப் பல வகையான வெடிகளை இரு குழுக்கள் போட்டி போட்டுக் கொண்டு வெடிக்கின்றன.

வல்லங்கி ஸ்ரீகுரும்ப பகவதி அம்மனும், நெடுங்குளத்தி பகவதி அம்மனும் சகோதரிகள். (இவர்களது மூத்த சகோதரி மீன்குளத்தி பகவதி அம்மன்) இருவரையும் சிறு வயல் வரப்பு பிரிக்கிறது. இவ்விழாவில் இரு அம்மன்களும் நேருக்கு நேர் சந்திக்கின்றனர். இதற்குத்தான் வாண வேடிக்கை.

"இங்கு விவசாயம் பாதிக்கபட்டபோது இக்கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டது இத்திருவிழா. வெடிகள் தயாரிப்பில் கிராமத்தினர் இரு குழுக்களாகப் பிரிந்து தயாரிப்பார்கள். வெளியாட்கள் சேர்க்கப் படுவதில்லை. இந்தக் குழுவும் தங்களுக்குள் விஷயங்களைப் பரிமாறிக் கொள்ளமாட்டார்கள். விழாவில் நடக்கும் வாண வேடிக்கையில் தான் அவர்களது புதுப்புது உத்திகள் வெடி(ளி)ப்படும்'' என்கிறார் விழா கமிட்டித் தலைவர் என்.சோமன்.

அரை கிலோ மீட்டர் சுற்றளவுக்கு யாரும் கிட்ட நெருங்க முடியாதபடி வெடிகள் வெடித்துச் சிதறுகின்றன. காதும், இதயமும் பலவீனம் என்றால் தயவு செய்து போகாதீர்கள். பனைமரம் உயரத்துக்கு வெடித் 'தீ' கிளம்பும்போது நம்மையும் கவ்வுமோ என்ற அச்சம்தானே வரும்.

ஆண்டுதோறும் 5% வெடி மருந்து கூட்டிக் கொடுக்க மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார். சரி. செலவு எவ்வளவு? சொன்னால் மூளை வெடித்துப் போகும். ரூ.30 லட்சம்.

"ஒவ்வொரு மலையாளியும் குறைந்தது ஒரு ரூபாய் காணிக்கையாகத் தருகிறார்" என்கிறார் சோமன். முக்கிய விழாக்கள் பட்டியலில் இந்த வெடி திருவிழாவையும் அண்மையில் சேர்த்துள்ளது கேரள சுற்றுலாத் துறை. மற்றபடி விளம்பரம் எல்லாம் தடபுடலாகச் செய்யப் படுவதில்லை. செவிவழிச் செய்திதான். வெடி விழா செவி வழியாகத் தானே பரவும்!

– இரா. சோமசுந்தரம்



உலக அழகி அறிமுகம்! ஹீரோயின் ஒரு பாடலைப் பாடுகிறார்! ஒரே படத்தில் ஐந்து இசையமைப்பாளர்கள் அறிமுகம்! குப்புடு நடிக்கிறார்! இவையெல்லாம் ஏமாளி ரசிகனைத் தியேட்டருக்கு இழுக்க, மந்தை மனோபாவம் கொண்ட தமிழ் சினிமாக்களில் வைக்கப்படும் தூண்டில் பசைகள். இந்தப் படத்திலோ பிரபுதேவா சகோதரர்கள் மூவரும் இணைந்து நடிக்கிறார்கள் என்ற பசை. ஆனால் படம் சரியான இம்சை.

பார்க்கும் திறனற்ற பிரபுதேவா, கேட்கும் திறனற்ற ராஜுசுந்தரம், பேசும் திறனற்ற நாகேந்திரபிரசாத். மூவரும் தங்கள் குறைகளை வெளிக்காட்டி, அனுதாபம் தேட விரும்பாதவர்கள். மூவருமே ஜோதிகாவைச் சந்திக்கிறார்கள். சுருமம்! பார்த்துப் பார்த்துப் புளித்துப் போன ஃபார்முலா பாணியிலிருந்து இம்மியளவும் பிசகாமல் அவரைக் காதலிக்கிறார்கள்.

மூவரும் ஒரே வீட்டில் தங்கும்போது குறைகள் காரணமாக, ஒருவரை ஒருவர் தப்புத்தப்பாய்ப் புரிந்து கொள்ள, ஆஹா, ஒரு சூப்பர் நகைச்சுவைக் களம் ரெடி என்று எதிர்பார்த்தால்... ஒன்றிரண்டு வெடிச்சிரிப்புகளைத் தவிர, எல்லாம் ஊசிப் பட்டாசு அளவுக்குக் கூட தேறவில்லை. சகோதரர்கள் மூவரும் ஜோவுடன் மாங்கு மாங்கென்று டூயட் பாடுவதில் காட்டியிருக்கும் சிரத்தையைக் கொஞ்சம் நடிப்பிலும் காட்டியிருந்தால் ஆறுதல் அடைந்திருக்கலாம். அதிலும் கடைகுட்டி நாகேந்திர பிரசாத் ஃபீல் பண்ணி அழுகிறேன் பேர்வழி என்று ரசிகர்களைச் சிரிக்க வைக்கிறார், புண்ணியவான்.

அய்யோ! ஜோதிகாவிடம் பிரபு தேவா தமது காதலைச் சொல்லிவிட்டால் படம் முடிந்துவிடுமே என்று பயந்து ஜவ்வ்வ்வாய் இழுத்து, ஒரு பாடாவதி க்ளைமாக்ஸ் மூலம் இயக்குனர் கொல்ல, தலையில் ஜிவ்வென்று ஏறுகிறது. நல்லவேளையாக வணக்கம் போடும் முன்பே தியேட்டர் ஆபரேட்டரே பொறுக்க முடியாமல், பெல் அடித்து நம்மைக் காப்பாற்றுகிறார். ரெடி ஒன்...டூ...த்ரீ



என்று சொல்லிவிட்டு தியேட்டரிலிருந்து இடைவேளையின் போதே பாதி ரசிகர்கள் ஓடிப்போனார்கள். ஆனால் நம்ம தலைவிதி?

— விஷுவல்தாசன்

● ஜஸ்ட் ஃபாஸ்

வட்ட மேஜை



சுந்தரமாயும்... ஆனந்தமாயும்...

குட்டிக் கதைகள் படிக்க நகைச்சுவையாக இருந்தாலும், சிந்திக்கவும் வைத்தன!
திருச்சி, அம்மனூர் என்.சாம்பமூர்த்தி

'மொழி வெறித் தாண்டவம்' படித்தேன். ஸம்ஸ்கிருத பாரதியின் அமைப்பாளர்களில் ஒருவன் என்ற முறையில் மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ரணமாகிப் போன எங்கள் இதயங்களுக்கு உங்களது பேனா மை, தேனாகப் படர்ந்து ஒத்தடம் தந்தது.
சிவகங்கை, எஸ்.பாபு

இந்த வார மூன்று கார்ட்டூன் படங்களும் சிரிப்பை வர வைத்துவிட்டன. குறிப்பாக, 'ஹைய்யா எங்க கூட்டணி ஜெயிச்சுடுச்சு' கார்டூன் சூப்பர்.
திருப்பூர், பி.சிவக்குமார் பிரபு

எளிய முறையில் இதழ் முழுக்க நிரவியிருந்த குட்டிக் கதைகள் சுந்தரமாயும் ஆனந்தமாயும் இருந்தன.
நெய்வேலி, சு.ஸ்ரீகாந்த்

'யுத்தம் வந்தால்?' அட்டைப் படக் கட்டுரை படித்தேன். பாகிஸ்தானுடன் நம் நாடு யுத்தம் செய்தால் அதனால் ஏற்படக் கூடிய இழப்புகளை மிகத் தெளிவாக, விரிவாக அலசியிருந்தது கட்டுரை. போரினால் இந்தியாவுக்கு ஏற்படும் பாதிப்புகளை நினைத்தால் நெஞ்சம் உறைந்து போகிறது. வேண்டாம் போர். போரே செய்யாமல் பயங்கரவாதிகளை ஒடுக்கும் வழி முறைகளைத் தீர ஆராய்ந்து நாமும் தந்திரமாகச் செயல்பட வேண்டும். கட்டுரை பயம் காட்டிவிட்டது சார்!
ஈரோடு, இரா.விஜயஸ்ரீ

வீரப்பனைப் பிடிகக வக்கில்லாமல் பத்திரிகையினரைப் பொறியில் சிக்க வைக்கும் முயற்சி பற்றிய தலையங்கம் அழுத்தமானதாக இருந்தது.
அரவக்குறிச்சிப்பட்டி, எம்.அசோக்ராஜா

உஷாதீபன், சொ. பிரபாகரன், வாதூலன் வழங்கியிருந்த முத்தான மூன்று சிறுகதைகளும் முக்கனியாய் இனித்தன. அதிலும் 'கால்' சிறுகதை மனத்தை நெகிழ வைத்தது!
ஈரோடு, பி.எஸ்.முருகேஷ்

உலகக் கோப்பை கால் பந்து விளையாட்டில் குள்ள நரித்தனம் புதைந்து இருக்கிறது என்பதைப் 'பந்தாடப்படுகிறதா' கட்டுரை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது.
சென்னை, கே.வி.ராமன்

'காதில் விழுந்தவை' என்ற தலைப்பில் என்னைப் பற்றிய செய்திப் பார்த்து பெரிதும் அதிர்ச்சிக்குள்ளானேன். அச்செய்தி உண்மையல்ல.
சென்னை, வாழப்பாடி கே.ராமமூர்த்தி

தலையங்கம் படித்தேன். தமிழ்நாட்டில் ஜனநாயகம் கீழ் நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. ஆளுங்கட்சிக்கு வோட்டுப் போடாத அனைவருமே குற்றவாளிகள் என்று அறிவிப்பு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.
தஞ்சை, சி.ஆர்.நாதன்

அரிய வாய்ப்பு! **நழுவ விடாதீர்கள்!**

ஸ்ரீ ரங்கநாத பாதுகா வித்யாலயா

சின்ன ஆசிரமம்

மேலூர் ரோடு, கொள்ளிடக்கரை, ஸ்ரீரங்கம், திருச்சி – 6. ✆ 430266

(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணையப்பெற்றது)

ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் திவ்ய அனுக்ரஹத்துடன் முப்பத்து நான்கு ஆண்டுகளாக நடைபெற்றுவரும் வித்யாலயாவில் கீழ்க்கண்ட வகுப்புகளுக்கான இவ்வாண்டு சேர்க்கை 10.05.2002 முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது.

வகுப்புகள்	தகுதி
1. சிரோமணி	OSLC (or) SSLC தேறியவர்கள் / தவறியவர்கள் அல்லது சமஸ்க்ருதம் படிக்கத் தெரிந்த 15 வயது உள்ளவர்கள்
2. ப்ரி – சிரோமணி	8 – ஆம் வகுப்பு தேறியவர்கள் / தவறியவர்கள் அல்லது 12 வயது பூர்த்தியானவர்கள்
3. யஜூர் வேதம்	உபநயனமான 7 வயது முதல்
4. ஸாம வேதம்	உபநயனமான 7 வயது முதல்
5. திவ்ய பிரபந்தம்	உபநயனமான 7 வயது முதல் மேலும் தேசிக ப்ரபந்தம் பயில்பவர்களாக இருத்தல் வேண்டும்.



சலுகைகள் :

1. சேர்க்கை கட்டணம், கல்விக் கட்டணம் எதுவுமில்லை.
2. உணவு, உடை, உறைவிடம் வைத்திய வசதி இலவசம்
3. ஒவ்வொரு படிப்பையும் பூர்த்தி செய்து பரீட்சை கொடுத்தவர்களுக்கு தகுந்த சம்பாவனையும் சான்றிதழும் வழங்கப்படும்.
4. ப்ரதி மாதமும், கணிசமான ஊக்கத் தொகை வழங்கப்படும்.

குறிப்பு :

1. அனைத்து மாணவர்களுக்கும் கம்ப்யூட்டர் பயிற்சியும், ப்ரி–சிரோமணி மாணவர்களுக்கு S.S.L.C. தேர்வு எழுத பயிற்சி அளிக்கப்படும்.
2. மேற்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பம் அனுப்ப முடிவு தேதி : **30.07.2002**

பொய்யில் பூத்த நிஜம் 11

டாக்டர் சென்குப்தா தன் கையில் இருந்த கண்ணாடி பேப்பர் வெயிட்டை கன காரியமாக ஆராய்பவர் போல அதைத் தீவிரமாகப் பார்த்தபடி உருட்டிக் கொண்டிருந்தார். நீலக் கடலுக்குள் உலகம் மிதந்தது. டாக்டரின் கையசைவுக்கு ஏற்ற படி நீர் கொப்புளங்கள் எழும்பி எழும்பிச் சுழன்றன.

சகுந்தலாவுக்குப் பொறுமை நழுவிப் போயிற்று. தன்னை அவர் தவிர்க்கிறார் என்ற சந்தேகம் வந்தது. "சொல்லுங்கள் டாக்டர்" என்றாள் அவள் ஆயாசத்துடன். பேப்பர் வெயிட்டைப் பார்த்தபடி "என் உலகம் இப்போது ஸ்தம்பித்துப் போன மாதிரி இருக்கிறது" என்றாள்.

தன் கையிலிருப்பதன் நினைவு அப் போதுதான் வந்ததுபோல சென்குப்தா பேப்பர் வெயிட்டை மேஜை மேல் வைத்து விட்டு அவளைப் பார்த்து இலேசாகச் சிரித்தார்.

"உங்கள் ஏமாற்றம் எனக்குப் புரிகிறது. ஆனால் நீங்கள் நம் பிக்கை இழக்கக்கூடாது. இது கொஞ்சம் அபூர்வ மான கேஸ்தான். நீங்கள் பிரச்னையைத் தெரிவித்த பிறகு நாங்கள் பல சோத னைகள் செய்து பார்த்துவிட் டோம். மாரடைப்பு வந்த சமயத்தில் மூளையில் ஞாப கங்களைத் தேக்கி வைக்கும் மெமரி செல்கள் சிலவற்றுக்கு ரத்த ஓட்டமும் ஆக்ஸிஜனும் போவது நின்று டாமேஜ் ஆகியிருப்பதாகத் தெரிகிறது. பல சமயங்களில் இப்படி நேரும். ஆனால் சொற்பகால நினைவுகளே மறையும். ராஜா வுக்குச் சோதித்துப் பார்த்தால் ஐந்து ஆண்டுகால நினைவு போய்விட் டிருப்பது தெரிகிறது."

ஏற்கெனவே சுதிரும் விவேக்கும் அவளிடம் தெரிவித்திருந்த தகவல் இது என்றாலும் சகுந்தலாவுக்குப் புதிதாக வயிற் றைக் கலக்கியது. பக்கத்தில் அமர்ந்திருந்த விவேக்கைப் பார்த்துவிட்டுத் தன்னைச் சமாளித்துக்கொண்டு "நினைவு திரும் புமா?" என்றாள். கேள்வி மிக அபத்த மாகப்பட்டது. நினைவு வராமல் போகக் கூடிய உறவில்லை அது என்று மனசு ஆத் திரத்துடன் ஹூங்காரமிட்டது. இத்தனைக் குரூரமாக விதியால்கூட தன்னைச் சோதிக்க முடியாது என்று காரணம் புரி யாத சீற்றம் ஏற்பட்டது.

"நம்பிக்கை வையுங்கள், திரும்பும்" என்றார் சென்குப்தா ஜாதகத்தைப் பார்த்து தோஷத்துக்குப் பரிகாரம் சொல்லும் ஜோதிடர் போல.


"மருத்துவ ரீதியாக, உங்களுடைய அனு பவம் என்ன, சொல்லுங்கள்" சகுந்தலா வின் குரலில் பிடிவாதம் தொனித்தது.

"நினைவு திரும்பும். எத்தனை சீக்கிரத் தில் என்று சொல்லமுடியாது. அந்த நினை வுச் செல்களுக்கு ரத்த ஓட்டம் மறுபடி பரவும்போது மெல்ல மெல்ல நினைவு வரும்."

"நினைவைத் திரும்ப வைக்க, துரிதப் படுத்த மருந்து ஏதும் இல்லையா?"

டாக்டர் மறுபடி பேப்பர் வெயிட்டை எடுத்து உருட்ட ஆரம்பித்தார். உலகம் உருள ஆரம்பித்தது. சகுந்தலா காத் திருந்தாள்.

மிக நிதானமாக டாக்டர் அளந்து பேசி னார். "இருப்பதாகச் சிலர் சொல்லலாம். எனக்குத் தெரிந்தவரை அதெல்லாம் சமா தானத்துக்காகச் சொல்வது. ரத்த ஓட்டம் சரிபடும்போது நினைவு திரும்பும் என்கிற நம்பிக்கையில் நாங்கள் செயல்படுகிறோம்.



வாஸந்தி

ப அல்ஜைமர் வியாதிக்குத்தான், மறதியைக் கட்டுப்படுத்த சில முயற்சிகள் இப்போது நடக்கின்றன. அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

"நினைவு திரும்பாமலே போக வாய்ப்பிருக்கிறதா?"

"சகுந்தலா!" என்று விவேக் ஆயாசத்துடன் அவளைப் பார்த்தான்.

"நோ, நோ. சகுந்தலா அப்படிக் கேட்பதில் ஒன்றும் தவறு இல்லை" என்றார் சென்குப்தா அவனைப் பார்த்து. "அதற்கும் வாய்ப்பிருக்கிறது" என்றார் சகுந்தலாவின் பக்கம் திரும்பி.

"ஆனால் நீங்கள் ராஜ மோகனுடைய

மனைவி. குழந்தை வேறு இருக்கிறது. நினைவு திரும்புவதற்கு வலுவாக சாத்யக் கூறுகள் இருக்கின்றன. வராவிட்டாலும் உறவைப் புதுப்பித்துக் கொள்ளலாம்."

டாக்டர் இலேசாகச் சிரித்தார்.

"புதிதாகக் காதல் மலரலாம்."

விவேக் அது ஹாஸ்யம்போல் சிரித்தான். சகுந்தலா ஒப்புக்குச் சிரித்தாள்.

"என்னைக் கண்டாலே, ராஜா முகத்தைச் சுளிக்கிறான். லீவ் மீ அலோன் என்கிறான்."

"அவர் அரண்டு போயிருக்கிறார். அவருடைய நிலையைப் பற்றி நீங்கள் யோசிக்க வேண்டும். என்னைக் கேட்டால், அவருடைய நினைவு திரும்புவதற்கு நீங்கள் எந்த நிர்பந்தத்தையும் ஏற்படுத்தக்கூடாது. உடல் ரீதியாக அது அவரை பாதிக்கும். நல்ல வேளை அவருடைய பெற்றோர்கள் அவருக்குத் தெரிகிறது. இரண்டு வருஷத்துக்கு முன் சண்டை போட்டுக்கொண்டு பிரிந்து விட்டோம் என்றார் அவருடைய அப்பா. நினைவு திரும்பியதும் சண்டையெல்லாம் அவருக்கு மறந்துபோகும் என்று அன்று நான் விளையாட்டாகச் சொன்னேன். உண்மையிலேயே அவருக்குச் சண்டை போட்டதே நினைவில்லை. அந்த வகையில் இது நல்லது."

சகுந்தலாவுக்கு அவரது பேச்சின் மேம்போக்குத்தனத்தைக் கண்டு அலுப்பேற்பட்டது.

"ஆனால் அவருக்கு என்னை நினைவில்லாமல் போனது என்னை எப்படி பாதிக்கும் என்று உங்களுக்குப் புரியுமா?" என்றாள் இலேசான படபடப்புடன். அவருக்குப் பழைய கோபம் நினைவிலிருந்தாலும் அவருடைய பெற்றோர்களுக்கு எந்தப் பாதிப்பும் இருந்திருக்காது. ஆனால் என் வாழ்வும் எதிர்காலமும் அவருடைய நினைவில்தான் இருக்கிறது."

"எனக்குப் புரிகிறது சகுந்தலா" என்றார் டாக்டர் நிதானமிழக்காமல். 'அவர் நினைவிழந்ததற்கு நாங்கள் காரணமில்லை' என்று நினைவு படுத்தினார். அவள் சோர்வுடன் தலை குனிந்தாள். சென்குப்தா எழுந்து வந்து அவள் தோளைத் தொட்டார். "இப்பவும் ஒன்றும் மோசமில்லை. மறுபடி அன்பு மலர முடியும். ஆனால் அவசரப்படாதீர்கள். சட்டப்படி நீங்கள் அவரது மனைவி. உங்களுக்கு ஒரு குழந்தை இருக்கிறது என்பது தெரிய வரும்போது அரண்ட மனசு சமாதானமாகி யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ளும்."

அவள் சற்று நேரம் ஏதும் பேசத் தோன்றாமல் மௌனமாக இருந்தாள். முதல் முறையாக நிலைமையின் விபரீதத்தின் தாக்குதலில் தான் அரண்டு போனது தனக்கு மட்டுமே விளங்கக்கூடிய ஒன்றாகத் தோன்றிற்று. 'மறுபடி அன்பு மலரும்' சாத்தியமா அது? இப்போது அந்த வார்டில் 4ம் நம்பர் கட்டிலில் படுத்திருக்கும் ராஜமோகன் அவளுக்குப் பரிச்சயமில்லாதவன், அவனுக்கு இப்போது அவள் பரிச்சயமில்லாத மாதிரி. ஐந்து ஆண்டுகளுக்கு முன் இருந்த அவனுடைய மனநிலை எண்ணங்கள், கொள்கைகள் என்ன என்று அவளுக்குத் தெரியாது. அவனை அவள் சந்தித்தபோது விரக்தியின் எல்லையில் இருந்தான் அவளைப் போல. ஸ்தாபனங்களை எட்டி உதைக்கும் வெறியில் இருந்தவன் அவளைப் போல. எனக்கு நேற்றும் இல்லை. நாளையும் இல்லை என்றான் அவளைப் போல். நான் இன்றைக்கு வாழ்பவன். அவளும் அப்படியே. இதைவிட ஜோடிப் பொருத்தம் வேறு என்ன வேண்டும்?

ஆனால் நேற்றைப் பற்றி அவன் மறந்து போனது அவளுக்கு நாளை பற்றிய கவலையே ஏற்படுத்துகிறது. இன்றைய நிலைக்காகப் பீதி கவ்வுகிறது.

'சட்டப்படி நீங்கள் அவர் மனைவி என்று தெரிய வரும்போது - ஒரு பாராங்கல் நெஞ்சில் மெல்லியதாக இறங்கிற்று. மகாபாரதக் காலத்துக்கு இழுத்துச் சென்றது. புரு



"உங்க லவ் லெட்டரில் இருந்த ஒரு வரி நெஞ்சைத் தொட்டதால்தான் உங்களைக் காதலிக்க சம்மதிச்சேன்...!"

"எந்த வரியைச் சொல்றே?"

"உன் சம்பளப் பணத்தில் பைசாவைக் கூட எதிர் பார்க்க மாட்டேன்'ங்கிற வரியைத்தான்!"

- உ. ராஜாஜி

வம்சத்து அரசன் துஷ்யந்தனுக்கு எதிரில் சகுந்தலை நிற்கிறாள், காலை சூரியனைப் போல மின்னும் தன் மகனை ஏந்தியபடி.

"இது உன் மகன் அரசனே" என்றாள் சகுந்தலா கம்பீரமாக. "ஏற்றுக்கொண்டு உன் வாக்கை காப்பாற்று. கண்வரின் ஆசிரமத்தில் வெகு காலத்துக்கு முன், நாம் இருவரும் சேர்ந்து படுத்தபோது நீ கொடுத்த வாக்கு நினைவிருக்கிறதா?"

துஷ்யந்தன் தலையசைக்கிறான். "எனக்கு நினைவில்லை. யார் வீட்டுப் பெண் நீ? உன்னுடன் எனக்கு எந்த உறவும் இருந்ததாக நினைவில்லை. போய்விடு! லீவ் மீ அலோன்!"

"சகுந்தலா!"

டாக்டரின் கண்களில் மித மிஞ்சிய கருணை தெரிந்தது. "நான் சொல்வதை நீங்கள் நம்ப வேண்டும்!"

அவள் பதில் பேசாமல் தலை குனிந்து கொண்டாள். தன்னுடைய துக்கம் பல யுகத்து துக்கம் என்றால் இவருக்குப் புரியாது.

விவேக்தான் பேசினான்.

"இன்னும் எத்தனை நாட்கள் ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டியிருக்கும்?"

"ஒரு வாரத்திலிருந்து பத்து நாட்கள் இருக்க வேண்டியிருக்கும். சிக்கல் ஏதும் இல்லையென்றால் இரண்டு நாள் முன்னதாக அனுப்பலாம். அதற்குள் நினைவுகள் சீராகலாம். அதுவரை..."

சகுந்தலா நிமிர்ந்தாள். 'அதுவரை?'

டாக்டர் அப்போதுதான் ஞாபகம் வந்தவர் போலச் சொன்னார்:

"நீங்கள் வருவதற்கு முன் ராஜமோகனுடைய பெற்றோர் வந்திருந்தார்கள். அவர்களை மட்டுமே அவருக்கு ஞாபகம் இருப்பதால் அவர்களைக் கொஞ்ச நாள் தில்லியில் இருங்கள் என்றேன். ஏற்கெனவே அதை அவர்கள் தீர்மானித்து விட்டதாகச் சொன்னார்கள்.

சரசரவென்று ஏதோ உள்ளே சுழண்டுக் கொள்வதுபோல அவளுக்குத் தோன்றியது. ராஜாவிடமிருந்து அவளை உறுதியாக விலக்க எல்லாரும் ஒட்டுமொத்தமாக சதி செய்வது போலிருந்தது.

"நான் இங்கே ராஜாவைப் பார்க்க வரத் தேவையில்லை என்று சொல்கிறீர்களா?"

"நோ!" என்றார் சென்குப்தா சாந்தமாக. "கொஞ்சம் விட்டுப் பிடியுங்கள் என்கிறேன். பெற்றோருடன் அவர் சகஜமாக அமைதி

"தேர்தல்ல நான் ஜெயிச்சாலும் வாக்கு வித்தியாசம் ரொம்ப அதிகமாக இருந்துடக் கூடாதேன்னு கவலையா இருக்கு...!"

"ஏன்?"

"தலைவரை விட வாக்கு வித்தியாசம் அதிகமா வந்தா மந்திரி பதவி தர மாட்டார்!"

- அம்பை தேவா



யாக இருக்க ஆரம்பித்த பிறகு அவர்களே உங்கள் நிலையைப் பற்றி எடுத்துச் சொன்னால் அவரால் சுலபமாகப் புரிந்து கொள்ள முடியும்."

டாக்டர் அசம்பாவிதமாகச் சிரித்தார்.

"வேடிக்கை இல்லை? உங்கள் பெயர் சகுந்தலா என்று இருப்பது?"

விவேக் சிரித்தான். "அவளுடைய பெற்றோர்கள் தீர்க்கதரிசிகள்."

"எங்கே இருக்கிறார்கள்?"

"எனக்கு யாருமில்லை" என்றாள் அவள் சிரிக்காமல். சென்குப்தாவை நேரிடையாகப் பார்த்து, "அதாவது ராஜாவைத் தவிர" என்றாள்.

அவளுக்காகப் பரிதாபப்படுபவர்போல டாக்டர் ஒரு விநாடி பார்த்து மறுபடி அவளது தோளைத் தட்டினார் சமாதானமாக.

"கவலைப்படாதீர்கள். சகுந்தலையின் கதையில் சோதனை உண்டே தவிர, சோக முடிவு இல்லை. தவிர அவளுக்கு இருந்த மாதிரி சிக்கல்கள் உங்களுக்கு இருக்காது. பாவம், மோதிரத்தைக் கூடத் தொலைத்து விட்டுத் தவித்தாள். துஷ்யந்தன் குழந்தை இது என்பதை அவனை எப்படி நம்ப வைப்பது என்று தவித்தாள். இப்பொழுது உங்களுக்கு ஸயன்ஸே சாட்சி சொல்லும். டி.என்.ஏ டெஸ்ட் எடுத்துவிடலாம்...!"

டாக்டரின் அறையை விட்டு வெளியே வந்தபிறகு சகுந்தலா, "அந்த டாக்டருடைய மென்னியைத் திருக வேண்டும் போல் இருக்கு எனக்கு" என்றாள் ஆத்திரத்



"கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்கிறதை அனுபவபூர்வமா உணர்ந்துக் கிட்டேன்."

"கோவிலுக்குப் போன இடத்துலே அன்னதானம் கிடைச்சுதாக்கும்...?"

- சீர்காழி வி. ரேவதி

துடன்.

"ரிலாக்ஸ்" என்றான் விவேக் வழக்கம் போல.

"நான் ஒன்று சொன்னால் தப்பாக நினைக்காதே. நிஜம்மாவே இரண்டு நாள் ஆஸ்பத்திரிக்கு வராதே. கொஞ்சம் டென்ஷன் குறையும். ஆபீசுக்குப் போ. ஒரு மாறுதல் உனக்குத் தேவை. டாக்டர்கிட்ட நீ ஆத்திரப்பட்டு எந்தப் பலனும் இல்லே. அவர் என்ன செய்வார்? அவர் சொல்ற மாதிரி ராஜாவுடைய மறதிக்கு அவர் பொறுப்பில்லே." அவள் பதில் பேசாமல் அவனுடன் நடந்தாள்.

ராஜாவை எட்டி நின்று இன்று பார்த்ததோடு சரி. தொலைவில் அவன் உருவம் கண்ணில் பட்டதுமே ராஜா கண்ணை மூடிக்கொண்டு விட்டதாகப் பட்டது. எல்லாக் குழாய்களையும் நீக்கி விட்டார்கள். படிப்படியாக, நினைத்ததைவிட துரிதமாக உடல் சீராகி வருவதாக வரிசைப்பல் ட்யூட்டி டாக்டர் சொன்னார். ஆனால் தயவு செய்து அவரைத் தொந்தரவு செய்யாதீர்கள். அவருடைய பெற்றோர்கள் பார்த்துப் பேசிவிட்டுப் போனார்கள். டோன்ட் ஒர்ரி.

விவேக் அவளைக் கான்டீனுக்கு அழைத்துச் சென்று காப்பி வாங்கிக் கொடுத்தான். காப்பி உள்ளே இறங்கியதும் தெம்புடன் சிரிக்கத் தோன்றிற்று.

"விவேக், நீ சொன்ன மாதிரி எங்க அம்மா அப்பா தீர்க்கதரிசிகள்தான் இல்லே? எத்தனையோ பெயரை விட்டுச் சகுந்தலான்னு வைப்பானேன்?"

"டாக்டர் சொன்னதுபோல அது சோகக் கதை இல்லே. ரொம்ப மிஞ்சிப் போனா இருக்கவே இருக்கு டிஎன்.ஏ. டெஸ்ட்..."

"நோ!" என்றாள் அவள் வேகமாக. "நோ! அப்படி என்னுடைய உரிமையை நிரூபிக்கிறது எனக்கு அவமானம். ராஜாவுக்கும் எனக்கும் இருக்கிற அன்பைக் கேவலப்படுத்தற மாதிரி அது. நா அதுக்கு உடன்பட மாட்டேன்."

விவேக் சங்கடத்துடன் வேறு திசையில் பார்வையைப் பதித்தான்.

"ஸாரி" என்று முணுமுணுத்தான். "அதுக்கு அவசியமிருக்காதுன்னு தான் நினைக்கிறேன்."

"அவசியமிருக்காது. நா நம்பறேன். ராஜாவுக்கு நினைவு திரும்பிடும்" என்றாள் அவள் அழுத்தமாக. அவள் சட்டென்று விவேக்கின் கையைப் பற்றினாள். "நீயும் சுதிரும்தான் அதுக்கு உதவணும்."

"சகுந்தலா!" என்று அவன் சிரித்தான் ஆயாசப்படுபவன் போல. "நீ இதைச் சொல்லணுமா?"

ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டிற்குப் போய் சேர்வதற்குள் மனசு கிட்டத்தட்ட சமாதான நிலைக்கு வந்துவிட்டது. டாக்டர் அநாவசியமாக பயமுறுத்தி விட்டதாகத் தோன்றிற்று. விவேக் சொன்னதுபோல நாளைக்கு ஆபீசுக்குச் சென்றால் ஒரு மாறுதல் ஏற்படும். இரண்டு நாள் கழித்து ராஜாவைப் பார்க்கப் போகலாம். "எங்கே போயிட்டே சக்கு என்னை விட்டுட்டு" என்று ராஜா கேட்பதை ரசிக்கலாம். நினைவு வராமல் எப்படிப் போகும்?

மாலையில் க்ரெஷுக்குச் சென்று பரத்தை அழைத்து வரும்போதே குழந்தை தூங்கிப் போனதால் அவள் வீட்டுக்கு வந்ததும் பாதியில் நிறுத்தியிருந்த கதைப் புத்தகத்தைப் படிக்க அமர்ந்தாள். தூக்கத்திலேயே பாட்டில் பாலை பரத் குடித்தவுடன் சமேலி செய்து வைத்திருந்த சாப்பாட்டைச் சூடாக்கிச் சாப்பிட்டாள். இதுவரை ராஜாவின் அப்பாவோ அம்மாவோ பேரக் குழந்தையைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்படவே இல்லை என்பதும், அவளுடன் கூட ஒரு வார்த்தையும் பேச முயற்சி செய்யவில்லை என்பதும் வினோதமாகத் தோன்றிற்று. சிந்தையை விடாமல் துரத்தி சஞ்சலப் படுத்திற்று. அவளைப் பற்றி எதுவுமே தெரியாத போது அவர்கள் காட்டும் விரோதம்

விசித்திரமாக இருந்தது. முழு விவரம் தெரிந்தால் என்ன செய்வார்கள் என்ற கற்பனை அதிக சங்கடத்தை ஏற்படுத்திற்று. தான் பழகி, அறிந்து, நேசித்த ராஜமோஹனுக்கும் இவர்களுக்கும் கலாசார வித்தியாசம் இருந்ததாகத் தோன்றிற்று. அவன் வெளிப்படையானவன். சரளமானவன். மிக நவீன சிந்தனை உள்ளவன். இருபத்து ஒன்றாம் நூற்றாண்டு பிரதிநிதி. இவர்களைப் பார்த்தால் சென்ற நூற்றாண்டிலேயே தங்கி விட்டவர்கள் போல அதன் பாரங்களை இறக்க விரும்பாதவர்கள் போல இருக்கிறார்கள். இவர்கள் அவளுக்காக ராஜாவிடம் பரிந்து பேசக்கூடும் என்று டாக்டர் நினைப்பது அசாத்தியமான கற்பனை என்று தோன்றிற்று. ஆனால் ராஜா இப்போது அவர்களைப் பார்க்கும் பார்வையில், பரந்து விரியும் புன்னகையில் எந்த இடைவெளியும் தெரியவில்லை. பாசம் பீறிட்டுப் பாய்கிறது - சமமாக.

ஐந்து வருஷத்துக்கு முந்தைய ராஜா எப்படிப்பட்டவன்?

அவள் யோசிக்கத் திராணியற்றுத் தூங்கிப் போனாள். விடையைத் தேடிக் கொண்டு தூக்கத்தில் அலைந்தாள். தெருத் தெருவாக, வீடு வீடாக, தேசம் தேசமாக, பல வருஷங்கள் பின்னோக்கி, ராஜா எப்படிப்பட்டவன் என்ற கேள்வி கேட்டபடி. முகம் மறந்த அம்மாவின் கண்கள் அவளை நோக்கிக் குனிந்தன. 'சகுந்தலை என்று பெயர் வைக்கிறேன்' என்றாள். கழுத்தில் பூமாலை அணிந்த இளமைப் பருவத்து எம்.எஸ். ஊஞ்சலை எட்டி எட்டி உதைத்து 'ஆனந்த மென் சொல்வேனே?' என்று பாடி முடித்ததும் 'துஷ்யந்தன் தலையில் கிரீடத்துடன் நின்று 'காந்தர்வ விவாகம் தப்பில்லை என்கிறான். சாத்திரத்தால், தேவர்களால், ஏற்று அங்கீகரிக்கப்பட்ட எட்டு விவாகங்களில் ஒன்று அது. பர்ட்ரண்டு ரஸ்ஸல்கூடச் சொல்கிறார். 'அன்புதான் உண்மையான பந்தம். சடங்கு அல்ல.. நீ என்னை விரும்புகிறாய், நான் உன்னை விரும்புகிறேன். பெண்ணே வேறு என்ன வேண்டும் நம்மைப் பிணைக்க?'

ராஜாவை உனக்குத் தெரியுமா என்கிறான் சகுந்தலா மூச்சிறைக்க... அவன் எப்படிப்பட்டவன்?

பரத்தின் அழுகையொலி கேட்டுச் சகுந்தலா திடுக்கிட்டு விழித்தாள்.

(தொடரும்)

புன்னகைப் போட்டி; பொன்நகைப் பரிசு!

புலம்பல் 007!


"முன்பெல்லாம் டென்னிஸ், ஸ்குவாஷ்னு விளையாடுவேன். இப்ப ஒண்ணுமே முடியலை. எனக்கு வயசாயிடுச்சு" என்று புலம்பியிருக்கிறார் பாக். அதிபர் முஷாரஃப். பழம்பெரும் பெரிசுகளே உற்சாகமாக இருக்க, தாட்பூட் இராணுவக்காரர் இப்படிப் பேசுவதில் ஏதோ உள்ளர்த்தம் இருக்கணும். நம்ப வாசகர்கள்தான் தமாஷாகச் சிந்திப்பதில் 'கிங்' பார்ட்டிகள் ஆயிற்றே! முஷாரஃப் பகிரங்கப் புலம்பலின் பின்னணி என்னவாக இருக்கும் என்று ஜாலியாகத் துப்பறிந்து எழுதி அனுப்புங்கள். சிரிக்க வைக்கும் தலைசிறந்த இரண்டு புலம்பலுக்கு, தலா நாலு கிராம் தங்கம். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

புன்னகைப் போட்டி - 19

என்று குறிப்பிட்டு உங்கள் தமாஷ் புலம்பல் 007ஐ எழுதி, முகவரியைக் குறிப்பிடுங்கள். தபால் உறை அல்லது தபால் கார்டில், கீழே உள்ள கூப்பனை வெட்டி ஒட்டி அனுப்புங்கள்.

கடைசி தேதி : 1.7.2002

ஆசிரியர், கல்கி,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல்,
சென்னை - 600 097.



அவசரமாய்

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு திருச்சி மாநகரப் போலீஸ் கமிஷனராக ஜே.கே. திரிபாதி பொறுப்பேற்றபோது, காவல் உதவி மையங்கள் உதயமாயின. அறுபது வார்டுகளிலும் தலா ஒரு காவல் உதவி மையம் என ஐம்பத்தொன்பது இடங்களில் காவல் உதவி மையங்கள் கவனமாக அமைக்கப்பட்டு பொது மக்களுக்கு உற்ற தோழனாக இயங்கி வந்தன.

இந்தக் காவல் உதவி மையங்கள் ஆரம்பத்தில் நான்கு காவலர்களோடு செயல்படத் துவங்கின. இரவு நேரத்தில் இரண்டு காவலர்களும், பகல் நேரத்தில் இரண்டு காவலர்களும் என ரோந்துப் பணியை மேற்கொண்டு வந்தனர். இந்தக் காவலர்கள் அரை மணி நேரத்திற்கொரு முறை தத்தம் இருப்பிடங்களை வாக்கி டாக்கி மூலம் கன்ட்ரோல் ரூமுக்குத் தெரிவிப்பதும் வழக்கமாக இருந்ததால் கடந்த சில வருடங்களாக திருச்சி நகரில் விபத்துகள், கொலை, கொள்ளை போன்ற சம்பவங்கள் நடந்தால் போலீசார் அந்த இடங்களுக்கு விரைந்து சென்று உரிய நடவடிக்கைகளை எடுத்தனர்.



• சந்திரமோகன்



• செல்வி குமரன்



• சிவாஜி சண்முகம்

ஆனால், கடந்த ஒரு வருட காலமாக அவற்றின் செயல்பாடுகள் தலைகீழாக மாறிப் போனதால், பட்டப்பகலிலேயே வீடு புகுந்து கொள்ளை, கொலை என ரவுடிகள் ராஜ்ஜியம் செலுத்தி வருகின்றனர்.

“ஒரு மாமன்ற உறுப்பினர் என்கிற வகையில் தினசரி பொதுமக்களைச் சந்தித்து வருகிறவன் நான். பொது மக்கள் மத்தியில் காவல் உதவி மையங்கள் குறித்து கடும் அதிருப்தியே நிலவுகிறது. ஆனந்தபுரம், புதுத் தெருவில் சமீபத்தில் அதிகாலை கோலம் போடும் பெண்ணைத் தாக்கிவிட்டு ஐந்து பவுன் நகையை அறுத்துக் கொண்டு ஓடி விட்டனர். இன்னும் அந்தத் திருடர்களைப் பிடிக்கவில்லை. ஆனால், இதே காவல் உதவி மையங்கள் நன்கு செயல்பட்டபோது குற்றவாளிகளை, அடுத்த பத்து நிமிடத்துக்குள் பிடித்துக் காட்டியது காவல்துறை. அதனால் திருச்சி நகரில் குற்றங்களும் குறைந்தே காணப்பட்டன. இப்பொழுது காவல் உதவி மையங்கள் சோம்பல் முறித்துக் கொண்டிருக்கின்றன. மீண்டும் அவை புத்துயிர் பெற்று, திறமையாகச் செயல்பட வேண்டுமென்பதே பொது மக்களின் எதிர்பார்ப்பு!” என்கிறார் திருச்சி மாநகராட்சியின் 21வது வார்டு திமுக. உறுப்பினர் ஆர்.சந்திரமோகன்.

வாடகைக் கார் உரிமையாளரான செல்வி குமரன் என்பவர், “முந்தியெல்லாம் தெருவுலே ஒரு சாக்கடை அடைச்சிக்கிச்சின்னு சொன்னாக்கூட போதுங்க. இந்தக் காவல் உதவி மையக் காவலர்கள், சம்பந்தப்பட்ட மாநகராட்சி அதிகாரிக்குத் தகவல் சொல்லி உடனே சீர் பண்ணித் தந்திடுவாங்க. தெரு லைட்டு எரியலையா? அதுக்கும் ஏற்பாடு பண்ணி மறுநாளே லைட்டை எரிய விடுவாங்க. அப்பல்லாம் ஜனங்களும் போலீஸ் கிட்டே நெருங்கிப் போய் தங்களோட குறைகளைச் சொல்ல முடிஞ்சுது. அவங்களும் ஏதோ வார்டு கவுன்சிலர் மாதிரி எல்லா வேலையும் இழுத்துப் போட்டு செஞ்சாங்க.



* மூடிக் கிடக்கும் உதவி மையம்

எங்க பார்த்தாலும் போலீஸ் எல்லார் கண்லயும் பட்டுட்டே இருந்தாங்க. அதனால லோக்கல் ரவுடிங்க எல்லாம் அடங்கிப் போயிட்டாங்க. ஆனா, இப்ப இந்தக் காவல் உதவி மையங்கள் ரொம்பவும் மந்தமா செயல்படுறதால திருட்டு, கொலை, கொள்ளைன்னு ஆகிப் போச்சுங்க. மாநகர

ஓர் உதவி!

காவல்துறை முனைப்பா செயல்பட்டா பொது மக்களுக்கு நல்ல பாதுகாப்பா இருக்கும்" என்கிறார்.

தமிழ்நாடு நுகர்வோர் ஒற்றுமை நலச் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் சிவாஜி சண்முகம், "போலீஸ் - பொது மக்களின் நண்பன் என்ற நிலை மாறி வருகிறது. சில காவலர்களுக்கும் சமூக விரோதிகளுக்கும் தொடர்பு இருந்து வருகிறது. மூன்று மாதங்களுக்கு முன்னர் பட்டப் பகலிலேயே ஸ்ரீரங்கம் உதவி போலீஸ் கமிஷனர் அலுவலகத்தின் பின்புறமுள்ள வீட்டில் ஐம்பது இலட்சத்துக்கும் மேல் மதிப்புள்ள வைர, தங்க நகைகள் கொள்ளை போயின. கொள்ளையர்கள் இன்னும் பிடிபடவில்லை. காவல் துறை ஆபீசுக்கு அருகிலுள்ள வீட்டிற்கே இக்கதி என்றால் நகரின் பிற பகுதிகளைப் பற்றி கேட்கவே வேண்டாம். குற்றங்களைக் குறைக்கவும் தடுக்கவும் ஒரே வழி, அனைத்து காவல் உதவி மையங்களை முன்போல செயல்பட வைப்பதுதான்" என்று சொல்கிறார்.

துவக்க காலத்தில் கீற்றுக் கொட்டகையில் இருந்த காவல் உதவி மையங்கள் திரிபாதி காலத்திலேயே கான்கிரீட் அறைகளாக மாற்றம் பெற்றன. அவற்றில் சில இப்போது மூடுவிழா கண்டுவிட்டன.

நாம் சுற்றிப் பார்த்த வகையில் பன்னிரண்டு காவல் உதவி மையங்கள் மூடுவிழா கண்டுவிட்டன. மற்றவற்றின் செயல்பாடுகளும் - பணிகளும் வெகு மந்தம். போகிற போக்கைப் பார்த்தால் அனைத்து காவல் உதவி மையங்களும் மூடப்பட்டு விடுமோ என்று மக்கள் அஞ்சுகின்றனர்.

காவல் உதவி மையங்களின் மந்தமான செயல்பாடுகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து விபரம் அறிந்து கொள்ள விரும்பினோம். மாநகர போலீஸ் கமிஷனர் இராஜேந்திரனைத் தொடர்பு கொண்டபோது, "நானே இப்பொழுதுதான் இந்தக் காவல் உதவி பற்றி ஸ்டடி செய்து கொண்டிருக்கிறேன். இப்பொழுது எதுவும் கூற இயலாது. இன்னும் இரண்டு மூன்று வாரங்கழித்து வேண்டுமானால் தொடர்பு கொண்டு பேசுங்கள்!" என பதிலளித்தார்.

எது எப்படியிருப்பினும் காவல் உதவி மையங்கள் மீண்டும் திறம்படச் செயல்பட வேண்டும் என்பதே திருச்சி மாநகர மக்களின் மாபெரும் எதிர்பார்ப்பு.

கட்டுரை, படங்கள் : ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

இல்லம் கொள்ளை

அசோக்நகரின் பரபரப்பு நிறைந்த சாலையில் ஒரு பெட்டிக்கடை மறைவில் நின்றுகொண்டு 'தம்' அடித்துக் கொண்டிருந்த கபாலியைத் தேடி வந்தான் அவனது சிஷ்யப்பிள்ளை மாயாண்டி.

''அண்த்தே... உன்னை எங்கெல்லாம் தேடிகினு கிரேன் தெர்மா?''

''அத்செரி-போன காரியம் என்னாச்சுடா பேமானி?''

''நாம நேத்துக்கி மொத நாளு நோட்டம் விட்ட வூடு... அதான் அந்தத் தண்ணித் தொட்டியாண்ட அண்த்தே...''

சிகரெட்டைக் காலில் போட்டு மிதித்து விட்டு, விஷயத்தில் கவனமானான் கபாலி.

''சாயிங்காலம் ஆனா, பார்ட்டிங்கோ வூட்டைப் பூட்டிகினு போயிடுறாங்கோ அண்த்தே... அப்பால காலைலதான் வர்றாங்கோ!'' மாயாண்டி குதூகலத்துடன் சொன்னான்.

''அப்டின்னா இன்னிக்கு முட்ச்சுடுவோம்டா பேமானி!'' என்று உற்சாகம் பொங்கச் சொன்னான் கபாலி.

மணி ஏழு. கபாலியும், மாயாண்டியும் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே அந்த வீட்டு வாசலில் நின்றனர். சற்றே ஒதுக்குப்புறமான ஏரியா. பக்கத்தில் தண்ணீர்த் தொட்டி.

இடுப்பு வேட்டிக்குள் மறைத்திருந்த சுத்தியலை எடுத்து கபாலி ஒரே போடாக பூட்டின்மேல் போட, அது 'ப்ளக்'கென்று உடைத்துக் கொண்டது.

பூனை போல இருவரும் உள்ளே வந்து, கதவை உள்பக்கமாகத் தாளிட்டுக் கொண்டார்கள்.

சுவிட்சைப் போட்டதுதான் தாமதம். இருவருக்கும் குஷி தாளவில்லை. ஃப்ரிட்ஜ், கலர் டீ.வி, டபுள்காட் பெட், ஏர்கூலர், டெலிஃபோன் இன்னும் எக்கச்சக்கமான ஆடம்பரப் பொருட்கள் சகிதம் அமர்க்களமாயிருந்தது வீடு.

''அண்த்தே... டீ.வி. கீது... 'அலைகள்' 'அண்ணாமலை'யெல்லாம் இன்னிக்கு இங்கேயே பார்த்துடலாம்.''

''கய்தே.. நியூஸ்தான்டா முக்கியம்... அதுகூட பார்த்துக்கலாம்... எங்கெல்லாம் திருட்டு போயிருக்குனு சொல்வாங்க.''

''அப்படின்னா நாம செய்ற தெஃப்ட்டும் சொல்வாங்கல்ல அண்த்தே?''

உடனே கபாலி, மாயாண்டியின் தலையை இலேசாகத் தட்டி, ''பேமானி... இன்னிக்கு நடக்குறதெல்லாம் நாளைக்குத்தான்டா சொல்வாங்க'' என்றான்.

''உலகச் செய்தி, வணிகச் செய்தி மாதிரி 'திருட்டுச் செய்தி'ன்னு தனியா சொல்லணும் அண்த்தே... அப்பால நமக்கு ரொம்ப ப்ரவுடா இருக்கும்ல?''

''அது கெடக்கட்டும்... வாடா கஸ்மாலம். பீரோவை உடைக்கலாம்... தங்கமெல்லாம் வெல ஏறிகினுகீது...'' காரியத்தில் இறங்கினான் கபாலி.

பீரோவை உடைத்ததும் இருவரின் பல்ஸூம் எகிறியது.

எக்கச்சக்க நகைகள், பணம் லாக்கரில் திணிக்கப்பட்டுக் கிடந்தது. மாயாண்டிக்கு 'கிர்' அடித்தது. சொத்தேரென்று விழுந்தான்.

கபாலிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. சற்று யோசித்தவன், ஓடிச் சென்று ஃப்ரிட்ஜைத் திறந்து, ஐஸ்வாட்டரை எடுத்து மாயாண்டியின் முகத்திலடிக்க, அதற்காகவே காத்திருந்தவன்போல எழுந்து கொண்டான் அவன்.

''தோடா... இப்பதான் மசக்கை கணக்கா மயக்கம்போட்டு உளுவுறே... உன்னை மொதல் தபா பிள்ளையார்கோவில் உண்டியலை ஒடைக்கவச்சு, உனக்குத் தொழில்ல பிள்ளையார் சுழி போட்ட என்னோட மானத்தையே வாங்கிட்டியேடா... சட்டுனு எனக்குத் திருடனுக்குத் தேள் கொட்டுன மாதிரி ஆயிடுச்சு... பேமானி...! தொழில்னு

...போகுதே...

வந்ததுக்கப்புறம் உணர்ச்சி வசப்படக்கூடாதுடா...'' அறிவுரைகளை



அவிழ்த்து விட்டான் கபாலி.

"ஸாரி அண்த்தெ... இனியொரு தபா இப்படி நடக்காம பார்த்துக்குறேன்'' என்று நடந்ததுக்காக மன்னிப்புக் கேட்டான் மாயாண்டி.

கொண்டு வந்த சாக்குப் பையில் விருவிருவென நகைகளையும், பணத்தையும் எடுத்துப் போட்டுக் கொண்டார்கள்.

மாயாண்டி தயக்கத்துடன் "அண்த்தே!... அங்க பாரு... 'சாமி' படம் மாட்டிகீது... நாம திருடுறதை சாமி பார்த்துகினு கீறாரு... அப்பால நமக்கு எதுனா தண்டனை தந்துடப் போறாருண்ணே'' திடீர் ஞானம் வந்தவனாகக் கேட்டான்.

"நீ டெய்லி டி.வி. சீரியல் பார்க்குறியாடா?

"ஆமா அண்த்தே... ஏன் கேட்குறே?"

"அதைவிட பெரிய தண்டனை இந்த உலகத்துலயே கெடையாதுடா.. உம் மூஞ்சுல பீச்சாங்கைய வைக்க.. 'செய்யும் தொழிலே தெய்வம்' அப்படின்னு பெரியவங்கோ சொல்லிகிறாங்கடா... நீ இதுவரையில எத்தனை தடவை லவுட்டிருக்கே?"

மாயாண்டி தலையைச் சொறிந்தபடி, "ஒரு அம்பதுதபா இருக்கும் அண்த்தே..." என்றான்.

"மவனே.. நீ ஆரம்பத்துலேயே ரோசிச்சிருக்கணும்... இப்ப என்னடா திடீர்னு போதி

தஞ்சாவூர் சுபா

மரத்தண்ட உட்கார்றே... கண்கெட்ட பின்னாடி 'காசி' படம் பார்க்கனும்னு ஆசைப்படுறியா?" கபாலி சற்றே கோபத்துடன் கேட்க, தலை கவிழ்ந்தான் மாயாண்டி.

"எங்கூட இருக்குற வரைக்கும் இந்த மாதிரி அசிங்கமா பேசற வேலையெல்லாம் வெச்சுக்காதே... இன்னா... தெர்தாடா?"

"சர்தான் அண்த்தே!" தலையாட்டினான் மாயாண்டி.

ஒரு குண்டுமணி நகையைக்கூட விடாமல் எடுத்து சாக்குப்பையில் போட்டுக் கொண்டார்கள். பணக்கட்டுகளையும் ஒன்று விடாமல் எடுத்துப் பைக்குள் போட்டுக் கொண்டதும் பெருமூச்சு விட்டான் கபாலி.

"குடுக்குற தெய்வம் கூரையைப் பிச்சிகினு குடுக்கும்பாங்கோ... நமக்குப் பூட்டையும், பீரோவையும் உடைச்சு குடுத்துகீதுடா... என் சர்வீஸ்லயே இன்னிக்குதான் இவ்ளோ நகையையும், பணத்தையும் அடிச்சுக்கிறேன். இந்த மாதிரி இன்னும் நாலுதபா அடிச்சுட்டேன்னு வையி... அப்பால சர்வீஸ்லேர்ந்து வி.ஆர்.எஸ் வாங்கினு ஹாயா ரெஸ்ட் எடுத்துப்பேன். கொருக்குப்பேட்டை கோபாலோட புள்ளாண்டான் முனியனுக்கு எம் மவளைக் கட்டிக் குடுத்துடுவேன்."

"பையன் என்னா பண்ணிகினு இருக்கான் அண்த்தே?"

"கார்ப்பரேஷன் பஸ்சுல வொர்க் பண்ணிகினு கிறான்டா!"

"கவர்மெண்ட் வேலையா அண்த்தே?"

"தோடா...யார்ரா இவன்... பொல்லாத கவர்மெண்ட் வேலை... பஸ்செல்லாம் பிரைவேட் ஆக்கப் போறான்... இவன் தனியா தொழில் பண்ணிகினு கிரான்... டெய்லி ஆயிரம் ரூவாயாச்சும் அடிப்பான்."

"ஓகோ... 'பிக்பாக்கெட்' அடிக்குறானக்கும்?"

"ரொம்ப ஈஸியா சொல்லிட்டே... அவனுக்கு நாலு ஆட்டோ, ஒரு பஸ்சு ஓடிக்கினுகீது... ரயிலை மட்டும் தனியார் மயமாக்கினா, அதுலயும் ஒண்ணு வாங்கி உடுவான்டா என் மாப்ளை!" பெருமையாகப் பீற்றிக் கொண்டே மணி பார்த்தான் கபாலி.

"அடாடா...மணி ஆயிப் போச்சுடா... இன்னிக்கு நியூஸ் போச்சு... போனா போவுது... டீ.வி. போடு... எதுனா பார்க்கலாம்" கபாலியின் ஆணைக்கிணங்க டீ.வியை ஆன் செய்தான் மாயாண்டி.

'சிறப்பு பெப்ஸி உங்கள் சாய்ஸ் - நேரடி ஒளிபரப்பு'

"இந்தப் பொண்ணு கைல போன்ல பேசணும்னு எனக்கு ரொம்ப நாளா ஆசை அண்த்தே!" ஜொள் வடித்தான் மாயாண்டி.

சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டே, "அதான் போனு கீதே... பேசறதுன்னா பேசுடா!" என்று சிரித்தபடி சொன்னான் கபாலி.

டயல் செய்து சோர்ந்துபோய் போனை வைத்துவிட்டான் மாயாண்டி. உடனே கபாலி டயல் செய்தான். மூன்றாவது முயற்சியில் லைன் கிடைத்துவிட, மாயாண்டி கையில் ரிசீவரைக் கொடுத்தான்.

"ஹலோ யார் பேசறீங்க?" தேன்குரலில் தொகுப்பாளினி கேட்க 'லப்டப்' அதிகரித்தது மாயாண்டிக்கு. மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போனான்.

"நான் மாயாண்டி பேசறேன்!"

"மாயாண்டி, என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க?"

"கெடச்சதையெல்லாம் சுருட்டினு... ச்சே... பீடி கம்பெனியில வேலை பார்த்துகினுகிறேன்."

"எங்கேயிருந்து பேசறீங்க?"

"ஏரியா பேரெல்லாம் யாருக்குத் தெரி

"தலைவருக்கு அரசியல் அரிச்சுவடியே தெரியாது போல."

"எதைவெச்சு சொல்லுற?"

"பாராளுமன்றத்துக்கு ஸ்பீக்கர் தேர்ந்தெடுத்திருக்கிறாங்களே, அது அகுஜாவா, பிலிப்சா அல்லது வெளிநாட்டு ஸ்பீக்கரான்னு கேட்கிறாரு!"

— தூத்துக்குடி சகிதா முருகன்



யும்?... பூட்டிகுற வீட்ல உடைச்சுகினு... ச்சே... உங்களண்ட பேசறேன்னதும், வாயெல்லாம் கொளறுதுங்கோ... நீங்க கொள்ளை அழகா பேசுறீங்கோ..." அந்த நிகழ்ச்சியில் பேசும் ஒவ்வொருவரும் வைக்கும் ஐஸை மாயாண்டியும் வைத்தான்.

"ரொம்ப தேங்க்ஸ்ங்க... உங்களுக்கு எந்தப் பாட்டு வேணும்?"

"ஆங்... திருடாதே... பாப்பா... திருடாதே.. போடுங்கோ!"

"ஸாரி மாயாண்டி, அந்தப் பாட்டு இல்லை... அதுக்கு பதிலா இன்னொரு பாட்டு... 'மலைக் கள்ளன்' படத்துலேருந்து வேற பாட்டு... உங்களுக்கு ரொம்பப் பிடிக்கும்னு நினைக்கிறோம்...சரி... மாயாண்டி, இந்தப் பாடல் உங்களுக்காக...டை..."

டெலிபோன் லைன் கட் ஆகிவிட்டது!

"எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே' பாடல் திரையில் ஓடியது. மாயாண்டிக்கு நீண்ட நாள் ஆசை நிறைவேறியதில் மகிழ்ச்சி.



சற்றுநேரத்தில் டெலிபோன் அடித்தது.

மாயாண்டி "அண்த்தே... போன் வந்துகீது... அனேகமா உனக்காத்தான் இருக்கும்..." என்று சொல்லிக்கொண்டே ரிசீவரை எடுக்கப் போக, பாய்ந்து வந்து அவனைத் தடுத்தான் கபாலி.

"ஒனக்கு மண்டையில எதுனா கீதாடா...? இந்த ஹவுஸ்ஓனருக்கு எவ்னோ போன் பண்றான்... நீ பாட்டுல போனை எடுத்தா நம்மளைக் கண்டுபிடிச்சுட மாட்டானுங்களா?" கோபத்தில் கத்தினான் கபாலி.

"சாரி அண்த்தே... குழம்பிட்டேன். நல்லவேளை... நான் மட்டும் போனை எடுத்திருந்தேன்னு வையி... போலீஸ்ல மாட்டியிருப்போம்..." ஃபீல் செய்தபடி சொன்ன மாயாண்டியிடம், "போலீஸ் கைல மாட்டினா நமக்கு சேஃப்டிடா... ஜனங்க கையில மட்டும் மாட்டினா, நம்மளைக் கவர்மெண்ட் கஜானா கணக்கா காலி பண்ணிடுவானுங்கடா..." என்றான் கபாலி.

பிறகு இருவரும் விடு ஜூட்.

மறுநாள் காலை, வீட்டின் வாசலில் பூட்டு உடைந்திருப்பதைப் பார்த்து அதிர்ந்து போன அருவா வேலுவும், கத்தி கமருதீனும் "டேய்...நாமளே கஷ்டப்பட்டு ஒவ்வொரு வீடா கொள்ளையடிச்சு இங்கே கொணாந்து வைச்சா, எவனோ நம்மகிட்டேயே வேலையைக் காட்டிட்டான்" என்று கவலையோடு பேசிக்கொண்டார்கள்.



''என்னங்க... வாக்கு சாவடியில் '151(க)'-ன்னு போர்டு வைச்சிருக்கு..?''

'' 'கள்ள வாக்கு' போடறவங்களுக்கு வசதியா தனி 'கியூ'வாம்...''

- நாமக்கல் பாலு

''எதுக்கு அவரு தன்னைத்தானே சாட்டையாலே அடிச்சிக்கிறாரு?''

''அவருக்கு கவர்ன்மெண்ட் வேலை கிடைச்சிருக்காம்... ப்ராக்டிஸ் எடுத்துக்கிட்டு இருக்காரு!''

- பெரியகுளம் ஆர். வேணுகோபால்





''என் கணவர் ரொம்ப வித்தியாசமா திட்டுவார்டி.''

''எப்படி?''

''சோகமா இருந்தாப் போதும். உடனே, 'சீரியல் பார்த்த மூஞ்சியாட்டம் இல்லாமல் கலகலப்பா இரு'ன்னு சொல்வார்!''

- சீர்காழி வி. ரேவதி



''என்ன கிங்கரரே! இந்தப் பெண் மணியுடன் டீ.வி.யையும் எடுத்து வந்திருக்கிறீர்?''

''டீ.வி.யில்தான் இந்தப் பெண்ணின் உயிர் இருப்பதாய் இவள் கணவன் சொல்லிக் கொண்டிருந்தான், பிரபோ!''

- வி.சகிதா முருகன்

இந்தச் சிரிப்பு போதுமா?

மேஷம்

முதல் முறையாக உலகக் கோப்பை கால் பந்து போட்டியில் நுழைந்த செனகல், நடப்பு சாம்பியனான ஃபிரான்ஸைத் தோற்கடித்தது. செனகல் நாட்டு வீரர்களுக்கு இருப்பது போல தெளிவான சிந்தனை தெய்வானுகூலம், எடுத்த காரியத்தில் வெற்றி உங்களுக்கும் ஏற்படும். புதிய தொழில் முயற்சி, தொழில் விஸ்தரிப்பு போன்றவை வெற்றி தரும். புது வீடு வாங்கக் கூடிய யோகம் உண்டாகும். பொதுவாகவே இந்த வாரம் முழுவதும் உங்களுக்கு மகிழ்ச்சி கரை புரளும்.

ரிஷபம்

கள்ள வோட்டு வேட்டை, அதிகார துஷ்பிரயோகம் என்று ஏகப்பட்ட விமர்சனங்களுக்கு உள்ளானாலும் தமது வெற்றியை நிலை நாட்டி விட்டார் ஜெயலலிதா. அதுபோல, உங்களுக்கு சகலகாரியங்களிலும் வெற்றி நிச்சயம். தன லக்ஷ்மியின் நேரடிப் பார்வையும் படுகிறது என்றால் மகிழ்ச்சிக்குக் கேட்கவா வேண்டும்? திருமண முயற்சிகள் வேகமாக நடைபெறும். புண்ணிய ஸ்தல தரிசனம், குலதெய்வப் பிரார்த்தனை நிறைவேறும். மாணவர்களில் சிலர் மேற்படிப்பிற்காக, வெளியூர், வெளிநாடு செல்வார்கள்.

மிதுனம்

ஜனாதிபதி தேர்தலில் திடீரென அணு சக்தி விஞ்ஞானி அப்துல் கலாம் வேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்கிறார். அதே போல் எதிர்பாராத வகையில் உங்கள் நிலையும் உயரப் போகுது. புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஊழியர்கள் அதிகாரிகளிடையே சுமுகமான உறவு காணப்படும். பயணத்தாலும் நன்மை கிட்டும். புதிய வீடு, வாகனம், நிலம் போன்றவை வந்து சேரும். இதுவரை இழுத்துக் கொண்டிருந்த காரியங்கள் வேகமாக முடியும்.

கடகம்

சமீபத்தில் ஜெயக்குமார், நயினார் நாகேந்திரன் அமைச்சர்களுக்குக் கூடுதல் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. உங்களுக்கும் பதவி உயர்வு, கூடுதல் பொறுப்பு வந்து சேரும். பண வசதி, வருங்காலத்திற்கான ஏற்பாடுகள் என சுபபலன்கள் வீட்டைத் தேடி வரும். இயந்திரம், மருந்து, கெமிக்கல்ஸ், தோல் வகைகள், உலோகம் போன்ற தொழில்களில் எதிர்பாராத லாபம் கிடைக்கும். சகோதர, சகோதரிகளால் செலவுகள் ஏற்படும். நண்பர்கள், உறவினர்கள் உறுதுணையாக இருப்பார்கள்.

சிம்மம்

பல ஆண்டுகளாக வீட்டுக்குள் சிறை வைக்கப்பட்டிருந்தார் ஆங் சான் சூயி சமீபத்தில் தான் அவரை விடுதலை செய்தது பர்மிய ராணுவ அரசு. அதேபோல் உங்கள் எதிரிகளின் நேர்முக, மறைமுக எதிர்ப்புகள் விலகி அமைதியான சூழ்நிலை உருவாகும். பண நடமாட்டம் தாராளமாக இருக்கும். உத்தியோகத்தில் இருந்த சிக்கல் நீங்கி, கடினமான காரியங்களையும் சாமர்த்தியமாகச் சமாளித்து வெற்றி பெறும் சூழ்நிலை உருவாகும். குடும்பத்தில் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் மறைந்து ஒற்றுமை ஏற்படும்.

கன்னி

நடிகை திவ்யா உன்னி திருமணம் செய்துகொண்டு அமெரிக்காவுக்குப் பறந்துவிட்டார். உங்கள் வீட்டிலும் மேளச் சப்தம் கேட்கப் போகிறது. தேவைக்கேற்ப பண வசதி உண்டாகும். தெய்வப் பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். எதிர்ப்புகள் விலகிப் போகும். கடினமான காரியங்களை உங்கள் திறமையால் 'ப்பூ' என ஊதித் தள்ளிவிடுவீர்கள். பெண்களுக்கு நினைத்தது நிறைவேறும்.

நடக்குமென்பார்; நடக்கும்!

"சிம்ம ராசிக்கு நிறைய பணம் சேரும்னு பலன் சொல்லியிருக்காங்க! ரொம்ப தாங்க்ஸ்!"
- ரேவதி சங்கரன்



படம் : யோகா

அக்னிசர்மா பக்கம்

ஜூன் 19 முதல் 25 வரை

துலாம்

எத்தனை வழக்குகள் போட்டாலும் கவலைப்படாமல் ஜாமீனில் வந்து தமது இரண்டாவது மகளின் திருமணத்தைத் தடபுடலாக நடத்திவிட்டார் லல்லு. கோர்ட் வழக்கு, ஜாமீன் போடுவது போன்றவற்றில் எச்சரிக்கை தேவை. பெண்களுக்கு உற்சாகமான மனநிலை உண்டாகும். பணம் தாராளமாகப் புழங்கும். உடல் ஆரோக்கியம் சீராக இருந்து வரும். எல்லா காரியங்களிலும் இதுவரை இருந்து வந்த மந்தம் நீங்கி வெற்றி கிடைக்கும். ஷேர் மார்க்கெட்டில் நிதானம் தேவை.

விருச்சிகம்

நானூறு ஆண்டுகளாக அடிமைப் பட்டுக்கிடந்த கிழக்கு தைமூர் சுதந்திரமடைந்துவிட்டது. நீண்ட கால முயற்சிகள் வெற்றியடையும். தெளிவான சிந்தனை, தெய்வபலம், அறிவாற்றல் கூடும். எதிர்பார்த்திருந்த நல்ல தகவல் வந்து சேரும். வியாபாரிகள் நல்ல பலனை அடைவார்கள். வர வேண்டிய பாக்கி பணம், பொருள்கள் வந்து சேரும். மாணவர்கள் உழைப்புக்கேற்ற பலனை அடைவார்கள். அரசியல்வாதிகள் விழிப்புடன் இருப்பது நல்லது. உடன் பிறந்தவர்களால் சில பிரச்னைகள் ஏற்பட்டு நலமாகும்.

தனுசு

எவ்வளவு கஷ்டம் வந்தாலும் தாங்கிக் கொண்டு, தன்னம்பிக்கையுடன் எதிர் கொள்கிறார் 'அண்ணி' அங்கயற்கண்ணி. அதுபோல உங்களுக்கும் தன்னம்பிக்கை, துணிவு, விடா முயற்சி உண்டாகும். எதிரிகள் ஓடி ஒளிவார்கள். தொழிலாளிகள், விவசாயிகள் வளர்ச்சி அடைவார்கள். பண வரவு அதிகமாகும். குடும்பத்தில் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் இருக்கும். நண்பர்கள், உறவினர்களுடன் உல்லாசப் பயணம் போகும் சந்தர்ப்பம் ஏற்படும். சிலருக்குப் புதுமனை புகும் பாக்கியம் ஏற்படும்.

மகரம்

இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையேயிருந்த விரோதம் தடைகள், தயக்கம் எல்லாம் படிப்படியாகக் குறைந்து வருவது போல உங்களுக்கும் தடைகள், குறுக்கீடுகள் எல்லாம் விலகும். இதுவரை இருந்து வந்த தொல்லைகள் நீங்கி நிம்மதியடைவீர்கள். ஹோட்டல், ஆடை அலங்காரப் பொருட்கள், வாசனைத் திரவியங்கள், தோல் பொருட்கள் ஆகிய இனங்களில் லாபம் கொட்டும். குடும்பத்தை விட்டுப் பிரிந்தவர்கள் இப்போது வந்து கூடுவார்கள். அரசு விவகாரங்களில் அனுகூலம் உண்டாகும்.

கும்பம்

காங்கிரஸிலிருந்து பிரிந்திருந்த த.மா.க. மீண்டும் காங்கிரஸில் சேரப் போகிறது. நீண்ட காலமாகப் பிரிந்திருந்த உறவினர் அல்லது நண்பர்கள் ஒன்று சேர்வார்கள். தாமதமாகி வந்த காரியங்கள் ஜெட் வேகத்தில் நடைபெறும். பதவி உயர்வும் இடமாற்றமும் சிலருக்குக் கிடைக்கும். கடன் தொல்லைகள் தீரும். திருமணம், கிரகப் பிரவேசம் போன்ற சுப காரியங்கள் நடைபெறும். மாணவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். பிள்ளைகளால் பெற்றோர்கள் மகிழ்ச்சியும் பெருமையும் அடைவார்கள்.

மீனம்

'அண்ணாமலை'யில் பட்டாளத்தாரிடமிருந்து கோயில் சொத்துகள் காந்திமதியம்மாவுக்குக் கிடைக்கிறதோ இல்லையோ, உங்கள் சொத்து விவகாரங்கள் நல்லபடியாக முடியும். கடன் தொல்லை நீங்கி கையிருப்புக் கூடும். பெண்களின் உடல் நலம், மனநலம் மேன்மை அடையும். புனித காரியங்களில் ஈடுபாடு உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் குதூகலமும் நிரம்பி வழியும். பெரியோர்கள், அனுபவஸ்தர்களின் ஆலோசனைகளை ஏற்று நடந்தால் மிகவும் நல்லது.

காதில் விழுந்தவை!

● திமுகவில் உட்கட்சித் தேர்தல்கள் நடக்கவிருக்கின்றன. கோஷ்டித் தகராறுகள் காரணமாக ஒரு ரெவின்யூ மாவட்டத்துக்கு ஒரு மாவட்டச் செயலாளர்தான் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் சென்னை மாவட்டம் மட்டும், வட சென்னை, தென்சென்னை என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பரிதி, செயலாளராக இருக்கும் மத்திய சென்னையைக் காவு கொடுத்து விட்டார்கள். இப்போது பரிதி, வடசென்னை மாவட்டச் செயலாளர் பொறுப்புக்குப் போட்டியிடுவார் என்கிறார்கள்.





தென் சென்னையைப் பொறுத்தவரை தி.நகர் தொகுதி எம்.எல்.ஏ அன்பழகன் மாவட்டச் செயலாளர் பொறுப்புக்குப் போட்டியிடக் கூடும். இப்போது துணைச் செயலாளராக இருக்கும் கு.க.செல்வம், ஸ்டாலின் ஆதரவோடு இந்தப் பதவியைப் பிடிக்கப் பார்க்கிறார். சைதை கிட்டுவுக்கு விடை கொடுக்கிறது கழகம்!

“தலைவரோ, தளபதியோ, யாரையும் சிபாரிசு செய்வதோ, அடையாளம் காட்டுவதோ கூடாது. அப்போதுதான் உண்மையான ஜனநாயக அடிப்படையில் தேர்தல் நடக்கும். இல்லையேல ஜால்ராக்களும், பதவி சுகம் அனுபவித்தவர்களும்தான் பொறுப்புக்கு வருவார்கள்'' என்று எச்சரிக்கிறார் சீனியர் கழகப் பிரமுகர் ஒருவர்.

குப்பையில் கொட்டுது பணம்!

● திமுக ஆட்சியில் நடந்து வந்த ஒரு விஞ்ஞான ஊழல் இன்றளவும் தொடர்கிறது. சென்னை நகரில் குப்பைகளை எடுத்து சிங்கப்பூர் நிறுவனமான ஓனிக்ஸ் நியமிக்கப்பட்டுள்ளது. இவர்கள் எடுக்கும் குப்பைகளை, பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் மாநகராட்சி குப்பை கொட்டும் மைதானங்களில் லாரியில் எடுத்துச் சென்று கொட்டுவதற்கு டன் ஒன்றுக்கு இவ்வளவு ரூபாய் என்ற கணக்கில் பணம் ஓனிக்ஸ் நிறுவனத்துக்குக் கொடுக்கப்படுகிறது. ஆறு ரூபாயில் தொடங்கி இந்தத் தொகை இந்த ஐந்து வருட காலத்தில் இரண்டு முறை உயர்த்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு லாரியாக எடை போட்டு குப்பைகளைப் பெறுகிறது மாநகராட்சி. ஆனால் சரியான எடை அளவுக்குப் பதிலாகக் கூடுதல் எடை பதிவு செய்யப்படுகிறதாம். அந்த இடைப்பட்ட வித்தியாசத்துக்கு உண்டான தொகையை அதிகாரிகளும், ஆளுங்கட்சிப் பிரமுகர்களும் பங்கு போட்டுக் கொள்கிறார்களாம். யாரும் சோதனை செய்து பார்க்க முடியாத வகையில் குப்பைகளும் உடனுக்குடன் எரிக்கப்பட்டு விடுகிறதாம்.

● தி.மு.க தலைமை மீது ஏதோ கோபத்தின் காரணமாக சற்று ஒதுங்கியிருக்கும் ஆலடி அருணா காமராஜரின் நூற்றாண்டு விழாவையொட்டி அவரைப் பற்றிய புத்தகம் எழுதிக் கொண்டிருக்கிறார். அதன் வெளியீட்டு விழாவை, கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு நடத்த இருக்கிறாராம். அ.தி.மு.க அமைச்சர்களும் கலந்து கொள்ளக் கூடும்.

— சஞ்சயன்

அனுராதா சேகர்

“பேசி... என் அன்பே...

ஏதோ சொல்றாங்களேன்னு அல்டையா நினைக்காமல், எங்கள் அன்புமிகு அழைப்பை ஏற்று, சுற்றுலா பொருட்காட்சித் திடலுக்கு ஓசி பாஸில் வந்ததற்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எப்போதுமே சச்சரவுக்குரிய, பரபரப்பான சம்பவம் ஒன்றை விவரித்தபின், இறுதி பாராவில் ஒரு பயனுள்ள (?!) மெசேஜ் சொல்லி, 'சுபம்' கார்டு போடுவதுதான் இந்தத் தொடரின் ப(ா)ணி என்றாலும், இந்த வாரம் கொஞ்சம் உல்டா!

முதலில் ஸ்ட்ரெயிட்டாக மேட்டர்!

ஆதாமுக்கும் ஏவாளுக்கும் அடிக்கடி கோல்டுவார், ஹாட்வார் எல்லாம் நடப்பது ஏன்? ஒரே வீட்டில் பல வருஷங்கள் கராத்தே ஹுசைனியும், போஸ்டர் ஆசையும் போல இணை பிரியாமல் வாழ வேண்டியவர்கள், தங்கபாலு – இளங்கோவன் போல பிராண்டிக் கொண்டிருப்பது ஏன்?

கமிங் டு தி மேட்டர். ஆதாமுக்கும் அவருடைய பொஞ்சாதிக்கும் இடையே ஆதி காலந்தொட்டே, மொழிப் பிரச்னை இருப்பதே அவர்கள் ஒருத்தரையொருத்தர் புரிந்து கொள்ளாமைக்குக் காரணம் என்று மனவியலார் மொழியியலாராக மாறி, கண்டு பிடித்துள்ளனர்!

“இல்லையே... சுத்தமான 916 மெட்ராஸ் தமிழ்லே தானே பேசிக்கிறோம்” என்று ஊடாலே பூராதிங்கம்மா!

பேசுவது ஒரே மொழி தான்.. அதே வார்த்தைகள் தான். ஆனால் இருவருடைய அகராதியிலும் வெவ்வேறு அர்த்தங்கள். அப்படியிருக்கும் போது பிரபல டீ.வி. காம்பியரணியின் முந்தானையைத் திருகும் மானரிஸம் மாதிரி, தம்பதியின் தகவல் தொடர்பு நிலையும் திருகித் திருகிப் போகிறது.

இன்னும் கொஞ்சம் விளக்கமாகப் பகர்ந்தால், ஆதாமின் மொழி, ரொம்ப சாதா மொழி. ஆப்பக்கடை ஆயா சுடும் தோசை மாதிரி... சும்மா ஒரு சொய்ங்! ஆர்டினரி கேள்வி, அதுக்கேத்த பதில்.

ஆனால் ஏவாள் பேசற மொழி இருக்குது பாருங்க... ஸ்டார் ஹோட்டல் சமையல் ரேஞ்ச்! மறைமுகமான கேள்வி, மந்திரமான பதில், பூடகமான பாஷை என புரிந்து கொள்ள சிரமமானது. அதிலும் புருஷன் கிட்டே பேசும்போது, ஸ்பெஷல் பந்தாவும் ஊடு பயிர் போல புகுந்து விடும்.

அர்த்தத்துக்குள் அர்த்தம். அதற்குள் ஒரு சுந்தக எதிர் பார்ப்பு. மூடு மந்திரத் திரி ஒன்றைச் செருகி, ஆசைக் காகிதத்தால் டைட் பேக்கிங் செய்து, எப்படா வெடிக்கும் என்று ஏவாள் காத்திருக்க... பாவம், நம்ம ஆதாம் தன்னுடைய வறட்டு வெள்ளை மொழியில் பதில் சொல்ல.. டமார்! ஆதாம் பீஸ்...பீஸ்!



இப்ப வாங்க, சுற்றுலா பொருட் காட்சிக்கு வந்திருக்கும் சுப்ரமணி, கல்யாணி தம்பதியைப் பின் தொடரலாம்.

“அப்பனே... பிள்ளையாரப்பா... இடது பக்கம் இருக்கிற ராஜஸ்தான் புடைவைக் கடை மட்டும் எப்படியாவது என் பொண்டாட்டி கண்ணுலே படாமலே போயிடுச்சுன்னா, உன் சந்நிதிக்கு வந்து சிதறு தேங்காய் போடறேம்பா” என்று சிந்தை கலங்க கையூட்டு ஆசை காட்டிக் கொண்டிருக்கும் சுப்ரமணியை மட்டும் ஜூம் செய்யுங்க.. நமக்கு வேண்டியவர்.

சுப்ரமணியின் பிரார்த்தனை, பிள்ளையாரின் காதில் விழுமுன்பே, கல்யாணியின் கண்கள் புடைவைக் கடையில் விழுந்து

விட்டது. பிள்ளையாருக்கு, ஒரு சிதறு தேங் காய் போச்!

"ஏங்க... இந்தக் காலண்டர்லே இருக்குற பொண்ணு, கட்டியிருக்கிற புடைவை நல்லாயிருக்கு... இல்லீங்க?"

நல்லாயிருக்கான்னு மேதகு அபிப்ராயம் கேட்டா, 'ஆமா.. இல்லை'னு நிப்பாட்டிக் கலாம்தானே... ஆனால் ஏவாள் பாஷையை

கேட்டேன்"– என்கிறாள் கல்யாணி கடுப்பின் விளிம்பில் எட்டிப் பார்த்து.

கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டுமா? சுப்ரமணி சமாளிக்கிறான்.

"நல்லாதான் இருக்கும். ஏன்னா புடைவையைக் கட்டியிருக்கிறது சோனாலி பிந்த்ரே!"

என்னவோ சொல்லப்போய், ஏதோ



தப்பாகப் புரிந்து கொண்டு அந்தப் புடைவையை வாங்க விரும்புகிறாள் என தானாகவே கற்பனை செய்து கொண்டதால், பதில் எப்படி வருகிறது பாருங்கள்.

"உன்கிட்டேதான் நிறையப் புடைவை இருக்கே!"

"நான் இப்ப உங்கக்கிட்டே புடைவையா கேட்டேன். நல்லா இருக்கான்னுதானே

'சப்த'பதி!

கல்யாணமான முதல் மாதம் கணவன் பேச, மனைவி கேட்கிறாள். இரண்டாம் மாதம் மனைவி பேச, கணவன் கேட்கிறான். மூன்றாம் மாதம், இரண்டு பேருமே பேச, ஊரே கூடி நின்று கேட்கிறது!



''எங்க காதல் எட்டு வருஷமா தொடருதுன்னா பார்த்துக் கொள்ளேன்''

''சுண்டல் பாக்கி 2463ரூபாய் வைச்சிருக்கீங்கன்னு தெரிஞ்ச போதே நினைச்சேன்!''

— மங்கை



'சார்! இந்தியா–பாகிஸ்தான் போர் வந்துடுமா?''

''ஏன் கேட்கறீங்க?''

''பொழுதாபொழுதன்னிக்கும் மாமியார் மருமகள் சண்டையைப் பார்த்துப் பார்த்து போர் அடிச்சுப் போச்சு.''

— ரிஷிவந்தியா



''பாரதி பாலுங்கிற பேரை அந்த ரஜினி ரசிகர் சுருக்கி வைச்சுகிட்டார்!''

''என்னன்னு?''

'' 'பாபா'ன்னுதான்!

— நெல்லைராஜ்

ஒன்றாகி... சின்னதாகக் கசப்பு!

அடுத்து வந்த இரண்டு மூன்று ஸ்டால்களில் ஏறி இறங்கியதில், நிலைமை கொஞ்சம் சகஜமாகியிருக்க, கல்யாணியும் அன்பே உருவானாள்.

''ஏங்க, ஜூஸ் சாப்பிடறீங்களா?''

''எனக்கு வேணாம். வயிறு ஃபுல்லா இருக்கு.''

''எனக்கு வேணாம். ஆனா, நீ சாப்பிடும்மா... டயர்டா இருக்கே..'' என்று சுப்ரமணி ஓடோடிப் போய், கூட்டத்தில் இடிபட்டு டோக்கன் வாங்கி, நுரை ததும்பும் சாத்துக்குடி ஜூஸ் வாங்கித் தந்து பாசத்தோடு உபசரிப்பான் என்பது கல்யாணியின் தொலைநோக்கு ஆசை!

ஆனால் அதற்கு சுப்ரமணி, கொப்பரைத் தேங்காவிடமிருந்து இந்த மாதிரி விட்டேத்தியான பதில் வந்ததால் கல்யாணி ஓடினாள். ஓடினாள்... எரிச்சலின் எல்லைக்கே ஓடினாள்.

''எனக்கு தாகமா இருக்கு... ஜூஸ் வாங்கித் தாங்க'' என்று கல்யாணி நேரடியாகப் பாயிண்டைப் பிடிச்சிருந்தா, சுப்ரமணிக்கு 'பளிச்' என்று புரிஞ்சிருக்கும். பத்து ரூபாய் ஜூஸோடு பண்பலை பாய்ந்து, பதிவிரதா தர்மம் காப்பாற்றப்பட்டிருக்கும்.

கல்யாணி மறைச்சு, ஒளிச்சு, பூடகமாகக் கேட்பாளாம். ஆனால் பொண்டாட்டி மனசை, சி.டி.ஸ்கேன் எடுத்த மாதிரி சுப்ரமணி புரிஞ்சுக்கிட்டு அனுசரிச்சுப் போகணுமாம். இது டூ மச் இல்லீங்களா?

''நாக்கு வறண்டு போய் கேட்டாக்க கூட, ஒரு ஜூஸ் வாங்கித் தரலை நீங்க. அல்பம்! உங்கக் கூட வந்ததே தப்பு..'' என்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு ஒரு வாரத்துக்கு சண்டை போட்ட கல்யாணியின் கணவன் சார்பாகச் சொல்லப்படும் நீதி இதுதான்:

ரொம்ப கற்பனையா, பூடகமா, நெளிச்சு, சுளிச்சு, மறை பொருள் எல்லாம் வைச்சு பொம்பளைங்க பேசினாலும், அதைப் புரிஞ்சுக்கும் சூட்சுமம் ஆதாம்களில் பலருக்கு இல்லை என்பதால், சிம்பிளாகப் பேசுங்க... வெளிப்படையாகப் பேசுங்க...

'' 'போ' என்னும் வார்த்தையால் 'வா' என்கிறாய்'' என்று அஜித் பாடுவது கவிதைக்கு வேண்டுமானாலும் அழகாயிருக்கலாம். வாழ்க்கைக்கு? 'வா'ன்னே சொல்லிடுங்களேன்!

(அடுத்த வாரம்: கீதா – ராகவன் தம்பதி)

மத்திய உள்துறையின் புலனாய்வுப் பிரிவுக்கு ஒரு தலைவலி. பாகிஸ்தானில் இருப்பவர்கள், இந்தியாவில் வசிக்கும் தங்கள் உறவினர்களைப் பார்க்க வருவதற்காக, பாகிஸ்தானில் உள்ள இந்திய தூதரகம் மூலம் சிறப்பு அனுமதி வழங்கப்பட்டு வந்தது. இப்போது, இந்த பர்மிட்டும், இந்தியா - பாக். இடையிலான ரயில் மற்றும் பஸ் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டுவிட்டது. ஆனால், பர்மிட் மூலம் இந்தியாவுக்கு வந்தவர்களில் சுமார் ஐந்நூறு பேர், இன்னும் பாகிஸ்தானுக்குத் திரும்பிப் போகவில்லை. இவர்களில் சுமார் 375 பேர் குஜராத்துக்கு வந்தவர்கள் என்பது கவலையுடன் குறிப்பிடத்தக்க அம்சம்.

இவர்கள் ஏதாவது சதித்திட்டத்தைச் செயல்படுத்த இந்தியாவுக்கு அனுப்பப்பட்டவர்களா என்ற கேள்வி, இந்திய உள்துறை அமைச்சகத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

பிரதமர் ஜாலியாக மணாலிக்குப் புறப்பட்டபோது, திரிணாமூல் காங்கிரஸ், பா.ம.க. இரண்டு கட்சி வி.ஐ.பி.களும் குஷி மூடில் இருந்தார்கள். பார்டர் டென்ஷன் காரணமாக, விடுமுறையை, பாதியிலேயே முடித்துக் கொண்டு, பிரதமர் திரும்பிவிட்டதில், இவர்களுக்கு உள்ளூர வருத்தம். காரணம், மணாலி ஓய்வின்போது தமது மத்திய அமைச்சரவை விரிவாக்கத்தில், சேர்க்கப்படவுள்ள பா.ஜ.க. மற்றும் கூட்டணிக் கட்சியினர் பெயர்களை இறுதி செய்வார் பிரதமர் என்று கூறப்பட்டதுதான். இனி, புதிய ஜனாதிபதி பதவி ஏற்புக்கு அப்புறம்தான், புது அமைச்சர்கள் பதவி ஏற்பு என்கிறது பிரதமர் அலுவலக வட்டாரம்.

பார்லிமெண்ட் வளாகத்தில், சீனியர் அமைச்சர்களுக்கு தரைத் தளத்திலும், ஜூனியர்களுக்கு மூன்றாவது தளத்திலும் அலுவலக அறைகள் ஒதுக்கப்படுவது மரபு. ராம் விலாஸ் பாஸ்வான் ராஜினாமா செய்தவுடன், அவரது அறையை, தங்களுக்கு ஒதுக்கச் சொல்லி, பாராளுமன்றத் துறை அமைச்சர் பிரமோத் மகாஜனுக்கு ஏகப்பட்ட பேர் பிரஷர் அளித்தனர். அதிலும் ராம்நாயக், டி.ஆர்.பாலு இடையில்தான் ஏகப்போட்டி. பார்த்தார் மகாஜன். "இப்போதைக்கு அந்த அறையை யாருக்கும் கொடுக்க வேண்டாம். பூட்டி வையுங்கள்!" என்று சொல்லிவிட்டார். இப்போது பாஸ்வான் இருந்த அறையில் பெரிய பூட்டு தொங்கிக் கொண்டிருக்கிறது!

லாலு பிரசாத் யாதவ், டி.வி. நிகழ்ச்சி நடத்திக் கொடுக்க ஒப்புக் கொண்டிருக்கிறார். இதற்காக அவருக்குப் பேசப்பட்டுள்ள தொகை ஐந்து கோடியாம்! "பல்வேறு கேஸ்களை நடத்தும் வக்கீல்களுக்கு ஏராளமாக ஃபீஸ் தர வேண்டியுள்ளதே! அதற்கு இந்தப் பணம் பயன்படுமே" என்று விளக்கம் கொடுக்கிறாராம் லாலு.

இங்கே வெள்ளை வேட்டியில் காட்சியளிக்கும் மாறனும், டி.ஆர். பாலுவும், டெல்லியில் சஃபாரி சூட் அணிவார்கள் என்பது பழைய செய்தி! ஆனால் புதிதாக ராஜ்ய சபைக்குச் சென்றுள்ள ஓர் இளைய தலைவரும் வெள்ளை சபாரிதான் அணிகிறார். அவர் ஜி.கே.வாசன்!

— நியூஸ்வாலா



காஷ்மீர்!



வாங்கியவர்: மகாராஜா குலாப் சிங்.
விற்றவர்: ஆங்கிலேய அரசு.
விற்ற தொகை 75 லட்சம் ரூபாய்.
விற்கப்பட்ட பொருள்: காஷ்மீர்

1846ம் ஆண்டு மார்ச் பதினாறாம் தேதி கையெழுத்திடப் பட்டது இதற்கான ஒப்பந்தம். 'அம்ரித்ஸர் ஒப்பந்தம்' என்று அழைக்கப் படும் இதன் முக்கிய விவரங்கள் சுருக்கமாக இதோ:

● சிந்து நதிக்குக் கிழக்குப்புறமும், ரவி நதிக்கு மேற்குப்புறமும் உள்ள மலை மற்றும் குன்றுகள் அடங்கிய பகுதியை மகாராஜா குலாப்சிங்கிற்கும் அவரது ஆண் வாரிசுகளுக்கும் பிரிட்டிஷ் அரசு 1846 மார்ச் ஒன்பதாம் தேதி அன்று விற்றது.

● மேற்படி பகுதியின் கிழக்கு எல்லையை பிரிட்டிஷ் அரசு மற்றும் மகாராஜா குலாப் சிங்கின் பிரதிநிதிகள் நிர்ணயிப்பார்கள்.

● இந்த விற்பனை தொடர்பாக மகாராஜா, பிரிட்டிஷ் அரசுக்கு எழுபத்தைந்து லட்சம் ரூபாயை இந்த ஆண்டு அக்டோபர் ஒன்றாம் தேதிக்குள் செலுத்த வேண்டும்.

● மகாராஜா குலாப்சிங் இந்தப் பகுதியின் எல்லைகளை, பிரிட்டிஷ் அரசின் ஒப்புதல் இல்லாமல் மாற்றியமைக்கக்கூடாது.

● லாகூர் அரசுடனோ, பக்கத்தில் உள்ள வேறு ஏதாவது தேசத்துடனோ பிரச்னைகள் ஏற்பட்டால் அவற்றை மகாராஜா பிரிட்டிஷ் அரசிடம் கொண்டு செல்ல வேண்டும். பிரிட்டிஷ் அரசின் தீர்ப்பே இறுதியானது.

● எந்த ஒரு ஐரோப்பிய அல்லது அமெரிக்க நாட்டுக் குடிமகனையோ மகாராஜா தமது ஊழியத்தில் வைத்துக் கொள்ள விரும்பினால், அதற்கு பிரிட்டிஷ் அரசின் முன் அனுமதியைப் பெற வேண்டும்.

● வெளிநாட்டுப் பகைவர்களிடமிருந்து மகாராஜா குலாப்சிங்கின் எல்லைகளைப் பாதுகாக்க பிரிட்டிஷ் அரசு உதவும்.

● பிரிட்டிஷ் அரசின் மேலாண்மையை மகாராஜா குலாப்சிங் ஏற்றுக் கொள்கிறார். அப்படி ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக ஒவ்வொரு வருடமும் பிரிட்டிஷ் அரசுக்கு, கீழ்க்கண்டவற்றை அவர் அன்பளிப்பாகத் தர வேண்டும்

ஒரு குதிரை, ஆடுகளின் ரோமத்தில் உருவாக்கப்பட்ட பன்னிரண்டு சால்வைகள் (ஆறு சால்வைகள் ஆண் ஆடுகளிடமிருந்தும், ஆறு சால்வைகள் பெண் ஆடுகளிலிருந்தும் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும்), மற்றும் அரை டஜன் காஷ்மீரி சால்வைகள்.








ஜி.எஸ்.எஸ். 2

இந்த ஒப்பந்தத்தில் மகாராஜா குலாப்சிங் நேரடியாகக் கையெழுத்திட்டார். ஆங்கிலேய அரசின் சார்பில் சர் ஹென்றி ஹார்டிங் என்பவரது முத்திரை இடப்பட்டது. இவரே அப்போது கவர்னர் ஜெனரலாக விளங்கியவர். ஆங்கிலேய அரசின் பிரதிநிதிகளாக ஒப்பந்தத்தில் நேரடியாகக் கையெழுத்திட்ட இருவர் ஃபிரடரிக் க்யூரி மற்றும் ஹெச்.எம். லாரன்ஸ் ஆகியோர்.

மகாராஜா குலாப்சிங் ஏற்கெனவே ஜம்முவைத் தம் வசம் வைத்திருந்தவர். மேற்கூறிய ஒப்பந்தத்தின்படி காஷ்மீர் அவர் கைக்கு வந்தது. குலாப்சிங்கின் தோன்கள் தினவெடுக்க, அருகிலிருந்த லடாக் பகுதியையும் தன் வசப்படுத்திக் கொண்டார்.





ஆக, இன்றைய ஜம்மு காஷ்மீர் மாநிலம் இப்படித்தான் உருவானது.

குலாப்சிங்கிடமிருந்து ரன்பீர்சிங்கிற்கும், அதற்குப் பிறகு பிரதாப்சிங்கிற்கும் காஷ்மீரை ஆட்சி செய்யும் வாய்ப்பு அடுத்தடுத்து வந்தது.

ஆனால் 1889ல் பிரதாப் சிங்கின் ஆட்சிக்கு ஒரு சோதனை. அம்ரித்ஸர் ஒப்பந்தத்தின்படி தான் ஒரு படி மேலேதான் என்ற தெனாவட்டைக் காட்டுவதற்காகவோ பிரிட்டிஷ் அரசு பிரதாப்சிங்கிடமிருந்து ஆட்சிப் பொறுப்பைப் பறித்தது. மக்களின் குறைகளை அவர் தீர்க்கப்பாடுபடவில்லை என்றும், இதைப் பயன்படுத்திக் கொண்டு அண்டை நாடுகள் காஷ்மீருக்குச் சோதனை தரலாம் என்றும் அதற்கான காரணத்தைக் குறிப்பிட்டது.

பதறிப் போனார் பிரதாப்சிங். பதவி ஆசை யாரை விட்டது? காஷ்மீரின் பல பகுதிகளுக்கு விஜயம் செய்தார். மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார். தீர்க்க முடிந்ததைத் தீர்க்க முனைந்தார். ஒருவழியாக பிரிட்டிஷ் அரசு மீண்டும் அவருக்கே ஆட்சிப் பொறுப்பைத் தர சம்மதித்தது.

இன்று வேண்டுமானால் ஜம்மு -

காஷ்மீர் ஒரு கலவர பூமியாக, யுத்த களமாக இருக்கலாம். ஆனால் அப்போது அது ஓர் அமைதியான பகுதி. ஜம்முவில் பெரும்பாலானவர்கள் இந்துக்கள். காஷ்மீரில் அதிகம் பேர் முஸ்லிம்கள். லடாக்கில் நிறைய எண்ணிக்கையில் இருந்தவர்கள் புத்தமதத்தினர். அனைவரும் ஒற்றுமையாக இருந்தார்கள். சுதந்தரப் போராட்டம் இந்தியாவில் காந்திஜியின் தலைமையில் நடைபெற்றபோது, இங்குள்ள மன்னராட்சி மாநிலங்களில்கூட அதன் தாக்கம் தெரிந்தது. ஆங்கிலேய அரசின் பிரித்தாளும் சூழ்ச்சியால் மதக்கலவரங்கள் நாடு முழுவதும் சூழ்ந்தன. ஆனால் அப்போதுகூட காஷ்மீரில் பல்வேறு மதத்தவர்களிடையே பகைமை ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கே 'வெள்ளையனே வெளியேறு இயக்கம்' வலுவடைந்தது என்றால், அங்கே 'காஷ்மீரை விட்டு வெளியேறு' என்ற கோஷம் சிறிது சிறிதாக வலுவடைந்தது. அதற்கு முக்கிய காரணம் ஷேக் அப்துல்லா.

மன்னராட்சிக்கு எதிராக காஷ்மீரில் ஓர் அமைப்பு தோன்றியது. 'அகில ஜம்மு காஷ்மீர் முஸ்லிம்கள் பேரவை' என்ற அந்த அமைப்பைத் துவக்கியவர்கள் ஷேக் அப்துல்லாவும் மிர்வஸ் யூசுப் என்பவரும்.

மன்னராட்சி பிடிக்காத இந்துக்களும் இருந்ததாலும், ஜம்மு பகுதியில் எண்ணிக்கையில் அதிகமாக இருந்த இந்துக்களையும் தமது அமைப்பில் இணைத்துக்கொண்டால் அது மேலும் பலம் பொருந்தியதாக இருக்கும் என்பதாலும் ஷேக் அப்துல்லா வேறு பாதையில் யோசிக்கத் தொடங்கினார். சுமார் ஏழு வருடங்கள் இயங்கி வந்திருந்த அமைப்பைக் கலைத்தார். 'ஜம்மு காஷ்மீர் தேசியப் பேரவை' என்ற புதிய அமைப்பைத் துவக்கினார். இதை மதச் சார்பற்ற இயக்கம் என்று அறிவித்தார்.

காஷ்மீர் முழு சுதந்தரம் பெற்ற தனி நாடாக இருக்க வேண்டும் என்பது ஷேக் அப்துல்லாவின் அப்போதைய விருப்பமாக இருந்தது. பிரிட்டிஷ் அரசின் கைப்பாவையாக அது நிச்சயம் இருக்கக் கூடாது என்று தீர்மானமாகக் கருதினார். மகாராஜா ஹரி சிங்கின் முன்னோர்களில் ஒருவரான குலாப்சிங் கையெழுத்திட்ட 'அமிர்தஸர் ஒப்பந்தம்' ரத்து செய்யப்பட வேண்டும் என்று கர்ஜித்தார், காஷ்மீரச் சிங்கம் என்று வர்ணிக்கப்பட்ட ஷேக் அப்துல்லா. மன்னர் ஹரிசிங் திணறினார். முஸ்லிம்கள் நிறைந்த ஒரு ராஜாங்கத்தில் இந்துவான தமக்கு எதிர்ப்பு அதிகமாவதைக் கண்டு பதறினார். சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டும் என எண்ணி ஷேக் அப்துல்லாவைக் கைது செய்தார்.

ஹரிசிங், ஷேக் அப்துல்லா விரோதத்தினால் ஜம்மு காஷ்மீர் பெரும் சோதனைகளைச் சந்திக்கத் தொடங்கியது. காஷ்மீரை மிக மிக உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தார் ஜின்னா.

(தொடரும்)

கல்கி - VBC Jewellery

இணைந்து வழங்கும்

புன்னகைப் போட்டி - 16 முடிவு

'நம் ஊர் அரசியல்வாதிகள், யாரிடம் என்ன கலையைக் கற்றால் வசதியாக இருக்கும்?' என்று எழுதச் சொல்லி அறிவித்திருந்தோம். ஆயிரக் கலை எழுதிய அபூர்வ சிந்தாமணிகளில், இரண்டு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, தலா நான்கு கிராம் தங்கம் பரிசு பெறுகிறார்கள்.

'டீ பார்ட்டி நடத்துவது எப்படி?' என சுப்ரமண்ய சுவாமியிடமும், 'தேர்தலில் நிற்காமல் ஆட்சியில் அமர்வது எப்படி?' என முஷாரஃபிடமும் கற்றுக் கொள்ளலாம்.

கே. அண்ணாகாந்தி, ஸ்ரீ லட்சுமி காம்ப்ளக்ஸ்,
84சி.1, திருச்சி ரோடு, நாமக்கல் - 637001.

பிரபல இருதய சிகிச்சை டாக்டர்களிடம் அந்த நோய்க்கான அடையாளங்களைக் கற்றுக் கொள்ளலாம். கைது செய்யும்போதோ, கோர்ட்டுக்குப் போகும்போதோ நடிக்க உதவும்.

சு. மோகன்,
1. அயன் வெள்ளாழத் தெரு,
சிதம்பரம் - 608 001

கோஷ்டிச் சிரிப்பு!



''டீ.வி.யில தொண்ணூற்று ஆறு நாள் ஓடிய சீரியலை திரைப் படமா எடுக்கலாமான்னு யோசிக்கறேன்.''

''அவ்வளவு நல்ல சீரியலா..!''

''ஊஹூம். தியேட்டர்ல தம்கட்டி நாலு நாள் ஓட்டிட்டா, 'நூறாவது நாள்'னு போஸ்டர் அடிச்சுக் கொண் டாடிடலாமே!''

- சேலூர் எம்.ஏ.சந்திரசேகரன்

''தொடரோட இந்த வார பகுதி இன்னும் எடுத்து முடிக்கலையே என்ன பண்ண டைரக்டர்?''

''மூணு வருஷத்துக்கு முன்னாடி உள்ள ஒரு பழைய எபிசோட போட்டு விடுங்க. யார் நினைவு வைச்சிருக்கப் போறா!''

- வி.சகிதா முருகன்

''நம்ம தலைவருக்கு டாக்டர் பட்டம் கொடுத்தது தப்பாப் போச்சு!''

''ஏன் என்ன ஆச்சு?''

''குழந்தைகளுக்குப் பெயர் வைக் கச் சொன்னா அனாசின், சாரிடான்னு பெயர் வைக்கிறார்!''

- பா.விஜயசாரதி

''அந்தப் பாகவதர்கிட்ட நான் பாடும்போதே சொன்னேன்; கேட் கலே. இப்ப போலீஸ் புடிச்சுட்டுப் போயிட்டாங்க.''

''என்ன சொன்னீங்க?''

'' 'தம்' பிடித்துப் பாடாதீங்கன்னு சொன்னேன்.''

தேனி முருகேசன்

இலஞ்சி வளர் செல்வக் களஞ்சியம்

வில்லினையொத்த புருவமுடைய வேலவன், சொல்லினைத் தேனில் குழைத் துரைப்பவளான சிறு வள்ளியைத் தேடிச் சென்று மணந்த கதை கேட்கக் கேட்க அலுக்காதது.

அந்தச் சிறு வள்ளிக்குச் சொந்தம் கொண்டாடும் குலத்தோர் குறவர்கள். குறமகள் கைப்பிடித்த கந்தன் அவர்களின் குலதெய்வமாகவே போற்றப்படுபவன், உரி மையோடு அவனிடம் உறவு கொண்டாடும் குறவஞ்சியர் அது குறித்துப் பாடும் அரிய தமிழ்ப் பாடலைக் கேளுங்கள்:

வெருவிவரும் தினைப்புனத்தில்
பெருமிருகம் விலக்கி
வேங்கையாய் வெயில் மறைந்த
பாங்குதனைக் குறித்தே
அருள் **இலஞ்சி** வேலர் தமக்கு
ஒரு பெண்ணைக் கொடுத்தோம்
ஆதினத்து மலைகள் எல்லாம்
சீதனமாய்க் கொடுத்தோம்.

குன்றுதோறும் நின்று விளையாடுதல் முருகனின் நிலைபெற்ற பண்பு என்று அறிந்து, தங்கள் வட்டாரத்து மலை கள் மொத்தத்தையும் அவனுக்குச் சீதனமாகத் தரும் பாங்கு எத்தனை உயர்வானது! மலையின் உயரமே மணமும்.

இப்பாடல் குறிப்பிடும் இலஞ்சி என்ற திருத்தலம் திருநெல்வேலி மாவட்டம் தென்காசியிலிருந்து மூன்று மைல் தூரத்தில் இருக்கிறது.


மாப்பிள்ளை முருகனாக இலஞ்சி வேலவன் மந்தகாச புன்னகை சிந்தி நிற்கும் காட்சியிருக்கட்டும்... அவன் உறையும் இலஞ்சியை அடையும் வழியெல்லாம்கூட அல்லவா அழகுமயமா யிருக்கிறது. தென்காசியிலிருந்து இலஞ்சி செல்லும் வழியில் தென்மேற்கே குற்றாலம் இருக்கிறது. திரிகூட ராசப்ப கவிராயரின் குற்றாலக் குறவஞ்சி ஞாபகம் வந்தே தீரும். வசந்தவல்லி அந்த குற்றாலநாதரைக் காதலித் ததும், ஈசன் அவளை ஏற்று அருள் புரிந்ததும் குறவஞ்சி என்ற இலக்கிய வடிவில் சந்தத் தமிழில் பதிவு செய்யப்பட்டுள்ளன. 'தேனருவி திரையெழும்பி வானின் வழி ஒழுகும்; செங்கதிரோன் தேர் காலும் பரி காலும் வழுகும்' என்ற அற்புதக் கற்பனை யைத் தூண்டிய அருவியும் மலைமுகடுகளும் அவற்றுக்கு மேலே ஒளிரும் சூரியனுமாக அந்தப் பிரதேசமே அழகுமயமாயிருக்கிறது.

அழகின் உறைவிடமான முருகன், தான் குடியேறவும் காதல் புரியவும் இத்தகைய தொரு பிரதேசத்தைத் தேர்ந்தெடுத்ததில் ஆச் சர்யம் என்ன!

இலஞ்சி, வயல்களும் சோலைகளும் சூழ செழிப்புற்று நிற்கிறது. ஊருக்குள் நுழை யாமல், நெடுஞ்சாலையிலிருந்து பிரியும் ஒற் றையடிப் பாதையில் சிறிது தூரம் சென்றால்,







சித்ரா நதிக்கரையை அடையலாம். அங்கே, சித்ரா நதியுடன் ஐந்து தலையருவியாறு கலக்கும் இடத்தில், கீழ்ப்பகுதியில், சோலையும் வயலும் சூழ நிற்கிறது குமரனின் கோயில்.

சித்ரா நதிக்குத் தனிச் சிறப்பு சொல்லப் படுகிறது:

'பணிந்தார்க்கும், நினைந்தார்க்கும், புகழ்ந் தார்க்கும், நீரில் ஒரு துளியா நனைந்தார்க்கும் கதி கொடுக்குமாம் இந்த நதி! முருகனின் பாதங்களைத் தழுவி ஓடும் நதியல்லவா...? அவனுடைய குணங்களும் அதற்கு வந்திருப் பதில் ஆச்சர்யமில்லை.

இலஞ்சிக் குமரன் கோயில் நடுத்தர அளவு உடையது. முன் தலைவாசலில் நுழைந்ததுமே வள்ளிக்குக் காட்சி தந்து தன்னை உணர்த்தியதுபோல் விச்வரூப தரி சனக் கோலத்தில் முருகனைக் காணலாம்.

வெளிப் பிராகாரம் அழகான வனப் பிராகாரமாகவே அமைந்திருக்கிறது. தென்னை, செண்பகம், கொன்றை போன்ற

மரங்கள் ஒரு பக்கம். இன்னொரு பக்கத்தில் மலர்ச் செடிகள், கொடிகள். இந்தப் பிரா காரத்தில்தான் ஸ்தல விருக்ஷமான இலஞ்சி மரம் எனப்படும் மகிழ மரம் இருக்கிறது. இத்தலத்துக்குப் பெயரே ஸ்தல விருக்ஷத்தி னால் ஏற்பட்டதுதான் என்று கூறுவர்.

இலஞ்சி என்ற சொல் 'செல்வம்' என்றும் பொருள்படும். முருகனை 'உமையாள் பயந்த இலஞ்சியமே' என்று அருணகிரிநாதர் பாடி வைத்திருக்கிறார். செல்வக் களஞ்சியமான முருகன் வள்ளியாகிற செல்வத்தை அடைந் தவன்; தன்னை நாடி வரும் அன்பர்களுக்கு அருள் செல்வம், பொருள் செல்வம் மட்டு மின்றி தமிழ்ச் செல்வமும் தர வல்லவன் – இக்காரணங்களால் இலஞ்சி என்ற பெயர் பொருத்தம் பெறுகிறது.

'இலஞ்சி' என்பது குணம், நீர்நிலை, அருள் என்ற அர்த்தங்களிலும் உபயோகிக் கப்படுகிற சொல்.

'இலஞ்சியில் வந்த இலஞ்சிய மென்று இலஞ்சி யமர்ந்த பெருமாளே'

என அருணகிரிநாதர் ஒரே அடியில் மூன்று பொருள்களில் 'இலஞ்சி'யைப் பொருத்துகிறார். சரவணப் பொய்கையில் தோன்றிய செல்வம், இலஞ்சியில் அமர்ந் திருக்கிறதாம்.

மகிழமர நிழலில், மகிழம்பூ மணம் துய்த்து மகிழும் முருகனைப் பார்க்க அடுத்த பிராகாரத்துக்குப் போவோம். முகப்பில் இரு புறமும் விநாயகர், சுப்ரமண்யர். சூரியன் இருக்கிறார்; தெற்குக் கோஷ்டத்தில் தக்ஷிணாமூர்த்தி. ஜ்வரதேவரும் அறுபத்து மூன்று நாயன்மார்களும் திருச்சுற்றில் காணப்படுகிறார்கள்.

கர்ப்பகிருஹம் இரண்டு சந்நிதிகள் கொண்டதாக அமைந்திருக்கிறது. தென் பாகத்திலுள்ள சந்நிதியில் வள்ளி – தேவ சேனா சமேதராக இலஞ்சிக் குமரப் பெரு மான்; வட பாகத்திலுள்ள சன்னிதியில், லிங்க உருவில் 'இருவாலுக நாயகர்' என்று அழைக்கப்படும் ஈசனும் 'இருவாலுக ஈசனுக்கினியாள்' என வழங்கப்படும் அன்னை பராசக்தியும் காணப்படுகின்றனர்.

பார்வதி கல்யாணம் நடந்தபோது உலகமே கைலை மலைக்குத் திரண்டு போய்விட, பூமியில் வடபுறம் உயர்ந்து தென் புறம் தாழ்ந்துவிட்டதாம். நிலைமையைச் சமன் செய்ய தென்திசைக்கு அகத்தியர் அனுப்பப்பட்டார். அவர் இலஞ்சி வந்து, சித்ரா நதிக் கரையில் வெண்மணலைச் சிவலிங்கமாகக் காலையிலும் மாலையிலும் தனித்தனியாகப் பிடித்து வைத்து வழிபட் டார். பின்னர் இரண்டையும் ஒன்றாக்கி னார். அவ்வாறு இரண்டாயிருந்து ஒன்றா னவரே இரு வாலுக நாயகர்!

இரு தேவியருடன் குமரன், அம்மையப் பருக்கு வெகு அருகிலேயே எழுந்தருளியிருக் கும் அரிய காட்சி வேறு எங்கேனும் காணக் கிடைக்குமா என்று தெரியவில்லை.

முருகப் பெருமானைப் பார்ப்போம்...

ஒரு திருமுகம். நான்கு கரங்கள். மயிலின் அருகில் நின்ற கோலத்தில் காட்சி தரு கிறான். வலக்கரங்களில் ஒன்று வரத ஹஸ்தம்; மற்றதில் வேல் இருக்கிறது. இடக்



கரங்களில் ஒன்று அபய ஹஸ்தம்; மற்றதில் குக்குடம் உள்ளது.

'இலங்குதர தமிழ் விளங்கவரு திருஇலஞ்சி மருவிய பெருமாள்'

என்று அருணகிரிநாதர் இவரைத் தமிழ்ப் பெருமாளாகவே பாடி வைத்திருக்கிறார்.


மகிழம்பூ மணத்திலும் வள்ளித் திருமணத்திலும் களித்திருக்கும் இலஞ்சி முருகனுக்கு ஒரு வழக்கு தீர்க்கும் முக்கியப் பொறுப்பும் வந்தது!

காச்யபர், கபிலர், துர்வாஸர் முதலிய முனிவர்களிடையே ஒரு வாக்குவாதம்: அயன், அரி, அரன் ஆகிய மும்மூர்த்திகளில் யார் ஆதிபரம்பொருள் என்ற கருத்து வேறுபாடு. அதற்கு முடிவு சொல்ல ஞான பண்டித சுவாமியைத்தான் வேண்டித் துதித்தனர் அவர்கள். முருகன் அவர்கள்

முன் தோன்றி, தாமே ஆதி பரம்பொருளாகவும் மும்மூர்த்திகளாகவும் இருந்து செயல்படுவதாக உணர்த்தினாராம். மேலும், நற்கதி அடைய விரும்புவோர் பேதம் பேசி தெய்வங்களை எடைபோடாது நம்பிக்கை கொள்ள வேண்டும் என்றும் உணர்த்தினாராம். இதன் காரணமாக வரதராஜப் பெருமாள் என்ற பெயர் இலஞ்சி முருகனுக்கு உண்டு!

விராலி மலைத் திருப்புகழில் இந்த அரிய கருத்தை உணர்த்தியுள்ளார் அருணகிரிநாதர்:

"ஐந்து பூதமும்; ஆறுசமயமும்; மந்த்ர
வேத புராண கலைகளும்; ஐம்பத்தோர்



விதமான லிபிகளும், - வெகுரூப
அண்டராதி சராசரமும், உயர்
புண்டரீகனும்,
மேக நிறவனும், அந்திபோல்
உருவானும்,
நிலவொடு வெயில் காலும்; சந்த்ர
சூரியர்
தாமும், அஜபையும், வித்து நாதமும்
ஏகவடிவம், அதன் சொருப மதாக
உறைவது – சிவயோகம்"

ஆறுமுகப் பெருமானை இவ்வாறு உள்ளத்தில் பரம்பொருளாக உணர்ந்தால் சிவயோகத்தை மேற்கொள்ளலாம். சிவயோகம் நம்மை இரண்டற இறைவனோடு கலக்கச் செய்யும் என்பது இச் சம்பவத்தின் உள் அர்த்தம். இந்த நிகழ்ச்சியைக் குறிக்கும் வகையில், ஐப்பசி மாதம் கந்த சஷ்டியின் போது முருகனே பிரும்மா, விஷ்ணு, ருத்ரன், மகேஸ்வரன், சதாசிவன் கோலங்களில் தரிசனம் தருகிறான்.

முருகனுக்கு உகந்த தினங்கள் மிக விசேஷமாகக் கொண்டாடப்படும் இலஞ்சியில் அவன் உத்ஸவ மூர்தம் சின்னஞ்சிறியதாக, தனி அழகோடு காணப்படுகிறது. இரு தேவியர் துணையிருக்க, கையில் தங்கவேல், வெள்ளி மயில் சகிதம் அவன் வெள்ளிக் குதிரையில் வலம் வருகிற காட்சியைப் பார்க்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

புராணச் சிறப்போடு புராதனச் சிறப்பும் வாய்ந்த கோயில். பதினைந்தாம் நூற்றாண்டில் மாறவர்மன் குலசேகரப் பாண்டியன் திருப்பணி செய்ததாக கல்வெட்டுகள் சொல்கின்றன.

அருணகிரியார் நான்கு திருப்புகழ் பாடல்கள் பாடியுள்ளார். இலஞ்சி முருகன் பேரில். கவிராஜ பண்டாரத்தையா என்பவர் பிள்ளைத் தமிழ் பாடியிருக்கிறார்.

"மேவு துங்க மயூரம் உண்டு நின்
வீர வெம்பகை களையலாம்
வேரி தங்கு திரிகூடம் உண்டுடு
மீனுடன் தனி தவழலாம்
பாவி என்றொரு பேரொழிந்து செய்
பாதகங்களும் ஒழியலாம்
பானலங்கிரி வாவி தங்கிய
பாய் தடம் புனல் படியலாம்
மூவிரண்டு சரோருகங்களின்
மூரல் கண்டுளம் மகிழலாம்
மோனம் ஒன்றுபதேசமுன்செயும்
மூலமந்திரம் அறியலாம்
ஆவினன் குடிமேவு கந்தனோ
டாட அம்புலி வருகவே
ஆழ் இலஞ்சியில் வேளொடின்றினி
தாட அம்புலி வருகவே."

'முருகனின் தீர செம்பொன் மயில் உண்டு; அதனால் பகைவர்களை வென்றிடலாம், தேன்கூடுகள் நிறைந்த திரிகூட மலை உண்டு. ஆதலால், நட்சத்திரங்களுடன் தவழலாம்; பாவி என்ற பேரை ஒழித்து, செய்த பாதகங்களை ஒழிக்கலாம், நதி நீரில் அமிழ்ந்து நீராடலாம், ஆறுமுகங்களின் புன்சிரிப்பைக் கண்டு உளம் மகிழலாம், பிரணவ உபதேசம் பெறலாம். ஆகையால் அம்புலியே ஆவினன்குடி மேவு கந்தனுடன் ஆடவா, இலஞ்சிப் பதியின் குமரனோடு ஆடவா!' என்று அழைக்கிறார் கவிஞர்.

அம்புலியே ஓடி வருகிறான் என்றால் நாமும் இலஞ்சிக்கு ஓட வேண்டியதுதானே!



Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 165/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2002 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka

ARTHRITIS / மூட்டுவலி

1. OSTEO ARTHRITIS
2. RHEUMATOID ARTHRITIS
3. ANKYLOSING SPONDYLITIS
4. GOUT

* கை, கால்களில் மூட்டு வீக்கமும், வலியும். * கை, கால் விரல் மூட்டுகளில் வீக்கமும் வலியும். * கழுத்து வலி (Cervical Spondylitis) * நடுமுதுகின் கீழ்பகுதியில் வலி (Lumbar vertebra and Sacral Joint area) * இடுப்பு எலும்பும் (Pelvis Bone) தொடை எலும்பு தலையும் (Femural Head) சேருமிடம். * குதிகால் இணைப்புகளில் வலி. * குதிகால்களில் எலும்பு வளர்ந்து நடக்க முடியாமல் வலி. (Calcaneal Spur)

I am a Rheumatoid Arthritis patient. After getting treatment at your centre my pain & swelling reduced by 70%.

The Doctor & staffs took personal care for my improvement. I thank the Institution & I am now fully satisfied.

Mrs. Sivagami Vaidhyanathan, (60years)
7/9, Shankara Apts, Jyothy Nagar,
5th Street, Chittalapakkam,
Chennai - 64. Ph: 223 7321

முதலியவை பல ஆண்டுகளாக இருந்தாலும் ஆங்கில மருத்துவருடைய ஆலோசனையின்படி வித்தியாசமான இயற்கை வைத்திய முறையில், பக்கவிளைவுகள் இல்லாமல் நலம்பெற செய்கின்றோம்.

மேலும் நகரங்களில் நாம் சுவாசிக்கும் காற்று மிகவும் மாசுபட்டு இருப்பதால், தினமும் பிராணவாயு (Oxygen) தரப்படுகிறது. சென்னை, பம்பாய், டெல்லி மற்றும் வெளிநாட்டில் இருந்தும், தாங்கமுடியாத மூட்டுவலியுடனும், வீக்கத்துடனும் தசை பிடிப்புடன் நடக்க முடியாமல் சிரமப்பட்ட வர்களும், காலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்க முடியாமல் சிரமப்பட்டவர்களும், எங்களிடம் நல்ல விதமாக சிகிச்சை பெற்று மகிழ்ச்சியுடன் சென்று இருக்கின்றார்கள். மற்ற விபரங்களுக்கு நேரில் வந்து பார்த்தால்தான் நாங்கள் கொடுக்கும் சிகிச்சையின் தன்மை புரியும்.

I have taken 15 days treatment at "ADYAR NATURE CURE CENTER" for knee joints pain, shoulder joints pain & low back pain. Now I am relieved from all my pains completely. I have been advised above to follow diet control.

Mr. Rudhtra (51 years)
Adyar, Chennai - 20.
Ph: 441 9536

ஆர்த்ரிடிஸ் பற்றியும் - மற்றும் அதற்கு ஏற்ற உணவுப் பழக்கம் பற்றியும் தெரிந்து கொள்ள விரும்புபவர்கள் நேரில் வந்து குறிப்பு புத்தகங்களை இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு: வெளியூரில் இருந்து வருபவர்களுக்கு, குறைந்த செலவில் தங்க, சாதா மற்றும் ஏர்கண்டிஷன் ரூம்கள் வாடகைக்கு எங்கள் ஆஸ்பத்திரியில் கிடைக்கும். இதற்கு முன் பதிவு செய்து கொள்ள வேண்டும். சைவ உணவு வசதி மட்டும் உண்டு. வியாதியஸ்தர்களுக்கு தேவைப் பட்ட மாற்று உணவுகளும் வழங்கப்படும் என்பதையும் அறியவும்.

அடையார் நேச்சர் கியூர் சென்டர்

ADYAR NATURE CURE CENTER (Reg.No.10/40)

No. 6, SECOND CROSS STREET, KASTURBHA NAGAR, ADYAR, CHENNAI - 20.
Phone:4413399, 4402470. Tele Fax: 044-4916650 (சாஸ்திரிநகர் பஸ்டெப்போ எதிரில்)